# தொண்டன்

ஆரம்பம்: பெப்ரவரி 1969.



கிறிஸ்து பிறப்பு விழாச் சிறப்பிதழ்

டிசம்பர் - ஜனவரி - 1992 - 1993.

10/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கி

உங்கள் நிதித் தேவை எதுவானாலும்
கைகொடுக்கும் உற்ற நண்பன்
தேசத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும்
பணியின் 30 ஆண்டுகள் சீரியசேவை,
நாடெங்கிலும் 300 க்கு மேற்பட்ட கிளைகள்
உள்நாட்டு வெளிநாட்டு வங்கிச் சேவைகள்.

தங்கள் பணத்தைப் பாதுகாப்பாக வைப்பிலிடவும்
வியாபாரம், விவசாயம், அபிவிருத்தி,
கைத்தொழில் கடன் வசதிகள்
எவையானாலும் கைகொடுக்கும் நிதிஸ்தாபனம்

மக்கள் சேவையின் முன்னோடி.

# மக்கள் வங்கி

மேலதிக விபரங்கட்கு அருகிலுள்ள எமது கிளை
முகாமையாளரை நாடவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

டிசம்பர் - ஜனவரி — 1992 - 93

மலர்: 24 இதழ்: 10

ஆசிரியர்:

கிங்ஸ்லி றொபட்

இணை ஆசிரியர்:

மலர்வேந்தன்

துணை ஆசிரியர்கள்:

எஸ். லோகநாதன்
கண. மகேஸ்வரன்
பி. ஜோசப்
F. X. டயஸ்

ANTHONY JEBYA
51, MAHINDA PLACE,
COLOMBO-6.

வெளியீடு:

சமூகத்தொடர்பு நிலையம்
திரு/மட். மறை மாவட்டம்

தொடர்பு:

சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண்: 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE,
P. O. Box - 44,
BATTICALOA.

விலை:

தனிப்பிரதி ரூபா: 10/-
ஆண்டு சந்தா ரூபா: 70/-



## உள்ளே......

1) எமது குரல்— 2
2) ஆத்மாவின் இராகங்கள்... 3
3) கிறிஸ்து பிறப்பும்.... 4
4) இனிய நத்தார்— 6
5) இளந்தளிர்... 7
6) பிஞ்சு முகம்... 8
7) கத்தோலிக்க மிஷன்... 10
8) இயேசு வழி வாழ.... 12
9) மீண்டும் ஒரு விடியலை... 14
10) ஒரு கேள்வி - ஒரு பதில்... 18
11) மறைமாவட்டச் செய்தி— 20
12) வெள்ளி விழாவை... 24
13) சர்வதேச இளம்... 25
14) அமலா உனக்காக.... 27
15) போட்டி... 30
16) பாலன் வரமாட்டான்... 31
17) ஏழ்மையும் வறுமைத்.... 32
18) 125வது ஆண்டு நிறைவு... 34
19) இலக்கிய மஞ்சரி... 36
20) மரியாள் ஒரு புரியாத... 38
21) தமிழ் மணியான... 40
22) உணர்வுகளும்.... 44
23) இறைவன் சிலையானார்... 47
24) அருள்தந்தை.... 50
25) சுடுகாட்டை.... 51
26) விவிலியப் புதிர்... 55
27) உங்கள் பக்கம்... 57
28) காற்றில் கலந்து வரும்... 58

# எமது குரல்

வாழ்க்கை சுமையானது. தான்
அதிலும் இன்று வாழ்க்கை சுமை நிறைந்தது மட்டுமல்ல
அச்சம், அவலம், ஆபத்து, பயங்கரம் நிறைந்தது.
இனிமையான கடந்த காலங்கள் கரைந்துவிட்டன.
இருக்கின்ற நிகழ்காலமோ விரட்டிக் கொண்டிருக்கிறது.
வருகின்ற எதிர்காலம் 'எப்படியோ' என்ற பெருமூச்சோடு வினா எழுப்புகிறது.
ஆயினும், கடவுளின் கரம் நம்மோடு உள்ளது.
அவரது பராமரிப்பு என்றும் நம்மை விட்டு நீங்குவதில்லை.
இதன் நிச்சயமான அடையாளமாகவே
'நமக்கொரு பாலன் பிறந்துள்ளார்'
மானுடத்தின் நம்பிக்கையும் இறைவனின் அன்பும்
கை கோர்த்த இடம் கிறிஸ்துவின் பிறப்பு.
இரண்டு சக்திகளும் இணையும்போது அங்கு மீட்புச்
செயல் இயக்கம் பெறுகிறது.
நமது மக்கள் இன்று பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகி உள்ளனர்.
நீண்ட பாதையிலே நிம்மதிக் கனவுகளைச் சுமந்து நடந்து வந்துள்ளனர்;
மனிதனது சுயநலன்களும், பதவி ஆசைகளும், பகை
உணர்வும், சந்தேகமும், குரோதமும்
கனவுகளைக் கனவுகளாகவே வைத்துள்ளன.
இந்த நவீன ஏரோதுக்கள் மீட்பரின் - மீட்பின்
எதிரிகள்; இவர்கள் என்றுமே நிரந்தரமான வெற்றிகளைக் கண்டதில்லை.
இருண்ட மேகங்கள் எழும் கதிரோனை எத்துணை நேரந்தான் மறைக்க முடியும்?
ஆற்றல் மிக்க இறைவனின் பேரொளி
புதிய விடியலுக்கு பூபாளம் இசைக்கும்.
அந்த அசையா நம்பிக்கையோடு
இதயச் சாளரங்களைத் திறந்து வைப்போம்.
இறை ஒளி பரவட்டும்!
மனித நேயச் செயல்களில் ஈடுபடுவோம்!
நமக்குள் மீட்பர் - மீட்பு பிறக்கட்டும்!
அனைவருக்கும் நம்பிக்கையோடு கூடிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

**இணை ஆசிரியர்**




இதோ! மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று தாவீதின் ஊரிலே உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார்

*லூக் 2/10 - 11*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மாவின் ராகங்கள் பாடட்டும் கீதம்



பனிதூங்கும் மார்கழியின் நள்ளிரவு நேரம்.
நனிதுயிலோ ஆயர்களின் விழியிரண்டின் ஓரம்.
வான்வெளியின் எல்லைவரை விண்மீன்கள் ஆரம்.
வானிலொரு புதுவெள்ளி தோன்றியதந் நேரம்.

ஆனிரைகள் தொழுவத்தில் அணையாத தீபம்
ஊனுருவாய் வந்தநெஞ்சில் மீட்பென்னும் தாகம்
பனிமலர்கள் தூவினவே பன்னீரின் சாரம்.
கனியீந்தாள் மகிழ்வுக்கோ அங்கேது தீரம்.

மானிடனாய் வந்துதித்தான் வானகத்தின் ஆதி
மானிடரை மீட்கவென எழுந்ததந்தச் சோதி
தேன்கலந்த சொல்லெடுத்துப் பாடிடுவோம் வாழ்த்தி
ஊனுருகக் கரங்குவிப்போம் நமதுசிரம் தாழ்த்தி.

வானவர்கள் பாடிநின்றார் சாந்தியெனும் வேதம்
நானிலத்தோர் நெஞ்சமெலாம் அன்புஎனும் நாதம்
சாத்வீகம் மலர்ந்திங்கு மடியட்டும் பேதம்
ஆத்மாவின் ராகங்கள் பாடட்டும் கீதம்.

— இ. ம. ஜெகதீசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து பிறப்பும்

# கிறிஸ்மஸ் பிறப்பும்



முதலாவது நற்செய்தி நூலும், இறுதியானதுமான மாற்கு,யோவான் எழுதிய செய்திகளில் யேசுவின் பிறப்பு பற்றிய தரவுகள் எதுவும் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. மத்தேயுவும், லூக்காவும் மாற்குவிற்கு புறம்பான பாரம் பரியங்கள் அல்லது மரபுகளிலிருந்து இத்தரவுகளைப் பெற்றிருக்கலாம் என நம்பப்படுகிறது. ஏனெனில் தங்கள் நற்செய்தி நூல்களின் பெரும்பான்மையான பொருளடக்கத்தையும் கட்டமைப்பையும் கூட மாற்குவிடமிருந்தே பெற்றுக்கொள்ளும் இவ்விருவரிடமும் உள்ள யேசுப் பிறப்புப் பற்றிய தரவு மாற்குவிடம் இல்லாமை மேற்குறிப்பிட்ட துணிபுக்கு சான்றாய் அமைகிறது.

இது மட்டுமன்றி மாற்கு நற்செய்தி நூல் உரோமை நகரில் எழுதப்பட்ட காலத்தில், இன்று முழு உலகமும் கிறிஸ்து பிறப்புத்தினமென்று கொண்டாடும் அதே மார்கழி 25ம் திகதி அங்கு, ''விஜய' சூரியன் விழா'' என சூரியனின் பிறந்த நாளைக்குறிக்கும் பெருவிழா எடுக்கப்பட்டது. இவ்விழா சகலராலும் அனுசரிக்கப்படவேண்டிய கட்டாயத்தேசிய திருவிழா எனவும் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. மகர ரேகையிலிருந்து கற்கடக ரேகையை நோக்கிச் செல்லும் சூரிய யாத்திரையின் முதல் தினமாகிய அன்றைய தினமே சூரியனின் பிறந்த நாள் விழாவாக உரோமைப் பண்பாட்டுப் பராம்பரியத்தினால் கணிக்கப்பட்டது. இதில் அவதானிக்கப்படத்தகுதியான விடையமொன்றென்னவெனில் பண்டைய மேற்கு ஆசியாவில் இத்தினம் தை 6ம் திகதியிலும்; இந்தியாவில் பஞ்சாங்கத்தில் தை 14ம் திகதியிலும் கணிக்கப்பட்டது. இத்தினங்களில் பாரசீகம் போன்ற நாடுகளில் சூரியக் கடவுளான மித்திரனின் பிறந்த தினமும் இந்தியாவில் மகரச் சங்கிரந்தி அல்லது தைப்பொங்கல் தினமும் கொண்டாடப்பட்டன.

ஆகவே நாடு முழுவதிலும் சூரியனுக்கு அல்லது இன்னுமொரு தெய்வத்திற்கு விழா எடுக்கப்பட்ட அன்றைய தினம் நிச்சயமாக ஆதித்திருச்சபையில் கிறிஸ்து பிறப்பின் விழா கொண்டாடப்பட்டிருக்க மாட்டாது எனத் துணிந்து கூறலாம்.

அதுமட்டுமன்றி இறைமகன் யேசுவின் வாழ்க்கை பாடுகள், மரணம், உயிர்ப்புக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் அவரது பிறப்புக்கு ஆதித்திருச்சபையில் அளிக்கப்படவில்லை என்பதே உண்மையாகும். அவரது வீரமரணத்தையும் உயிர்ப்பையும் நினைவு கூரும் நாட்களை உடனேயே கணித்து விட்ட திருச்சபை மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்னரேயே அவரது பிறப்புக்கு நாளைக் கணித்தது. அக்காலத்தில் ஏறத்தாழ வழக்கொழிந்து அருகி, அற்றுப் போய் விட்ட அந்த மேற்குறிப்பிட்ட அந்தச் ''சூரியனின் விழாவை'' மீள உயிர்பெறச் செய்து உயிரற்ற படைப்புப் பொருளான சூரியனின் விழாவாக அல்ல; ஆன்மீக இருளில் மூழ்கிக் கிடந்த உலகினை நித்தியத்திற்கும் ஒளிர்விக்க வந்த திவ்விய ஆதவன் இறைமகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேசுவின் பிறப்பை நினைவு கூரும் விழாவாகக் கிறிஸ்தவ உலகுக்கு அறிமுகப்படுத்தியது.

இதைத் தவிர மார்கழிக்கும், யேசு பிறப்பிற்கும் சம்பந்தமே இல்லை. அவரது பிறப்பின் நாளும், நேரமும், மாதமும் நற்செய்திகளிற் கூறப்படுவது போல (சித்திரை 15 வெள்ளி) பிறப்பைப் பற்றிய தகவல்கள் கிடையாது. அது மட்டுமன்றி மத்தேயு, லூக்கா இருவரது விபரங்களையும் ஒப்பிட்டு நோக்கும் போது அவை எவ்வளவு வேறுபாடுகள் உள்ளவை என்பதும் ஒன்றோடு மற்றது இணைக்கப்பட முடியாதபடி தனித்தன்மையானவை என்பதும் புரியும். அது மட்டுமன்றி கிறிஸ்து பிறப்பு நிகழ்ச்சிகள் இரண்டு, மூன்று வருடங்கள் நடந்த தனி நிகழ்ச்சிகளின் இரு வேறு பாரம்பரியங்களின் தொகுப்பு என்பதும் விளங்கும். இன்று நமது திருநாட்களின்படி நாற்பது நாட்களுக்குள் கிறிஸ்து பிறப்புக் காலத்தின் நிகழ்ச்சிகள் அத்தனையையும் கொண்டாடி முடித்து விடுகிறோம். ஆனால் ஜனவரி 6ம் திகதி கொண்டாடப்படும் திருக்காட்சி விழா (3 ஞானிகள் வருகை) பிறந்து 6 நாட்களுக்குப் பின் அல்லமாறாக அதற்கு அடுத்த ஒன்று அல்லது இரண்டு வருடங்களில் நடைபெற்றிருக்க வேண்டும் என்பது ஏரோதின் கொலைக் கட்டளையிலிருந்து புலனாகிறதல்லவா?

4ம்நூற்றாண்டில் திருச்சபையில் நேர்ந்த பிளவின் காரணமாக கீழைத்தேசநேர்வழித் திருச்சபைகள், லத்தீன் திருச்சபை எனப் பிளவு உண்டானது. அக்காலத்திலிருந்து உரோம ஆதிக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு கிரேக்க பாரம்பரியத்தை பின்பற்றிய நேர்வழித் திருச்சபைகள் பாரசீகப் பாரம்பரியத்தின் 6ம் திகதியைக் கிறிஸ்து பிறப்புத் தினமாக ஏற்றுக் கொண்டன.

இயேசு பிறந்தது உண்மையே. இல்லாவிட்டால் அவரது வாழ்வு மரணம், உயிர்ப்பு எல்லாமே வெறும் மாயைதான். அவர்பிறப்பை நாம் கொண்டாடுவது முறையே ஆனால் அவர் பிறந்த தினத்தன்றே அதனைக் கொண்டாடுகிறோம் என்றோ அல்லது இக் கொண்டாட்டங்களின் போது உபயோகிக்கப்படும் அடையாளங்கள், சின்னங்கள். பாரம்பரியங்கள் எல்லாம் திருமறையோடு ஒட்டியவை திவ்வியமானவை புனிதமானவை இன்றியமையாதவை என்னும் பிழையான அபிப்பிராயங்களில் இருந்து நாம் விடுபடல் வேண்டும். பசுமாட்டுத் தொழுவம், கி. பி. 12ம் நூற்றாண்டில் புனித பிரான்சிஸ்கு அசிசியார் இயேசுவின் ஏழ்மையை எடுத்துக் காட்ட அறிமுகப்படுத்திய அழகான அடையாளச் சின்னம். நத்தார் காலத்தில் எல்லா இடங்களிலும் பளிச்சிடும் வர்ணவிளக்குகள் கொண்ட நத்தார் விருட்சம் பூர்வீகமர வழிபாட்டின் சின்னம். பட்சணங்களும், பட்டாடைகளும், படாடோபமும் பதித சூரிய வழிபாட்டின் மரபுவழி உரிமைகள் என்பதை உணர்ந்து கொள்வோம். அவை இருந்தாலும் இல்லாவிட்டாலும் கிறிஸ்து பிறப்பு உண்டு.

> புகழ் பெற்ற பிரெஞ்சு நாவலாசிரியர் விக்டர் ஹியூகோ தன் உடைகளைத் திருடிக்கொண்டு போய்விடுமாறு தன் வேலைக்காரனைக் கேட்டுக் கொள்வாராம் வெளியே செல்லாமல் எழுதுவதற்கே இந்த ஏற்பாடாம்

சத்திரத்தில் இடமின்றி முன்னிட்டியிற் கிடத்தப்பட்ட அக்குழந்தை; உயிருக்கு தக்க பாதுகாப்பின்றி அகதிப் பெற்றோரோடு தானும் அகதியாய் நாடுவிட்டு நாடு அலைந்த அக்குழந்தை, பலங்களுக்கிடையே அகப்பட்டுப் பல பக்கத்தாலும் நசுக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்த அக்குழந்தை, அதே நிலையில் ஏன் அதைவிட மிக அவலமான நிலையில் இன்று வாழும் எண்ணற்ற மக்களின் ஏக பிரதிநிதியாய் நம்மைப் பார்த்துக் கேட்கும் கேள்விகளைப் புரிந்து கொண்டு அவற்றிற்குப் பொருத்தமான பதில் அளித்து விட்டு கிறிஸ்து பிறப்பைக் கொண்டாடுவோம்!

**அருள்திரு. றெக்ஸ் ஜோசப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனிய நத்தார்

★ செல்வி நா. தர்ஷினி

இருண்ட வானத்து
இம்மைத் துயர்கள்
நீங்க......
சண்டை சச்சரவுகள்
சவமாக்கும்
பேயாட்டக்
குண்டுப் பறவைகளின்
குவலயச் சிறகடிப்பு
இரத்த வெள்ளங்கள்
எங்கணும்
எலும்புக் கூடுகள்
பற்றிப் பிடிக்கும்
பயப்பீதிகள் மறைய
பட்டாளங்கள்
இந்தப் பாருலகில்
போரிடாமல்
அன்பும் சாந்தமும்
சமாதானமும்
ஐக்கியமும் தருவதாக
பிறந்து வா எங்கள்
இனிய நத்தாரே

# தேடலும்

★ கிறிஸ்டி முருகுப்பிள்ளை

2

ஐயா... கிறீஸ்தவன் என்றாலே கல்வியில் நிகரில்லாதவன் என்ற எதிர்பார்ப்பு எங்கணுமுண்டு. கல்வியில் பின் தங்கி... காலவோட்டத்தின் வளர்ச்சியில் எட்டிப் பார்க்கக் கூட முடியாமல் அடிமட்டத்தில் வாழும் எமது மக்களை எண்ணிப் பார்த்தீர்களா? கற்பிக்க வந்தவர்கள் மண்ணையும் நீர் வளத்தையும் கண்டு சொக்கிப் போய் எண் எழுத்து பயிற்ற மறந்து தம் எண்ணங்களில் பணம் நிரப்பிப் போனதை மறந்தீர்களா?

கல்வியின் கருந்தனத்தை விளக்கி புதிய சமுதாயம் படைக்கப் புறப்பட்ட புது வசந்தங்களின் மீது ஏனையா எரிச்சல் ..? குமைச்சல்...? காலம் காலமாக ஞாலம் தன்னை ஏமாற்றி வாழ்ந்தது எகிறிப்போய் விடும் என்ற பயமா? புது வசந்தத்தின் வேகத்தைத் திசை திருப்ப ''வந்தான் வரத்தான்,, என்ற பட்டம் ஏனையா...?

நீங்கள் சமுதாயத்தின் நோயல்லவா? அந்த நோய் தீர்க்க அடுத்த சமுதாயம் காத்திருக்கிறது. இனியும் 'வந்தான் வரத்தான், கதை வேண்டாம். செய்ய முயலுங்கள்... முடியா விட்டால் விலகி நில்லுங்கள்... புதிய சமுதாயத்தின் புயலொத்த மாற்றத்தை... ஏற்றத்தை தடுக்க புதிய யுக்திகள் புனையாதீர்கள்... சமுதாய வளர்ச்சியை முன்னெடுப்பவர்ளுக்கு உதவுங்கள்...... முடியா விட்டால் சற்று... எட்டி நில்லுங்கள்... ஊருக்கு அதுவே நல்லது.

# சாடலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளந்தளிர்

விழாக்கள் இறை - மனித உறவுகளை வலுப்படுத்துகின்ற வகையிலே கொண்டாடப்பட வேண்டும். இன்று நமது ஆலயங்களிலெல்லாம் பல விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. ஆனால் இவ் விழாக்கள் எல்லாம் எந்த அளவுக்கு மனித வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்துகின்றன என்பது கேள்விக்குறியாக உள்ளது.

பொதுவாக விழாக்களை பார்க்குமிடத்து இன்றைய கால சூழ்நிலையில் நாம் எடுக்கின்ற கிறீஸ்தவ விழாக்கள் கூட மலட்டுச் சடங்குகளாக மாறி, மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கும், விழாக்களுக்கும் இடையில் பெரிய இடைவெளியை ஏற்படுத்தி விட்டதா என்ற ஐயப்பாட்டைப் பலர் உள்ளத்தில் தோற்றுவித்துள்ளது.

மார்கழிமாதம் கிறீஸ்து பிறப்பு விழா வருகின்றது. நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதை ஒரு சிறு பிள்ளைகூட இலகுவாகச் சொல்லும்.

புத்தம் புதுஆடைகள், உணவு வகைகள், களியாட்டங்கள், ஒளிவிழாக்கள், நடு இரவுத் திருப்பலி இவைகள் ஆண்டாண்டு தோறும் நடைபெறும் நிகழ்ச்சிகள். இவைகள் நல்லதுதான், ஆனால் எந்த அளவுக்கு இறை-மனித உறவுகளை வலுப்படுத்துகின்றன என்பது ஒரு கேள்விக்குறியாக உள்ளது.

உண்மையான விழாக்கள் என்றால் வர்க்க பேதங்களின் வேதனை அழித்து எல்லோரும் ''ஓர் இனம், எல்லோரும் ஒரு குலம்'' ஆக வேண்டும் என்ற சமதர்ம ஏக்கங்களின் பிரதிபலிப்பை உண்டாக்க வேண்டும்.

இது உண்மைதான். கிறிஸ்மஸ் விழா தரும் நற்செய்தி கூட இறைவன் இவ்வுலகின் வரலாற்றில் நுழைந்து விட்டார். அநீதியும், ஆணவமும், வறுமையும், அடிமைத்தனமும் நிறைந்த இவ்வுலகிற்கு மீட்பும், விடுதலையும், சமாதானமும் அளிக்கப் பிறந்து விட்டார். இதனால் உலகமும், மனித சமுதாயமும் புதுப் பொருளைப் பெறுகின்றது என்பதைத்தான் அறிவிக்கிறது.

இங்கு ஓர் இனம், ஒரு குலம் கொண்ட இறையரசு படைக்கப்பட வேண்டும் என்பதுதான் இறைவனின் ஆசை என வெளிப்படுத்தப்படுகின்றது.

''வரலாற்றின் தவறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள அஞ்சுபவர்கள் அந்த வரலாற்றின் தவறுகளை மீண்டும் மீண்டும் செய்யும் தண்டனைக்கு ஆளாகிறார்கள்'' என்றார் யோன்கெனடி.

பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற கருத்துக்கிணங்க விழாக்களும் வழிபாடுகளும் - மக்களின் அன்றாட அனுபவங்களும் மோதி ஒன்றாகக் கலந்து, செயலாக்கம் பெற்றுப் புது உணர்வையும், புதுத்தெளிவையும் கொடுக்கும் போதுதான் அங்கு விழாக்களின் அர்த்தமும், அதன் பொருளும், அது மக்களின் பிரச்சினைகளோடு கொண்டிருக்கும் தொடர்பும் புலனாகும்.

ஆகவே இந்நாட்களில் கொண்டாடப்படும் கிறிஸ்மஸ் விழாவும் இக் கருத்துக்களுக்கேற்ப அமைந்தால் இது பயனுள்ள, பொருளுள்ள, அர்த்தம் நிறைந்த விழாவாக மாறும். இல்லையேல் இயேசுவின் பிறப்பு இன்னும் நடைபெறாத நிகழ்வாகப் பொருளற்ற களியாட்டமாகவே அமையும்.

F.X டயஸ்

---

தன் இளமைக் காலத்தில் டப்ளின் நகரின் ஒரு ஜமின் தாரிடம் மாதம் 18 ஷில்லாங் ஊதியம் பெற்ற கிளார்க்காக இருந்தவர் அறிஞர் பெர்னாடுஷா.

---

அண்டார்டிக் தீப கற்பத்தின் வடகிழக்கு முனைக்கு 30மைல் தூரத்தில் உள்ளது மலட்டுத்தீவு. இங்கு மரம், செடிகொடி, பனிப்பாறை எதையும் பார்க்க முடியாத காரணத்தால் இதற்கு மலட்டுத்தீவு என்ற பெயர் சூட்டப்படுகிறது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சு முகம் உணர்த்திய உண்மைகள்

அந்த வெள்ளைக்காரப் படைப்பிரிவின் தலைமை அதிகாரி 'ஜேம்ஸ்' தனது கூடார முகாமில் 'அரிக்கன்' விளக்கு வெளிச்சத்தில் அக்கடிதத்தை அமைதியாகப் படித்துக் கொண்டிருந்தார். அவரின் சிறுமகள் தாய்நாட்டில் இருந்து எழுதியிருந்தாள்:

''அன்புள்ள அப்பா, நானும் அம்மாவும் சுகம்; இன்னும் இரண்டுவாரங்களில் எனக்குப் பாடசாலையில் நத்தார்லீவு விட்டுவிடும். லீவில் எனக்குப் பொழுது போகாது.'வீடியோ' பார்த்து அலுத்துவிடும். எனவே இம்முறை நத்தார் அன்று நீங்கள் இங்கு நிற்கவேண்டும். இனி அந்த கறுப்பர்கள் நாட்டில் நீங்கள் இருக்கவேண்டாம்; படையில் வேலை செய்யவும் வேண்டாம்; பேசாமல் வந்து நமது பண்ணையைப் பார்த்துக் கொண்டு இருங்கள், நத்தாருக்கு அந்த நாட்டில் இருந்து பரிசு கொண்டுவாருங்கள்.

அன்புடன் மகள்
எலினா.

ஜேம்ஸ் அந்தக்கடிதத்தை வாசித்துமுடித்தபின் பெருமூச்சொன்றை உதிர்த்தார். அவர் கடமையின் பொருட்டு, தாய்நாட்டைவிட்டு இந்த குடியேற்றநாட்டுக்கு வந்து ஆண்டுகள் நான்காகிவிட்டன. மனைவியையும், ஒரே மகளையும் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவரிடம் நிரம்பவே இருந்தது. அவர் நாட்டை விட்டு வரும்போது மகள் 'எலினா'வுக்கு வயது ஒன்பது. அவருக்கு லீவுதான் இல்லை. அவர் திறமையான அதிகாரி என்பதால் லீவில் அனுப்ப உயர் அதிகாரிகள் தயாராக இல்லை. இம்முறை எப்படியும் ஊருக்குப் போக வேண்டும் என்று எண்ணிய படி அவர் அப்படியே கண்ணயர்ந்துவிட்டார்.



சற்றுத்தொலைவில் குண்டுகள் வெடிக்கும் சத்தமும், துப்பாக்கிகள் முழங்கும் சத்தங்களும் திடீரென கேட்கத்தொடங்கின. ஜேம்ஸ் திடுக்கிட்டு எழுந்து கைக்கடிகாரத்தைப் பார்த்தார். அதிகாலையாகிவிட்டிருந்தது. 'வயலெஸ்' கருவியில் தொடர்புகொண்டபோது, அவரது முகாமிற்கு தெற்கே நான்கு மைல் தொலைவில் இருந்த காவலரண்களை 'கெரில்லாகிளர்ச்சியாளர்கள்' தாக்குவதாக செய்திகிடைத்தது. உடனே விமானப்படைத்தளத்திற்கு உத்தரவுகளைப்பிறப்பித்தார். சிறிது நேரத்தின் பின் சிறு யுத்த விமானங்கள். சண்டை உக்கிரமாக நடந்தது. பல படைவீரர்கள் கொல்லப்பட்டுவிட்டதாக தகவல் வந்ததும் அவர் மிகவும் சினமும், வேதனையும் அடைந்தார்.

மறுநாள் பொழுது நன்றாகப்புலர்ந்த பின்பே சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அவரால் செல்லமுடிந்தது. அந்தக்கிராமம் அப்படியே அழிந்துபோய்விட்டிருந்தது. எல்லாப் பக்கங்களும் இடிந்த வீடுகளும், சிதைந்த சடலங்களுமாய்க் கிடந்தன. அப்போதுதான் அந்த எதிர்பாராத சம்பவம் இடம்பெற்றது. ஓர் இடிந்தவீட்டுக்குள் இருந்து திடீரென உருவமொன்று வெளிப்பட்டது. போராளி தாக்கவருகிறான் என எண்ணி கைத்துப்பாக்கியால் சட்டென்று சுட்டுவிட்டார். அவ்வுருவம் சுருண்டுவிழுந்தது. அண்மையில் சென்று பார்த்த போதுதான் அவரின் இதயம் உருகியது. அது ஓர் இளம் தாய்; அவளின் அணைப்பில் சின்னஞ் சிறுபாலகன் ஒருவன். தாயின் உயிர் பிரிந்து விட்டிருந்தது; அச்சிசு அழுதுகொண்டிருந்தது. 'ஜேம்ஸின்' இதயத்தில் பலத்தவேதனையும், குற்றஉணர்ச்சியும் உண்டாயிற்று. அவரின்மனைவியும் மகளும் கண்முன் தோன்றினர். குழந்தையை உற்று நோக்கினார். கன்னங்கரிய உடல்; சுருண்ட முடிகள்; ஒளிவீசும் கண்கள். அக்குழந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

தையை கைகளில்வாரி எடுத்துக் கொண்டார். வெள்ளை நிறமான அவர்கைகளில் கரிக் கட்டைத்துண்டு போல் அது கிடந்தது.

கறுப்பர்கள் என்றால் ஓர் அருவருப்புணர்ச்சி அவரிடம் நிறைய இருந்தது. ஜேம்ஸ் கல்லூரியில் மிகவும் கெட்டிக்காரர். என்றாலும் கறுப்பின மாணவன் ஒருவன் அவருடன் கடும்போட்டி. அவன் பரீட்சைகளிலும், விளையாட்டுக்களிலும் ஒரு புள்ளியிலாவது முன்னணியில் நின்று பல விருதுகளைத் தட்டிக் கொண்டு சென்றுவிடுவான். இச் சம்பவங்களும் கறுப்பர்கள் மீதான வெறுப்பை அதிகரிக்கச் செய்தது. இதைவிட கறுப்பர்களால், அவரது வெள்ளைவீரர்கள் சண்டையில் சாவது வெறுப்பை இன்னும் கூட்டியது. இன்றோ அவர்கைகளில் கறுப்புக் குழந்தை.

'இக்குழந்தையை என்ன செய்வது? சுட்டுவிடுவதா...? பெற்றோர் அற்ற இக் குழந்தை என்ன செய்யப் போகிறது? அதுவும் கறுப்பின வாரிசு...' என்றெல்லாம் சிந்தித்த ஜேம்ஸ் தீர்க்கமான ஒரு முடிவுக்குவந்தார். அவரின் ஒருகை துப்பாக்கியை இறுகப்பிடித்தது, அவரின் முகத்தில் 'டிசம்பர்' மாத ஊதல்காற்று ஊசியாய்க்குத்தியது. மனதில் அவர் எடுத்தமுடிவு இன்னும் இறுக்கமாயிற்று.

நத்தார் லீவுக்கு விண்ணப்பித்த ஜேம்ஸுக்கு சொந்த நாட்டிற்கே இடமாற்றம் கிடைத்தது சந்தோசமான ஆச்சரியமாய் இருந்தது. வீட்டுக்கு செய்தியனுப்பாமலே திடீரென சென்று இறங்குவது எனமுடிவு செய்து கொண்டார். அன்று, டிசம்பர் இருபத்திநான்காம் திகதி இரவு பத்துமணியளவில் சொந்த நாட்டுமண்ணில் வந்திறங்கினார். வீடு சென்று அழைப்புமணியை அடித்த போது இரவு மணி பதினொன்று. கதவைத் திறந்த எலினாவுக்கு பயங்கர இன்ப அதிர்ச்சி, தந்தையைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டாள். ''என்னமாய் வளர்ந்து விட்டாள்'' என்று எண்ணியபடி கையில் இருந்த நத்தார்பரிசை மகளிடம் கொடுத்தார் ஆவலோடு வாங்கிய எலினா, மிகவும் அதிர்ச்சியோடும், ஆச்சரியத்தோடும் தந்தையின் முகத்தை ஏறிட்டு நோக்கினாள். அவள் முகத்தில் பல வினாக்கள், 'ஏன்...? எதற்கு...? எப்படி...? எங்கிருந்து...?' என்றவாறு பல வினாப்பார்வைகள். அவள் கையில் இருந்த அந்தப்பரிசு மெதுவாகக் குளிரில் சிணுங்கியது. அது அந்தக் கறுத்தக்குழந்தை.

''இனிமேல் இது உன் சகோதரன்...'' என்று ஜேம்ஸ் மகளிடம் கூறினார்.

''அப்பா இது கறுத்தக் குழந்தை... எப்படி... நமக்கு சரிப்பட்டு வரும்?'' என்று அவள் தகப்பனிடம் கேட்டாள்.

''மகளே நானும் உன்னைப்போல்தான் முன்பு சிந்தித்தேன். ஆனால்... அந்தத் தாயின்சாவு, இந்தப்பிஞ்சு முகம் என்பன ஒருசெக்கனில் பல உண்மைகளை எனக்கு உணர்த்திவிட்டன. என்னைத் தெளிவாக்கி விட்டன...... உடல் தான் கறுப்பு ஆனால் உள்ளம் வெள்ளை; இரத்தம் சிவப்பு;' என்று பெருமூச்சுடன் கூறினார்.

எலினா குழந்தையை குளிர்தாக்காமல் இறுக அணைத்து முத்தமிட்டாள். ஜேம்ஸின் கண்களில் இருந்து நீர்வழிந்தது.

பக்கத்தில் இருந்த ஆலயத்தில் இருந்து நத்தார் பூசைக்கான ஆயத்தமணி ஒலித்தது.

ஆழியோன்

ஓரிடத்தில் நோயாளிகள் ஒன்று கூடுகிறார்கள்- அவரவர்க்கு உள்ள நோய்க்கேற்றவாறு நிறமுடைய இரத்தினக்கல் ஒன்றைப் புகைப்படத்தின் மேல் வைத்துவிடுகிறார்கள்- சில நாட்களில் அந்தப் படத்தில் உள்ளவருக்கு வியாதி குணமாகி விடுகிறதாம்- இந்த வைத்திய முறையை ஜெம் தெராபி என்று குறிப்பிடுகிறார்கள்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க மிஷனரிமாரும் நாடகங்களும்

● கலாநிதி கரை. செ. சுந்தரம்பிள்ளை
எம். பில். பி. எச். டி.

16ம், 17ம், 18ம் நூற்றாண்டுகளில் இலங்கைக்கு வந்த கத்தோலிக்க மிஷனரிமார் நாட்டார் கூத்து வளர்ச்சிக்குப் பெரிதும் பங்களிப்புச் செய்தனர். ஐரோப்பாவில் ஆடப்பெற்ற மத நாடகங்களை மறைபொருள் நாடகங்கள் (Mystery Plays) என்றும் அற்புத நாடகங்கள் (Miracle Plays) என்றும் குறிப்பிட்டனர். (Polland : 1909) இவை தேவாலயப் பலிப் பீடங்களின் முன்பும் தேவாலய முற்றங்களிலும் நடிக்கப்பட்டன. பெரும்பாலும் இயேசு பெருமானின் வரலாறு சம்பந்தப்பட்டனவாகவே இந்நாடகங்கள் அமைந்தன. இவற்றில் நடித்தவர்கள் அனைவரும் மதகுருமார்களே ஆவர். (John Allen 1983 : 76 - 77)

போர்த்துக்கலில் சமயக்குருமார்களுக்குப் பயிற்சி அளிக்கும்போது நாடகப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. குறிப்பாகப் பொதுவணக்க அரங்கம் (Liturgical Theatre) பற்றி அறிவூட்டப்பட்டது. கத்தோலிக்க மிஷனரிமார் நாடகமூலம் சமயக் கருத்துக்களைப் பரப்பலாமெனக் கண்டனர்.

அதனால் இயேசு சபையினரும், பிரான்சிஸ்கன் சபையினரும் இம்முறையைப் பின்பற்றியே மதமாற்றஞ் செய்யலாயினர். இச்சபையினர் கத்தோலிக்கக் குருமாருக்கு கொயிம்பிரா (COIMBRA) லிஸ்பன் (LISBON) பிறகா (BRAGA) இவோறா (EVORA) ஆகிய இடங்களில் மதப்பயிற்சியும், அரங்கப் பயிற்சியும் அளித்துச் சமயப் பணியில் ஈடுபடவைத்தனர். (Goonatilleka : 1984 : 26)

போர்த்துக்கேய பழைய நாடக அரங்கம் பற்றி நன்கு ஆராய்ந்தவர் ஸ்ரீகக்னோ பீச்சியோ (Stegagno Picchio) என்பவராவர். இவர் போர்த்துக்கேயரது கத்தோலிக்க மத நாடகங்கள், சமயக் கருத்துக்களைப் பரப்பும் சாதனங்களாகவும், அறநெறியூட்டும் சாதனங்களாகவும் விளங்கின என்றும், மேலும் புதிதாக கத்தோலிக்க மதத்தை ஏற்றவர்களுடைய உள்ளங்களை ஈர்த்துச் சமயத்தின் பால் ஈடுபாடு கொள்ளவும் பக்தி செலுத்தவும் செய்தனவென்றும் கூறுகின்றார்.

(Picchio : 1964 : 160)

பதினாறாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் லிஸ்பனில் மேடையேற்றப்பட்ட இத்தகைய நாடகங்கள் கீழைத் தேசங்களுக்கும் எடுத்துவரப்பட்டன. போர்த்துக்கேய அரங்கம் கிழக்கிற் பரவிய முறை பற்றி வண. மரியோ மார்ட்டின் வண.பெனோ லோபஸ், குளோடி கென்றி பிறெச் ஆகியோரும் ஆராய்ந்துள்ளனர். அவர்களுடைய கருத்துப்படி இயேசு பெருமானின் வாழ்க்கை வரலாறு, அவர் சிலுவையிற்பட்ட பாடுகள், புனிதர்களுடைய வரலாறுகள் என்பன கீழைத்தேசங்களில் பாடி நடிக்கப்பட்டன. இந்நாடகங்கள் போர்த்துக்கலிலிருந்து பிறேசிலுக்கும், கோவாவுக்கும், இலங்கைக்கும் எடுத்துவரப்பட்டன. (Goonatilleka ; 1984 : 27) இதே கருத்தையே ஸ்ரீகக்னோ பீச்சியோவும் கொண்டுள்ளார். (Picchio : 1964 : 160)

17ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே (1601) இயேசு சபையினர் கீழைத் தேயங்களில் நாடகங்களைப் பயன்படுத்தி மதக் கருத்துக்களைப் பரப்பலாயினர். மலபாரில் மட்டும் பல தேவாலயங்களில் இத்தகைய நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. கத்தோலிக்கரால் மேடையேற்றப்பட்ட பாஸ்கு நாடகங்கள் இந்தியக் கூத்து மரபைப் பின்பற்றியே எழுதி ஆடப்பட்டன என்பர் ஹூபேட் (Houpert: 1937: 315)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1553க்கும் 1635க்குமிடைப்பட்ட தென்னிந்திய கிறீஸ்தவ அரங்கம் பற்றி ஹூபேட் பின்வருமாறு கூறுகின்றார்.

“ இடைக்காட்டூர் (Idaikathur) போன்ற பல இடங்களில் பாஸ்கு நாடகங்கள் கிறீஸ்தவ புனித நாட்களில் ஆடப்பட்டன. மத்திய கால ஐரோப்பியர்களது அற்புத நாடகங்கள் இவ்வாறு (பாஸ்கு நாடகங்களாக) இந்தியர்கள் மத்தியில் வாழ்ந்துவந்தன. எவ்வாறு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பியர்களை அற்புத நாடகங்கள் மகிழ்வித்தனவோ அவ்வாறே பாஸ்கு நாடகங்களும் இந்தியர்களை மகிழ்வித்தன.

( Houpert 1937: 316 )

எனவே கத்தோலிக்க நாடகங்கள் சமய நாடகங்களாக மட்டுமன்றி மக்களைக் களிப்புறவைக்கும் நாடகங்களாவும் அமைந்தன வெனத் தெரிகிறது.

ஓட்டோஸ் ( Autos ) எனும் பெயரில் குறுநாடகங்கள் இலத்தீன் மொழியிலும் போர்த்துக்கல் மொழியிலும் எழுதப்பட்டன. கத்தோலிக்க மத முன்னோடி நாடகங்கள் இவையே ஆகும். இவை 1541ம் ஆண்டு கோவாவிலும், 1573ம் ஆண்டு கொச்சியிலும் மேடையேற்றப்பட்டன. 1556ல் ஜெறோனிமோஸ் றொட்டிகியூஸ் என்பவர் இத்தகைய ஓட்டோஸ் நாடகங்கள் பலவற்றை இலத்தீன் மொழியிலும் போர்த்துக்கேய மொழியிலும் எழுதினார். வண. அல்வாறிஸ் என்பவர் இந்நாடகங்களை 1658ல் முண்டினியன் என்னும் நாயக்கனைக் கொண்டு தமிழில் மொழிபெயர்த்துத் தென்னகத்தில் மேடையேற்றினார்.

முண்டியன் மொழிபெயர்த்த நாடகங்களுள் புனித பாலாம், புனித யோசேப்பு ( St. Barlaam and St. Joseph) என்பன முக்கியமானவை. கண்டேலூர் என்னுமிடத்தில், குருத்தோலைப் பெருநாளில் (குருத்தோலை ஞாயிறன்று) இந் நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. முதலில் மலையாளத்திலும், பின்னர் தமிழிலும் இவை மொழிபெயர்க்கப்பட்டன எனத் தெரிகிறது. இதுவரை கூறப்பட்ட நாடகங்கள் அனைத்தும் கோவாவிலிருந்து தென்னகத்திற்கும், தென்னகத்திலிருந்து இலங்கைக்கும் உடனுக்குடன் எடுத்துரைக்கப்பட்டன. 16ம், 17ம், 18ம் நூற்றாண்டுகளில் இவ்வாறுதான் நாடகங்கள் கோவாவிலிருந்தும்,தென்னிந்தியாவிலிருந்தும் இலங்கைக்கு வந்தனவெனத் தெரிகிறது.

கலைமுகம், சித்திரை - ஆனி 1992

## முதல் கிறீஸ்மஸ் கார்ட்

சேர் ஹென்றி கோல் என்னும் பிரபு தம் குடும்ப பாரம்பரியப்படி ஆண்டுதோறும் தம் குடும்பத்தார், உறவினர்கள், நண்பர்களுக்கு கிறிஸ்மஸ் வாழ்த்து அனுப்புவது வழக்கம். 1843ல் ஓவியர் ஹார்சிலியை ஒரு படம் வரையச் சொல்லி அதை அச்சிட்டு எல்லோருக்கும் அனுப்பினார்.

அவரது குடும்பம் ஒன்றாக அமர்ந்து விருந்து உண்பதுபோல் நடுவில் ஒரு படமும், அதன் வலம், இடமாக சிறிய படங்கள். ஒன்று பசித்தோருக்கு உணவு தருவதுபோன்று மற்றதில் ஆடையற்றோருக்கு ஆடையளித்தல் போன்றது.

இப்படம் இப்போது விக்டோரியா ஆல்பர்ட் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

நன்றி தோழன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசு வழிவாழ சங்கற்பம் செய்வோம்!

கவிஞர் - செ. குணரத்தினம்



பிறந்தவுடன் இப்புவியில் இறப்பவரும் உண்டு
பிறந்த சில நாளையிலே இறப்பவரும் உண்டு,
பிறப்பதையும், இறப்பதையும் வாழ்வினிலே கண்டும்
பிறவியிலே புண்ணியங்கள் செய்யாதார் உண்டு

* ● *

மானிடராய்ப் பிறந்தபயன் நாமடைதல் வேண்டும்
மண்ணோடு மண்ணாகும் நமக்கு எது வேண்டும்?
மானிலத்தில் நாளைவரும் சந்ததியும் போற்றும்
மாண்புமிகு நற்செயலை நாம்புரிதல் வேண்டும்

* ● *

சுயநலத்தை மூட்டை கட்டி ஒருபக்கம் வைப்போம்
சுதந்திரத்தை மேடையிலே பேசுவோர் வாய் தைப்போம்
அயலவரை அன்போடு பேணிமறை காப்போம்
அகிலமெலாம் ஒருகுடையின் கீழ்வாழப் பார்போம்

* ● *

அன்பிற்குக் கோயில்கட்டி மலர்தூவ வேண்டும்
அடுத்தவரை நம்போல எண்ணிடவும் வேண்டும்
வன்முறையை எதிர்கொண்டு வெற்றியுடன் தாண்டும்
வல்லமையை எமக்கிறைவன் தந்தருள வேண்டும்

* ● *

உள்ளத்தால் உயர்ந்தவனே பெருமனிதனாவான்
உயரத்தால், தோற்றத்தால் யார்பெரியோனாவான்?
கள், காமம் கொலைவெறிகள் நிறைந்தபே ரூரில்
கண்ணியமாய் வாழ்பவரார் விடையறியலாமோ?

* ● *

பிறந்தவுடன் சிரசறுக்கப் பட்டாளம் ஓட
பரிசுத்த மாதாவின் உளமுடைந்து வாட
மறந்திவற்றை அறியாமல் தாய்மடியில் பாலன்
மலராகச் சிரித்தானே! அதைநினைப்போம் நாளும்

* ● *

மரணத்தைத் துச்சமென மதித்தயேசு பாலன்
மன்னுயிரைக் காக்கவந்த மகிமை பெறுதேவன்
பிறந்ததினம், நாம்நமது வாழ்வினிலே நாளும்
பிழையின்றி வாழ்வதற்கு சங்கற்பம் செய்வோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது ஆயரின் செய்தி



ஆண்டவராகிய இயேசுவின் பிறப்பு விழாக்காலம் இது. அனைவருக்கும் நம்பிக்கையூட்டும் நற்செய்தியை இயேசுவின் பிறப்பு கூறுகிறது. இவ்வேளையில் இன்றைய சூழ்நிலையையிட்டு நாம் சிந்திக்காமலிருக்க முடியாது. பல்வேறு வகையிலும் பாதிப்புக்குள்ளான மக்கள் மனத் தாக்கங்களுக்குட்பட்டு தத்தளிக்கும் நிலை; விடியலுக்கான அங்கலாய்ப்பு; ஆனால் அது எப்படி வரும், எங்கிருந்து வரும் என்பது புரியாத வெறுமையான நிலை. இச்சூழ்நிலையில் இயேசுவின் பிறப்பு, வாழ்வில் நம்பிக்கையை, துன்ப துயரங்களை எதிர்கொண்டு, தாங்கி, அதை மேற்கொள்ளும் மனோதிடனைத் தரவேண்டும். அதேவேளை சூழ்நிலைகள் எப்படியிருப்பினும் அவை நமது ஆன்மீக வளர்ச்சிக்கு உரமூட்டுவதாக அமைய வேண்டும். மற்றவரது நன்மை கருதி வாழும் பண்பைக் கைக்கொள்வதோடு எங்கிருந்தோ வரும் உதவிகளை எதிர்பார்க்காது பாதிப்புக்குள்ளான நமது அயலவர்க்கு நாமே முன்வந்து உதவும் மனப்பாங்கை வளர்க்க வேண்டும். நம்மை ஒறுத்து, தியாகங்கள் பல புரிந்து இத்தகைய பிறரன்புச் செயல்களில் ஈடுபட மிகவும் பொருத்தமான - அவசியமான காலம் இது. சிறப்பாக கிறிஸ்துவின் பிறப்பு விழாக்காலத்திலாவது இத்தகைய மனித நேயச் செயல்களில் ஈடுபட வேண்டும்.

மேலும், நமது சகோதர மறை மாவட்டங்கள் இரண்டு - யாழ்ப்பாணம், மன்னார்- அண்மையில் புதிய ஆயர்களைப் பெற்றுள்ளன. அவர்களுக்கு நமது வாழ்த்தையும் வரவேற்பையும் தெரிவிப்பதோடு அவர்களது பணி சிறக்க நமது ஆன்மீக உதவிகளையும் வழங்கவேண்டும். நமது மறை மாவட்டத்தை விட மேற்குறிப்பிட்ட இரண்டு மறைமாவட்டங்களும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையில் பணிக்களம் புகுந்திருக்கும் ஆயர்களுக்கும் மக்களுக்கும் இறையருள் வேண்டி செபிக்கவேண்டும்.

நமது மறை மாவட்டம் உருவான நூற்றாண்டு நிறைவைக் கொண்டாட ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். இதுபற்றி நமது திருவருகைக் காலச் சுற்றுமடலில் விளக்கமாகக் கூறியிருந்தோம். இக்காலத்தில் நமது விசுவாசம் புத்துயிரும் புதுவாழ்வும் பெறுவதோடு நமது வாழ்வும் கிறிஸ்துவுக்குச் சான்று கூறும் வாழ்வாக மாறவேண்டும்.

இதே காலப்பகுதியில் காலி மறை மாவட்டமும் நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது. நமது நாட்டில் திருச்சபையின் வளர்ச்சியை இவை உறுதிப்படுத்துகின்றன. இவ்வேளையில் அவர்களுக்காகவும் சிறப்பான விதத்திலே மன்றாடுவோம்.

இறுதியாக இறைமக்கள் அனைவரும் தமது விசுவாசத்தாலும் நற்செய்திக்கியைந்த வாழ்க்கை முறையாலும் இறையரசை வளர்க்கும் பணியில் உயிருள்ள சாட்சிகளாகத்திகழ எல்லாம் வல்ல இறைவன் உங்களை வழி நடத்துவாராக!

இறைமக்கள் அனைவருக்கும் நத்தார் - புதுவருட வாழ்த்துக்களைக் கூறுவதோடு நமது ஆசீரையும் அளிக்கின்றோம்.

**ஆயர் பேரருள் திரு யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை**

திருமலை மட்டுநகர், மறைமாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஒரு விடியலை நோக்கி......

♡ எஸ். ஏ. இருதயநாதன்



மனித வாழ்வில் பிறப்பும் இறப்பும் இயல்பானவை. இன்பமும் துன்பமும் தொடரானவை. அதேபோன்று பிரபஞ்ச அமைப்பில் பூமியானது பகலினையும் இரவினையும் கொண்டுள்ளது. இன்றைய பொழுது இருளிலே நிறைவுற்றால் நாளைய பொழுது விடிவிலே புலர்கிறது. இவையாவும் இயற்கையின் நியதி. இறைவனின் சித்தம். மனிதரில் முரண்பட முடியாது. எனவே அவன் திறம்படத் தன்னை இயைபாக்கிக் கொள்ளல் வேண்டும்.

இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்னர் கடும்பனிவேளை கார்கால இருளில் பொழுதொன்று புலர்ந்தது. விடியலின் வரவு கூற புள்ளினங்கள் கண்விழித்த வேளை கதிரவனே கன்னிமரி மடியில் விடியலாய் பிறந்திருந்தான். இது வரலாற்று உண்மை. கிறிஸ்தவரும் அனைவரும் தெரிந்துவைத்துள்ள உண்மை. ஆன்மீக விடுதலையை மானிட விடுதலைக்குள் செருகி மண்ணிலே விதைத்து மனித மனங்களிலே அறுவடை செய்ய அவன் விளைத்தான் அதன் பயன்33 வயதில் மரணம். மூன்று தினங்களில் உயிர்ப்பு. இறப்பிலிருந்து மனித சமூகத்திற்கு விடுதலை இது இறையியலின் பார்வை.

இன்று வருடாவருடம் பிறப்பு விழா கிறிஸ்மஸ், ஒளிவிழா, நத்தார் எனப்பல பெயரில் திருவிழாக்கள். பண்பாடாகிப் போன ஒரு விடயம். அர்த்தங்கள் மறந்த போதும் அந் நாளை மறக்காது நாம் நடத்தும் பெருவிழா. உண்மையில் மார்கழித் திங்கள் 25 எமக்குக் கொடுக்கும் அர்த்தமென்ன? சிறப்பென்ன? இறைவன் மனிதனாகி மண்ணில் பிறந்த நாளா? அல்லது இறைவன் அன்பு, உருவெடுத்து எம்மோடு உறவாட மனிதனான, தினமா? அல்லது மனமாற்றத்திற்கும் புதுப்பிறப்பிற்கும் எம்மை அழைக்கும் நாளா? உண்மையில் பார்த்தால் மேற்குறித்த மூன்றுமே சரி. இயேசு இறைவன் இயேசு மனிதன்புதுப்பிறப்பளித்து மனமாற்றம் கொடுக்கும் மைந்தன். அவ்வாறாயின் எமது கொண்டாட்டங்கள் சரிதானா? எமது விழாக்கள் அர்த்தமுள்ளவையோ? உண்மையில் அன்று இடம் பெற்ற பிறப்பு இன்று ஒரு சம்பவத்தின் நினைவு. அந்த நினைவு எம்மில் மாற்றத்தை உண்டுபண்ணுமா?

இன்று நடப்பது போன்று வீட்டைப் புதுப்பித்து அலங்கரித்து, பாலன் குடிசை

பள்ளி மாணவர்களுக்கும். முதியவர்களுக்கும் நாள் ஒன்றுக்கு 50 மில்லி கிராம் உயிர்ச்சத்து விற்றமின் தேவை. இந்த உயிர்ச்சத்து நெல்லிக்கனி, கொய்யா. தோடம் பழம், பப்பாளி, அன்னாசி, ஸ்ட்டோபெரி பழங்களில் இருக்கிறது. தோடம்பழங்களில் உள்ள விற்றமின் சத்து ஒரு நெல்லிக்காயில் இருக்கிறது. இதனை மிகுதியாக உண்ணப் பழகுங்கள் நோயின்றி வாழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> சீனாவில் பல வண்ணங்களைக் கொண்ட கல் ஒன்று உள்ளது. அதனை மெத்தையில் வைத்து, அதன் மீது படுத்தால் பல்வியாதிகள் குணமாகின்றன. வழுக்கைத் தலையில் கூட முடி வளர்ந்துவிடுகிறதாம். பல வண்ணங்களில் கிடைக்கும் இந்தக் கற்களைத் தலையணையில் வைத்துப் படுத்துக் கொள்ளலாம். இந்த அபூர்வக் கல் தலையணைக்கு சீனாவில் கிராக்கி மிகுதியாக இருக்கிறது.

அமைத்து பலகாரங்கள், இனிப்புக்கள் செய்து புத்தாடை உடுத்தி, நள்ளிரவுப் பூசைக்குச் செல்வதும் மறுநாளில் விருந்து, குடி, உறவினர் உபசரிப்பு, தெரிந்தோர் தரிசிப்பு என இயந்திரகதியில் அன்றைய தினத்தைக் கழிப்பதுவா கிறிஸ்துபிறப்பு? அல்லது கையில் காசில்லை. ஊரில் அமைதியில்லை. வீட்டில் யாருமில்லை. என்ன கிறிஸ்மஸ்? எனும் அங்கலாய்ப்புடன் அன்றையப் பொழுதைக் கழிப்பதா? எது சிறந்தது? எண்ணிப்பார்க்கையில் இவை இரண்டுமே உண்மை கிறிஸ்மஸ் அல்ல. அவை வெறுமனே ஒரு பிறந்ததினக் கொண்டாட்டம். பகட்டான உலக வாழ்வில் பரிணமிக்கும் ஒரு நினைவு நாள் செயல்பாடு.

உண்மைக் கிறிஸ்து பிறப்பு, உள்ளத்தில் பிறக்க வேண்டும், இக்கூற்று நாம் பலமுறை கேட்டதுதான் ஆனால் அர்த்தம் புரிந்ததா? எந்த வகையில் கிறிஸ்து பிறப்பு உள்ளத்தில் இடம் பெறமுடியும்? இது ஒரு அனுபவமே தவிர செயல் இயக்க மல்ல, மாறாக நடத்தையைத் தோற்றுவிக்கவல்லது. உள்ளம் என்பது ஒரு மனிதனின் உணர்ச்சிகள், மனநிலைகள், மதிப்பீடுகள் என்பனவற்றின் ஒட்டுமொத்த தொகுப்பும் நடத்தைகளுக்குப் பொறுப்பானதுமாகும். கண்ணால் பார்க்க இயலாது. உடலில் உறுப்பாக இல்லாதது. கிறிஸ்து இந்த உள்ளத்தில் தான் பிறக்க வேண்டும். அதாவது மனித உணர்ச்சிகளில் மதிப்பீடுகளில் மனநிலைகளில் பிறந்து மனித நடத்தைகளில் வெளிக்காட்டப்பட வேண்டும்.

1. உணர்ச்சிகளில் கிறிஸ்து எவ்வாறு பிறக்க முடியும்? மனிதன் தன்னகத்தே கோபம், பயம், மகிழ்ச்சி, துக்கம் எனும் நான்கு முக்கிய உணர்சிகளையும் பால், பழி, காதல், வெறுப்பு, அன்பு எனும் உப உணர்ச்சிகளையும் கொண்டவன். உணர்ச்சிகள் நல்லவை ஆனால் எவனொருவன் மேற் குறித்த உணர்ச்சிகளில் முதிர்ச்சி இன்றி மனம் போனபோக்கில் ஏதாவது சில உணர்ச்சிகளை மாத்திரம் முதன்மைப் படுத்தி வாழ்கின்றானோ அவன் நெறி பிறழ்வுக்கு ஆளாகிறான். அகபுற அமைதியின்மை, முரண்பாடுகள் மனமுறிவுகள், கொண்ட மனநோயாளி ஆகின்றான். அதாவது ஒருவன் பால் உணர்ச்சியையோ பய உணர்ச்சியையோ முதன்மையாகக் கொண்டிருந்தால் அவை அவன் நடத்தைகளில் பிரதிபலிக்கும். அவன் வாழ்வு முழுமையற்றதாகும். அவன் நடத்தைகள் சமூக வாழ்விற்குப் பொருத்தமற்றதாகும் எனவே அவன் தன் உணர்ச்சிகளை மாற்ற வேண்டும். முதிர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். தனது நடத்தைகளை சீர்தூக்கிப் பார்த்து பிழையானவற்றை மாற்ற வேண்டும். அந்நடத்தைகளை உருவாக்கும் உணர்ச்சிகளை பக்குவப்படுத்த வேண்டும். இதனைச் செய்தால்தான் கிறிஸ்து உள்ளத்தில் பிறக்கமுடியும். அதுவே உண்மையான கிறிஸ்து பிறப்பு, எனவே எவ்வளவுதான் அவன் கொண்டாட்டங்களில் ஈடுபட்டாலும் உணர்ச்சிகளில் மாற்றமில்லை என்றால் அவனுக்கு கிறிஸ்து பிறப்பில்லை,

2. மனநிலைகளில் எவ்வாறு கிறிஸ்து பிறக்க முடியும்? ஒவ்வொரு மனிதனும் தனக்குள்ளே பல்வேறு மனநிலைகளை அல்லது மனப் பாங்குகளைக் கொண்டுள்ளான். மனநிலை என்பது ஒரு விடயம், பொருள், ஆள், கொள்கை, சார்ந்தவையாக இருக்கலாம். அதேவேளை அது நல்லதாகவோ தீயதாகவோ இருக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். உதாரணமாக சம்பாதித்தல் எனும் கொள்கை சார்ந்த மனநிலையை எடுத்தால் ஒருவன் ''நான் நேர்வழியில் மாத்திரமே சம்பாதிப்பேன்'' எனும் மன நிலையைக் கொண்டிருக்கலாம். இன்னு மொருவனோ எந்தவழியிலாதுநான்சம்பா திப்பேன் எனும் மனநிலையைக் கொண் டிருக்க முடியும். எனவே மனநிலை பொது வானவை, அவற்றின் தன்மைக் கேற்ப நடத்தைகளும் தோற்றுவிக்கப்படும். மேலும் மனநிலை ஒருவரது எண்ணங் கள் உணர்வுகள், அதற்கான காரணங் கள் அனுபவங்கள் என்பனவற்றால் உரு வாகின்றன, எனவே ஒருவன் நல்ல நடத் தைகளைக் கொண்டிருக்க வேண்டு மென்றால் நல்ல மனநிலைகளைக் கொண் டிருக்கவேண்டும். அவையோ, நல்ல எண் ணங்கள் உணர்வுகள் அனுபவங்களைக் கொண்டு உருவாக்கப்பட வேண்டும்.

கிறிஸ்துவும் தன் வாழ்வில் சில மன நிலைகளை வெளிப்படுத்தினார் மனிதன் மதிக்கப்பட வேண்டியவன் அன்பு செய் யத்தக்கவன் அநீதி களையப்பட வேண் டியது சமத்துவம் அனைவரும் கொண்டி ருக்க வேண்டியது ஏழைகள், கைவிடப் பட்டார், விதவைகள், பிறரால் கவனிக் கப்பட்டு ஆதரிக்கப்பட வேண்டியவர்கள் என்பன அவற்றுள் சிலவாகும். எம்வாழ் வில் எந்த மனநிலைகள் உள்ளன? அவற் றில் எவை சமூக வாழ்வுக்கும் கிறிஸ்து வின் மனநிலைகளுக்கும் முரணானவை? எவை சிறந்தவை? என்பனபற்றிய அறி வும் உணர்வும் எமக்கிருத்தல் வேண்டும். அவ்வாறு உள்ள வேளையில்தான் நான் நல்ல நடத்தைகளைத் தோற்றுவிக்க முடியும். எனவே எமக்கு மனநிலை மாற் றம்தேவை. அம்மாற்றத்தில்தான்கிறிஸ்து பிறக்க முடியும். அதனால் கிறிஸ்து எம் உள்ளத்தில் பிறக்க நாம் முதலில் எம் நெறியிழந்த நடத்தைகளுக்குக் காரண மான மனநிலைகளை, குறுகிய கண் ணோட்டங்களை அகற்ற வேண்டும். அதைவிடுத்து இவ்வருடமும் வெறும் ஆடம்பரக் கொண்டாட்டங்களில் கிறிஸ்து பிறப்பை நாம் எதிர்கொண் டால் அது வெறும் பித்தலாட்டம். உள் ளம் அசிங்கத்தில் மூழ்கி இருக்க வெளி யில் நாம் நல்லவர்களாக நடிக்கின்றவர் களாக இருப்போம்.

3. மனித மதிப்பீடுகளின் மாற்றத்தில் எவ்வாறு கிறிஸ்து பிறக்க முடியும்?

மதிப்பீடு அல்லது விழுமியம் என்பது ஓர் அளவுகோல். மனிதனுள்ளே இருந்து நடத்தைகளைத் தூண்டிவிடும் அகச் சக்தி, எந்த ஒருவிடயத்திலும் முடிவுகாண எடுக்கும் போது குறிப்பிட்ட ஒரு திசை யில் அவன் மனதைத் திருப்பி அத்திசை யின் தன்மைக்கேற்ப முடிவுகளைக்காண காரணமாக இருப்பது இந்த உந்துசக்தி மதிப்பீடுகள் நல்லவை அல்லது தீயவை. இவை பார்ப்பதனால் கேட்பதனால் அனுபவிப்பதனால் ஒருவனிடத்தில் உருவாகலாம். பொதுவாக அனைத்து மனிதர்களும் இருவகையான மதிப்பீடுக ளையும் கொண்டுள்ளனர். ஒருவருக்கு முக்கியமான மதிப்பீடுகள் இன்னுமொரு வருக்கு முக்கியமாகத் தென்படுவதில்லை. நல்ல மதிப்பீடுகள் நல்ல நடத்தைக ளையும் தீயநடத்தைகளையும் தோற்று விக்கவல்லன. எனவே நாம் மதிப்பீடு களில் நல்லவற்றைத் தெரிவு செய்து எம்மில் உட்பதித்துக் கொள்ளல் வேண் டும்.

இயேசுவும் தன்வாழ்வில் மன்னித்தல். அன்புசெய்தல், விட்டுக்கொடுத்தல், தியா

அமெரிக்காவைச் சேர்ந்த பார் பரா என்ற நீக்ரோப் பெண்மணி கிறிஸ்துவ ஆயர் பதவி பெற்றிருக் கிறார். கல்லூரிப் படிப்பற்ற இவர் சிறுவயதில் திருமணமாகி மண விலக்குப் பெற்றவர். இவருக்கு வயது 62. 'திருச்சபைக்குள் புதிய காற்று வீசத் தொடங்கியிருக்கிறது' என்று இவர் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம் செய்தல், தூய்மை உள்ளம்,நேர்மை பேணல், சமத்துவம், சகோதரத்துவம் கொண்டு வாழல் போன்ற உயர் விழுமி யங்களை அல்லது மதிப்பீடுகளைக் கொண்டிருந்தார். எனவேதான் அவர் நடத்தைகள் முழுமனித சமுதாயத்துக் கும் உகந்ததாய் இருந்தன. அவர் கண் டித்த மதிப்பீடுகள் பழிக்குப் பழிவாங் குதல், பாரபட்சம் காட்டல், சுயநலம் அடக்கி ஆளுதல், அநீதி, தண்டித்தல் பிறரை வருத்துதல் என்பனவாகும். எம் வாழ்வில் இவ்விரு வகையான மதிப்பீடு களும், பின்னிப் பிணைந்து சிக்கலான நடத்தைகளுக்கு எம்மைத் தள்ளிவிடுகின் றன.எனவே எமது உள்ளங்களில் காமஇச் சைகளும்,சாதிமத பேதங்களும், பிரதேச வாதங்களும், சண்டை சச்சரவுகளும் அடிமைத்தனம், அடக்குமுறை, களவு அநீதி, எனும் நெறியிழந்த பண்புகளும் நிரம்பிக்கிடக்கின்றன.

கிறிஸ்து பிறப்பு உள்ளத்தில் என்றால் எவ்வாறு இத்தகைய அசிங்கமான அல் லது அசுத்தமான இதயத்தில் இயேசு பிறக்க முடியும்? எனவே எமது மதிப் பீடுகள் மாறவேண்டும். நல்லவற்றைத் தெரிந்து தீயவற்றை விலக்க வேண்டும். அப்போது நமது நடத்தைகளும் நல்லவை யாக மாறும். கிறிஸ்துவும் எமது உள்ளங் களில் பிறப்பார். செயல்படுவார். அதை விடுத்து வெளிவேடக்காரர்களாய் நாம் உள்ளத்தைக் கவனியாது உடலையே மையமாகவைத்து கிறிஸ்து பிறப்பைக் கொண்டாடினால் அதுஒரு சாதாரண செயல்பாடே வருடா வருடம் வழமை யாகச் செய்யும் திருவிழாவே.

ஆக மொத்தத்தில் நோக்கில் கிறிஸ்து பிறப்பிற்கு அலங்காரம் ஆடம்பரம் பல காரம், பலவர்ணஉடை, உணவு, குடி பானம், தேவையில்லை. நல்ல மனமும் சுத்தமான நினைவும் பக்குவப்பட்ட உணர்வும் பொருத்தமான மனநிலையும் தூயநடத்தையைத் தூண்டிவிடும் மதிப் பீடுகளும் இருந்து விட்டால் போதும். அங்கு மழலையின் ஓசையும் மென் பாதங்களின் பதிப்பும் அன்றே உரு வாகி கிறிஸ்து பிறப்பைக் கொண்டா டும். ஆதலால் உளமாற்றத்தின் காலம் கிறிஸ்து பிறப்பு. நடத்தைக் கோலங் களில் மாற்றம் கிறிஸ்து பிறப்பு.பண் பட்ட சமூக வாழ்விற்கு ஆயத்தம்- கிறிஸ்து பிறப்பு எனலாம். இவ்வாறு புதுப்பிறப்பு படைத்திட. அவன் பாதார விந்தங்களில் சரண்புகுந்து பழைய வாழ்வைக் களைந்திடுவோம். அப்போது எம்முள்ளத்தில் நத்தார், குடும்பத்தில் நத்தார் - சமூகத்தில் நத்தார் பிறந்து விடும்.

வாக்மேனைக் காதில் பொருத்திக் கொண்டு சுற்றிவருவதும் அதன் மூலம் இசையை ரசிப்பதும் தற்கால இளைஞர்களின் பொழுது போக் காக இருக்கிறது. ஆனால் அது தன்னை அணிபவரின் காதுகளைச் சேதப்படுத்துகிறது. 15 நிமிடம் அந்த ஒலியைத் தொடர்ந்து கேட் டால் காதில் நிரந்தரமான சேதம் ஏற்பட்டுவிடும். வாக்மேன் ஒலியன் களிலிருந்து 115 டெசிபெல்களுக்கு மேல் செறிவுள்ள ஒலி வெளிப்படு கிறது. அந்த உரத்த ஒலி உள் காதிலிருக்கும் செல்களை அழித்து விடு கின்றது, அவ்வாறு அழிந்த செல்கள் திரும்ப வளர்வதில்லை. அதனால் வயோதிகர்களை விட வாலிபர்கள் விரைவில் செவிடர்களாகி விடுவார் கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கேள்வி – ஒரு பதில்

- றெக்ஸ் -

கேள்வி: நமது நாட்டில் ஏறத்தாழ 25 கிறிஸ்தவ திருச்சபைகள் உண்டு இவற்றில் எது கிறிஸ்துவானவர் நிறுவிய உண்மையான திருச்சபை?

பதில்: கிறிஸ்து நிறுவிய சபை எது? கிறிஸ்து ஒரு சபையுமே நிறுவவில்லை. (மயக்கம் போட்டு விழுந்து விடாதீர்கள்) இயேசு யூத மதத்தை விட்டு வெளியேறிப் புதிய மதமொன்றை நிறுவ விரும்பவில்லை. அதனைத் தூய்மைப் படுத்தவும்' அதனை முழுமைப் படுத்தவும் விரும்பினார். திருச்சட்டத்தை அழிக்கவல்ல நிறைவு செய்யவே வந்தேனென்று அவர் கூறியதும் (மத் 5/17) இறுதி வரை ஜெருசலேம் ஆலயத்திற்கே சென்று தொழுது, இறைவனுக்குப் பலி செலுத்தி செபக்கூடத் தொழுகைகளில் பங்கு பற்றியமை, ஒரு யூதனுக்குரிய அத்தனை கடமைகளையும் நிறைவேற்றி வாழ்ந்தமை இதற்குச் சான்றாகும்.

அதே போலவே யேசுவுக்குப் பின் தொடக்கத்தில் அப்போஸ்தலரும் ஆண்டவரின் ஏனைய சீடர்களும், யூதமதத்திலேயே தொடர்ந்தும் தொழுது வந்தனர் என்பதும் அப்பம் பிட்கும் வேளையில் (நற்கருணை வழிபாடு) மட்டும் ஒரு விசேட கூட்டமாக அவர்கள் கூடினர் என்பதும் தெளிவு(அப்2/46) கிறிஸ்தவம் என்னும் பெயர் தொடக்கத்திலே இருக்கவும் இல்லை. புதிய நெறியைச் சார்ந்தோர் என்றே அழைக்கப்பட்டனர்.

தொடக்கத்தில் பலஸ்தீனாவுக்குள் அப்போஸ்தலர்கள் இயேசுவைப் பற்றிப் பிரசங்கிக்க முற்பட்டனர். எனவே முதற்சபை-தாய்ச்சபை ஜெருசலேமில் நிறுவப்பட்டது. யாக்கோபு (யாகப்பர்) அதன் தலைவரானர். அவரே முதலாவது பொதுச்சங்கமான ஜெருசலேம் சங்கத்தின் தலைவருமாயிருந்தார். ( ) இதற்குப் பின் பலஸ்தீனாவிற்கு வெளியே குடியேறியிருந்த யூதர்களுக்கு பவுல், பர்ணபாஸ் போன்ற அப்போஸ்தலர்கள் இயேசுவே மெசியா எனப் போதிக்க முற்பட்டனர். அவர்களது முதலாவது வேதபோதக பயணத் தரிப்பிடங்களை உன்னிப்பாகக் கவனித்தால் இது புரியும். யூதர்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டிருந்தால் கிறிஸ்தவம் அதற்குள் ஒரு மறுமலர்ச்சி இயக்கமாக அடங்கிப் போயிருக்கும். ஆனால் அவர்கள் ஏற்றுக் கொள்ளாததினாலும், புற இனத்து மக்கள் நூற்றுக்கணக்கில் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டதினாலுமேயே கொரிந்து, எபேசு, உரோமை போன்ற நகரங்களிலே சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. படிப்படியாக அவர்கள் கிறிஸ்தவர்களென அழைக்கப்பட்டனர். ரோமாபுரி அக்காலத்தில் உலகின் தலைநகரமாகக் கொள்ளப்பட்டபடியினால் உரோமைச்சபை முதன்மையானதும் முக்கியமானதாகவும் கருதப்பட்டது. அன்றிலிருந்து படிப்படியாகப் பல காரணங்களினால் உரோமைச் சபை வலுப்பெற்று மத்திய காலத்தில் ஒரு பெரும் சாம்ராஜ்ஜியமாக உருவாகி விட்டதெனக் கூறலாம்.

இயேசு தானே புதிய மதமொன்றை அல்லது புதியதொரு சபையினை(கிறிஸ்தவம்-திருச்சபை) உருவாக்கவில்லை எனினும் அவ்விரண்டும் அவரது போதனைகளினாலும் வாழ்வினாலும் கவரப்பட்டு அவரை விசுவசித்து வழிபடுவதனால் வரும் மிக இயல்பான விளைவு அல்லது வளர்ச்சி எனக் கூறலாம். யூதமதமும் அன்றைய உலகமும் இயேசுவையும் அவரது போதனைகளையும் அவரை விசுவசித்தோரையும் வெறுத்து ஒதுக்கியபோதுஇத் தனித்துவம் உருவானது எனவும் கூறலாம்.

கலாபனைகளின் பொழுதும் துன்புறுத்தல்களின் பொழுதும் பல்வேறு பின்னணிகளிலிருந்து வந்த மக்களைத் தன்னகத்தே அணைத்து வைத்திருந்த கிறிஸ்தவம்; மூன்றாம் நூற்றாண்டிற் பணமும், பலமும் மிகுந்த போது பிரிவுக்குள்ளானது. சொத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களினால் பிரிவு, போதனை விளக்கங்களினால் பிரிவு, பலப்பரீட்சைகளினால் பிரிவு என்று கிறிஸ்தவம் ஒவ்வொரு நூற்றாண்டும் அமீபாக்கலம் பிரிவுறுவது போல பிளவுற்று வந்துள்ளது. இன்று உலகெங்கும் இருநூற்றுக்கு மேற்பட்ட சபைகள் உண்டென்பர். திருவருட்சாதனமாய் விளங்க வேண்டிய சபை இன்று பலம்மிக்க ஸ்தாபனமாய் பரிணமித்து விட்டது. இயேசுவே இன்று தன் மணமகளை அடையாளம் கண்டுகொள்வாரோ சொல்ல முடியாது.

உண்மையான திருச்சபையை அதன் வயதைக்கொண்டோ, பலத்தைக்கொண்டோ அல்லது அளவைக் கொண்டோ அடையாளம் காணமுடியாது. அதன் ஆராதனையைக் கொண்டோ, அவ்வேளைகளில் விரண்டோடும் ஆவிகளைக் கொண்டோ அல்லது குணமாக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையைக் கொண்டோ இனங்காண முடியாது. வேதாகமம், இறையியல் மேற்கோள்கள், விளக்கங்கள் மூலமும் அதனை நிரூபிக்க முடியாது. என் மனதின்படி உண்மையான திருச்சபை உலகில் வாழும் திருச்சபைகளின் பரிமாணத்துக்குள் முற்றாக அடங்காது. சபைகளுக்கு வெளியே உள்ள சிலர் உண்மையான திருச்சபைக்குள் (இறையரசு) அடங்குவர். சபைக்குள்ளே இருக்கும் சிலர் அதற்கு வெளியே இருப்பர். மலைப் பொழிவு காட்டும் உளப்பாங்குகளின் படியும், விழுமியங்களின் படியும் வாழ்ந்து இறைமகன் யேசுவில் வாழும் சீடராகத் திகழ்வோரின் கூட்டமே உண்மையான திருச்சபையாகும். அச்சபைக்குப் பெயரில்லை, அறிமுகமில்லை, தலைமையகம் இல்லை, பேராலயங்கள் இல்லை. அது எங்கும் உண்டு. இங்கும் உண்டு. என்றும் உண்டு.

# வாழ்த்துகின்றோம்



அன்பின் சுடரே அறிவின் கடலே
ஞான ஊற்றே விகட கவியே
அன்னை மரியாள் அமலோ உற்பவ
மறுநாள் தாமே ஒன்பதில் உதித்தீர்
இறைபணி யாற்ற இயேசுவின் குருவாய்
இருபதாம் நாளில் உம்மைத் தந்தீர்

ஆயராய் வந்து அருள் பாலித்தும்
சீலோம் நிறுவி மருத்துவம் தந்தும்
தாயாய் நின்று அகதியானோர்
அவலம் தீர்த்து வாழ்வு தந்தும்
மாட்சி கண்டோர் மனதில் நின்றீர்
வாழ்க! வாழ்க! ஆயிரம் ஆண்டுகள்
ஞாலம் சிறக்க ஞாயிறாய் வாழ்க!

- திருமதி. P. சொலமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறை மாவட்டச் செய்திகள்

## மரியன்னையின் பாத்திமா தரிசனம்

**75வது ஆண்டுநிறைவு விழா**

**13 - 10 - 1917 13 - 10 - 1992**

**மட்டுநகரில் மகிமைசேர் மக்கள் எழுச்சி விழா 17 - 10 - 1992**

போர்த்துக்கல் நாட்டில் பாத்திமா திருநகரில் அன்னைமரியாள் ஏழை இடைச் சிறுவர்களான லூசியா, ஜசிந்தா பிறான்சிஸ் என்ற மூன்று சிறுவர்களுக்கும் தம்மைக் காட்டி உலகில் சமாதானம் நிலைக்கச் செபியுங்கள் என்று கூறிய 75 வது வருட நிறைவு நாள்.

ஓ! என் இயேசுவே!! எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும். எங்களை நரக நெருப்பில் நின்று இரட்சித்தருளும், சகல ஆத்துமாக்களையும் பரலோக பாதையில் வழிநடத்தியருளும். உமது இரக்கம் அதிகமாக வேண்டியவர்களுக்கு விஷேட உதவி செய்தருளும், என்ற செபத்தினை அன்னை மரியாள் சொல்லிக் கொடுத்த 75 வது வருட நிறைவு நாள்.

டார்கள். அதிகாலை 5.00 மணிக்கு ஆயரின் தலைமையில் அனைத்துக் குருக்களும் இணைந்து நன்றிப்பலி நிறைவேற்றினர். இதுகாண்போரின் மனத்தை உருக்கிய கண்கொள்ளாக் காட்சியாகும்.

## ஒரு நாள் கருத்தரங்கு

பாலையூற்று அன்புவழிபுரம் இளைஞர் யுவதிகளுக்கான ஒருநாள் கருத்தரங்கு உப்புவெளி செமினறியில் கடந்த 24ம் திகதி மாலை 5 மணி தொடக்கம் 25ம் திகதி 1 மணிவரை நடைபெற்றது. அதனை கொழும்பிலிருந்து வருகை தந்த அருட்தந்தை வின்சன் பற்றிக் அடிகளார் மிகவும் சிறப்பான முறையில் நடாத்தினர். இதில் மொத்தமாக 33 இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள்.

**செல்வி. நாகராஜா தர்ஷினி**

## புனித அன்னம்மாள் பங்கு வீச்சுக் கல்முனையில் மறைக்கல்வி பற்றிய இல்ல விளையாட்டுப் போட்டியும்,

டீ. ஜீ. ஆர். டென்னக்கோன்
எஸ், ரி. எவ். முகாம்
அக்கரைப்பற்று - 7.

உட்பட மேலும் ஐந்து ஆறுதல் பரிசுகளும் பின்வரும் அதிஸ்ட நபர்களுக்கு கிடைத்தன.

1) த. ஷாமினி
குருக்கள் வீதி, அக்கரைப்பற்று 07.
2) வீ. மயில்வாகனம்
கோயில் போரதீவு பெரியபோரதீவு
3) ரி. அருள்மேரி தேவசகாயம்
றோ. க. தேவாலய வீதி
பெரிய கல்லாறு, கல்லாறு.
4) நிறோஜினி
கார்மேல் மடம் கல்முனை.
5) எ. தர்ஷா
றோ. க. ஆலயம் இருதயபுரம்,
மட்டக்களப்பு.

மறையாசிரியர் செயலாளர் செல்வி. ஜெயசீலியின் நன்றியுரையுடன் எல்லாவிதமான நிகழ்ச்சிகளும் இறைவன் துணையில் சிறப்பாக நடைபெற்று இனிதே முடிவுற்றது. அதிஸ்ட லாபச் சீட்டிழுப்புக்கு பரிசு பொருட்கள் தந்துதவிய நண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நாளைச் சிறப்பிக்க இலங்கையின் கிழக்கு மாகாணத் தலைநகராம் மட்டுநகரில் இணைந்துள்ள நகரப்பங்குகளான புளியந்தீவு, புளியடிக்குடா, இருதயபுரம், தாண்டவன்வெளி, வீச்சுக்கல்முனை ஆகிய ஐந்து பங்குகளுடன் நாவற்குடா, தன்னாமுனை இறைமக்களும் இணைந்து எடுத்த விசுவாசப் பாதயாத்திரைப் பயணம்.17-10-92ல் இடம் பெற்றது.

திருமலை - மட்டுநகர் மறைமாவட்ட தலைமைக் குருவாம் ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆயருடன் மட் / பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் அவர்களும் சகல ஆலயங்களிலும் இருந்து அலை அலையாக மக்கள் வெள்ளமும் படைதிரண்டனர்.

வலையிறவு அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் இருந்து அலங்கார ஊர்தியில் அன்னையின் திருச்சுருபப் பவனி புறப்பட, அனைத்து ஆலயங்களிலுமிருந்து வந்த ஏறக்குறைய ஆறாயிரம் மக்கள் (குருக்கள் துறவறசபை சகோதர சகோதரிகள் உட்பட) அணி திரண்டு கல்லடி டச்பார் கடற்கரை அன்னை வேளாங்கண்ணி திருத்தலம் சேர்ந்தனர்.

இரவு 7.00 மணிமுதல் வங்கக்கடல் ஓரம் வெண்மணல் பரப்பில் மக்கள் ஆறஅமர இருந்து விடிய விடிய விழித்திருந்து செபித்தார்கள்.

பங்கு பங்காக செப ஆராதனைகள் சிறப்புற நிறைவேற நள்ளிரவு 11.00 மணிக்கு நோயாளர் மந்திரிக்கப்பட்

## அதிஸ்டலாபச் சீட்டிழுப்பும்

கார்த்திகைத் திங்கள் 1ம் நாள் (01 . 11 . 1992) வீச்சுக்கல்முனைப் பங்கில் குதூகலங்களையும் மக்கள் மத்தியில் ஆரவார மகிழ்ச்சியையும் காணக்கூடியதாக இருந்தது. அப் பங்கின் மறையாசிரியர்களின் அயரா உழைப்பின் செயல்பாடே ஆகும்.

1ம் திகதி ஞாயிறு மாலை 3மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பித்தன. இந்த சிறப்பான விழாவுக்கு பிரதம விருந்தினராக மட்/மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்தந்தை. எ. தேவதாசன் உட்பட சிறப்பு விருந்தினர்கள், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கமும், பாரியாரும் பங்குத்தந்தை சாந்தன் இம்மனுவேல் அருட்சகோதரர்கள். டிலெக்ரா.எ.சி,எம் தெரிசில்டா.எ.சி; திரு. அருளானந்தம் இல்லறத்தூதுவர் அருமைராசா பங்கில் பணியாற்றும் அருட்சகோதரிகள் எம். லூக்கிறிஸ், எம்.கிறிசாந்தி கலந்து சிறப்பித்தனர்.

விழாவின் இறுதி நிகழ்ச்சியான அதிஸ்டலாபச் சீட்டிழுப்பும் நடைபெற்றது.

1ம் பரிசான தொலைக்காட்சி பெட்டி.
என். விக்னேஸ்வரன்
மேல் நீதி மன்றம், மட்க்களப்பு.
2ம் பரிசான மின் விசிறி
க ஞானச்செல்வம்
சின்ன ஊர்த்து அன்னை
கல்லடி, மட்டக்களப்பு.
3ம் பரிசான சுவர்க் கடிகாரம்

பர்கள், பண உதவிகள் வழங்கிய அனைத்து உள்ளங்களையும், சீட்டுக்களை விற்பனை செய்ய உதவிய திருமலை மட்டக்களப்பு மறையாசிரியர்களுக்கும், நண்பர்களுக்கும் உற்சாகம் ஊட்டிய பங்கு தந்தையர்கள் அனைவருக்கும் வீச்சுக்கல்முனை பங்கு மறையாசிரியர்கள் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

தகவல்
போதகர். சி. பத்மநாதன்

## மீண்டும் சிறுவர் இயக்கம்

பாலையூற்றுப் பங்கில் நடைபெற்று வந்த சிறுவர் இயக்கம் வன்செயல் காரணமாக சில வருடங்கள் நடைபெறவில்லை. தற்போது மீண்டும் அதை நடாத்துவது என்று பாலையூற்று கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினர் திட்டமிட்டு அவர்களின் உதவியோடு பங்குத் தந்தை மார்சலின் அடிகளார் கடந்த 18.10.92 அன்று அக்கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். ஏராளமான சிறுவர் சிறுமியர் இதில் சேர்ந்து கொண்டார்கள். இச்சிறுவர் இயக்கத்தின் நோக்கம் சிறுவர்களை ஊக்குவித்து, அவர்களுக்குத் தெரியாதவற்றைச் சொல்லிக் கொடுப்பதேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிய நாடுகளுக்கான இளைஞர் மகாநாடு



கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் வழிப்படுத்தும் குழுவில் பணியாற்றி வருபவரும் கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளருமான திரு ஜீவரெட்ணம் மனோகிதராஜ் அவர்கள் கடந்த மாதம் நடைபெற்ற ஆசிப நாடுகளுக்கான இளைஞர் மகாநாட்டில் தேசிய ரீதியில் இளைஞர்கள் சார்பில் கலந்து கொண்டார். இம்மகாநாடு மணிலாவில் (பிலிப்பைன்ஸ்) நாட்டில் நடைபெற்றது

## "SACPA" பொருளாளராகத் தெரிவு

பிரேசில் - கம்பஸ் டி ஜோர்டாவில் செப்ரெம்பர் 24ந் திகதி இடம் பெற்ற தென்கிழக்காசிய நாடுகளினது (South Asian Catholic Press Association) பிராந்தியக் கூட்டத்தில் இலங்கையின் சார்பில் கலந்து கொண்ட 'தொண்டன்' துணையாசிரியர்களில் ஒருவரான திரு.எஸ். லோகநாதன் 'SACPA' வினது பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். 'SACPA' வில் தென்கிழக்காசிய நாடுகளைச் சேர்ந்த 30 க்கும் மேற்பட்டவர்கள் சமூகமளித்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். SACPA வின் தலைவராக இந்தியாவைச் சேர்ந்த அருட் திரு.ஜோர்ஜ் வெள்ளிப்பரம்பில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## வருடாந்தப் பொதுக் கூட்டம்.

தி / புனித மரியாள் பேராலய வின்சன் டீ பவுல் சபையின் 73வது வருடாந்தப் பொதுக் கூட்டம் 04. 10. 92 அன்று காலை 10 00 மணிக்கு ஆன்ம இயக்குனரும், பங்குத் தந்தையுமாகிய அருட்திரு. பயஸ் பத்மராஜா அடிகளாரின் தலைமையில் பங்குக் குருமனையில் தூய ஆவியின் பாடலுடன் கூட்டம் ஆரம்பமாகியது.

கூட்டத்திற்கு பிராந்திய சபைத் தலைவர் திரு. அ. அருள்தாஸ், வின்சன் டீ பவுல் சபை உறுப்பினர்கள், ஏனைய ஆலோசனைச் சபை உறுப்பினர்கள், பேராலய பக்திச் சபை அங்கத்தவர்கள் ஆகியோர் உட்பட 25 உறுப்பினர்கள் கலந் கொண்டனர்.

தலைவி. யூ. பல்தசார் அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து பொதுக் கூட்ட அறிக்கை வருடாந்த செயலறிக்கை என்பன செயலாளர் திரு. ஜே. ஜே. இராஜரட்ணம் அவர்களாலும், பொருளாளர் அறிக்கை ஜே. பே. லொறற்றா குருஸ் ஆகியோராலும் வாசிக்கப்பட்டு சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பின் பங்குத் தந்தையின் உரை, பிராந்திய சபைத் தலைவரின் உரைகளைத் தொடர்ந்து 1992ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். விபரங்களாவன:-

தலைவர்- K. S. கொலின்
செயலாளர்- A. J. ஜோண்பிள்ளை.
பொருளாளர்- J. B. லொறற்றா குருஸ்
உப. தலைவர்- P. லோரன்ஸ்
உப. செயலாளர்-J. J. இராஜரட்ணம்

ஆகியோர் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டனர். அதனையடுத்து கடந்த பல வருடங்களாக சேவையாற்றிய சகோதரி. யூ. பல்தசாரை சபையின் ஆலோசகராக பங்குத் தந்தை நியமித்தார். அதனைத் தொடர்ந்து செயலாளரால் நன்றியுரை கூறப்பட்டு பங்குத் தந்தையின் ஆசீருடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது நன்றி.

தகவல்.
ஜே. பே. லொறற்றா குருஸ்.

* * * * *



# வெள்ளி விழாவை நோக்கி.....

கிழக்கிலங்கையில் - சஞ்சிகைகளின் வரலாற்றில் தொண்டன் ஒரு சாதனையைப் படைத்துக் கொண்டிருக்கின்றான். உங்கள் விழிகள் வியர்ப்புடன் வினாக் கோலமிடலாம் உண்மை இதுதான்.

எதிர்வரும் (1993) பெப்ரவரி மாதத்திலிருந்து 25 வது ஆண்டுக்குள் - வெள்ளிவிழா ஆண்டுக்குள் தொண்டன் நுழைகிறான். இது ஒரு நிறுவனத்தின் சாதனை என்றாலும்கூட நாம் பெருமை அடைவதில் தவறேதுமில்லை. பல நிறுவனங்கள் சஞ்சிகை வெளியீட்டு முயற்சியில் ஈடுபட்டு தாளாமல் கதவை மூடிக்கொண்ட நிலையில் தொண்டன் பல நோவுகளைச் சுமந்து கொண்டு தொடர்ந்து இருபத்தியைந்து ஆண்டுகளாக வாசகர்களைச் சந்தித்துக் கொண்டிருப்பது பெருமைக்குரியதுதானே! அதே வேளை ஒரு சஞ்சிகையின் வெற்றிக்கு ஆண்டுகள் மட்டும் அளவுகோல் அல்ல என்பதையும் நாம் புரிந்தே வைத்துள்ளோம்.

'தொண்டனின்' தோற்றம், அதன் நோக்கம், போக்கு, வடிவம், தரம். தாக்கம், உருவாக்கம் என்பன ஓர் ஆழ்ந்த விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படுவது அவசியம். அதை விமர்சகர், வாசகர் கைகளில் விட்டுவிடுவோம். இவ்விடத்தில் சிலவற்றை நாம் குறிப்பிட்டேயாக வேண்டும்.

'தொண்டன்' ஒரு சமய அமைப்பின் வெளியீடு. குறிப்பாகச் சொல்லுவதாயின் கிழக்கிலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் வெளியீடு. மறைமாவட்ட மக்களின் மறை அறிவுக்கும், கிறிஸ்தவ வாழ்வுக்கும் துணையாக உருவாக்கப்பட்ட தொண்டன் அதைப் புறந்தள்ளிவிடாது அதேவேளை முழுச் சமூகத்திற்கும் பயன்படத்தக்கவாறு தன்னைப் பெருப்பித்துக் கொண்டுள்ளது என்பது இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இன்று தொண்டனுக்கு ஈழத்தின் பலபாகங்களிலும் வாசகர்கள் உண்டு. அவர்களில் கத்தோலிக்கருமுண்டு. கிறிஸ்தவர்களுமுண்டு. கிறித்தவரல்லாதாரும் உண்டு. இத்தகைய பரந்து விரிந்த சமூகப்பார்வை உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவிக்கச் சொன்ன கிறீஸ்துவின் மதிப்பீடுகளுக்கு மாறானதன்று என்பதே எமது பணிவான எண்ணம். இதைப் புரிந்து கொள்ளாது நாம் கிறீஸ்தவத்தைத் 'தொலைத்து விட்டதாகக் கூப்பாடு போடுவோரும் உண்டு; எமது அகலப்பார்வையை வெறும் சமூக, அரசியல், இலக்கியப் பார்வையாகக் கருதி அநாவசியமாக அதிகமாக எதிர்பார்த்து ஏமாந்து சலிப்படைபவர்களுமுண்டு. எமது எண்ணங்கள் பரந்திருப்பினும் எழுத்துக்களுக்குச் சில வரையறைகள் உண்டு என்பதைச் சிலர் ஏனோ புரிந்து கொள்வதில்லை ஆனாலும் நமது பாதை எதுவென்று தெளிவாகவே புரிந்து கொண்டிருக்கின்றோம். ஆரோக்கியமான விமர்சனங்களுக்கும், ஆலோசனைகளுக்கும் நாம் கதவடைப்புச் செய்வதில்லை.

தொண்டனின் வெள்ளி விழா ஆண்டு இன்னுமொரு வகையிலும் சிறப்புப் பெறுகிறது. நமது மறைமாவட்டம் உருவான நூற்றாண்டு விழாவும், தொண்டனின் வெள்ளி விழாவும் ஒரே காலத்தில் வருவதைத் தான் குறிப்பிடுகிறேன். நூற்றாண்டு விழாவைக் கொண்டாட பாரிய அளவில் ஆயத்தங்கள் நடைபெற்றுவரும்இவ்வேளை தொண்டனும் தனது வெள்ளிவிழாவோடு மறை மாவட்டத்தின் நூற்றாண்டு விழாவுக்கும் தனது பங்களிப்புக்களைச் செய்யத்திட்டமிட்டுள்ளான். வெள்ளி விழா, நூற்றாண்டு விழாச் செய்திகள் நிகழ்வுகள் அவ்வப்போது தொண்டனில் இடம் பெறும். இவைகளை ஒட்டி தொண்டன் மேலும் நான்கு பக்கங்களை அதிகமாகவே சுமந்து வருவான். இதனால் அதிகரிக்கும் பொருளாதாரச் சுமையையும் வாசககர்கள் எம்மோடு இணைந்து தாங்கிக்கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறோம். இதற்கேற்ப எதிர்வரும் பெப்ரவரித் திங்களில் இருந்து தொண்டனின் விலை ஒரு ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளது. தனிபபிரதி ஒன்றின் விலை ரூபா ஆறாகும். ஆண்டு சந்தாவில் மாற்றம் எதுவும் இல்லை. வழமை போல் ஆண்டு சந்தா எழுபது ரூபாவாகவே இருக்கும். இச்சிறிய விலை உயர்வை வாசகர்கள் பெரிதுபடுத்தாது வெள்ளி விழா ஆண்டில் தொண்டன் மேலும் வளர தங்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இணைஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச இளம் பத்திரிகையாளர் அமைப்பினது 2வது மகாநாடும், சர்வதேச கத்தோலிக்க பத்திரிகையாளர் அமைப்பினது 16 வது மகாநாடும்.

✱ எஸ். லோகநாதன்

UCIP 16th Congress and International Network of Young Journalists 2nd world Conventions



'UCIP' எனப்படுவது Union of Catholic International Press எனப்படும் சர்வதேச கத்தோலிக்க பத்திரிகையாளர் அமையமாகும்.

1986ல் புது டெல்கியில் UCIP யின் 14வது மகாநாட்டில் கலந்து கொண்டு UCIP யின் தோற்றம், வளர்ச்சி பற்றி 1987க்குரிய தொண்டன் சஞ்சிகைகளில் எழுதியதை நினைவு படுத்திக் கொள்ள விரும்புகின்றேன்.

1989ல் ஜேர்மனியில் 15வது சர்வதேச கத்தோலிக்க பத்திரிகையாளர் மகாநாடும், சர்வதேச இளம் பத்திரிகையாளர் மகாநாடும் இடம் பெற்றது. உள்நாட்டுப் பிணக்குகளின் காரணமாக என்னால் அம்மகாநாட்டில் கலந்து கொள்ள முடியாது போய் விட்டது.

1986 புது டெல்கி, 14வது UCIP மகாநாட்டைத் தொடர்ந்தே சர்வதேச (கத்தோலிக்க) இளம் பத்திரிகையாளர் அமைப்பு உருவானது. இவ்வமைப்பு சிறப்பாக இளம் பத்திரிகையாளர்களை ஊக்குவிப்பதற்காக மூன்று வகையான 'தொடர்புச் சாதன விருதுகளை' வழங்குகின்றது.

1. தேசிய தொடர்புச் சாதன விருது. (Media in your Country Award)
2. கண்டத்திற்கான தொடர்புச் சாதன விருது. (Media in your Cotinant Award)
3. சர்வதேச தொடர்புச் சாதன விருது. (International Media Award)

1989ல் இளம் பத்திரிகையாளர் அமைப்பு வழங்கிய விருதுகளில் எம்நாட்டிலிருந்து திரு. சம்பத் பெரேரா 'தேசிய தொடர்புச் சாதன விருதினை' ப் பெற்றார் என்பதையும் ஆரம்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இவ்வகையில் 1992க்கான விருதுகளில் தேசிய தொடர்புச்சாதன விருதுகளில் எம் நாட்டினது தேசிய தொடர்புச் சாதன விருதினை யான் பெற்றேன். இதனால் மேற்படி மகாநாடுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புப் பெற்று இவ்விரு மகாநாட்டு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன்.

எனக்கு இவ்வகையான ஒரு விருது கிடைப்பதில் 'தொண்டன்' பத்திரிகைத் துறையும் 'புதிய உலகம்' கத்தோலிக்க நிகழ்ச்சியும் ஆதாரமாக இருந்தது என்பதையும் இவற்றில் ஈடுபட அதிகளவில் ஊக்கம் கொடுத்த மலர்வேந்தனுக்கும், அருட்திரு C. P. இராஜேந்திரம், அருட்திரு. றொபட் கிங்ஸ்லி ஆகியோர்களுக்கும் இவைகளில் தொடர்புகளை ஈட்டித் தந்த இயேசுசபை இளைஞர் ஆய்வு நிறுவனத்தின் (The Jesuit & Institute & youth Concerm) இயக்குனர், அருட்திரு. போல் சற்குணநாயகம் அவர்கட்கும் சிறப்பாக எமது ஆயர் அவர்கட்கும் என் மனம் உவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேசில் தூதுவராலயம் எம்நாட்டில் இல்லாத காரணத்தினால் மகாநாட்டிற்கான எனது பயணம் மிக நீளமானதும் கூடிய அனுபவங்களைப் பெற்றுத் தந்தது என்பதையும் பெருமையுடன் கூறிக் கொள்கின்றேன். இவ்வகையில் சுவிற்சலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் தங்கியிருக்கக் கூடிய வாய்ப்புக்களையும் பெற்றேன். (சுவிற்சலாந்து, பிரான்ஸ், பிரேசில் ஆகிய நாடுகளினது சிறப்பம்சங்களைப் பின்னர் விரிவாக எழுத விரும்புகின்றேன்)

பிரேசிலின் சர்வதேச விமான நிலையங்களில் ஒன்றான சாவோ - பவுலோ (Sao - Paulo) விமான நிலையத்தில் செப்ரெம்பர் 19ந் திகதி காலை 7.30 மணிக்கு வந்து இறங்கினேன். என்னுடன் UCIP யின் பொதுச் செயலாளர் அருட்திரு. புருனோ கோல்ற்ஸ் அவர்களும் பயணம் செய்தார்.

மகாநாட்டுக்கு வருகை தந்தவர்களை வரவேற்க பிரேசில் கத்தோலிக்க பத்திரிகையாளர் அமைய உறுப்பினர்களில் ஒரு குழுவினர் விமான நிலையத்தில் செப்ரெம்பர் 18ந் திகதியிலிருந்து காத்திருந்தனர். உலகெங்கும் இருந்து வரும் உறுப்பினர்களை அழைத்துச் செல்ல விசேட பேரூந்துகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

மகாநாடுகள் கம்பஸ் டி ஜோர்டா (Compos de Jordao) என்னுமிடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததால், அங்கு செல்வதற்கான பிரதான சாலை ஊடாக அமைந்துள்ள முக்கியமான இடங்களைத் தரிசிக்கும் வகையில் விமான நிலையத்திலிருந்து 40 பேர் கொண்ட குழுவினரை, ஒவ்வொரு பேரூந்தும் ஏற்றிக் கொண்டு, கம்பஸ் டி ஜோர்டா நோக்கிப் புறப்பட்டது.

## கம்பஸ் டி ஜோர்டா (Compos De Jordao)

கம்பஸ் டி ஜோர்டா எனப்படும் இடம் சாவோ - பவுலோவிலிருந்து வடக்காக 184 கி. மீற்றரில் அமைந்துள்ளது. ரியோ டி ஜெனிரோவிலிருந்து 359 கி. மீற்றர் தூரத்தில் உள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து 1628 மீற்றர் உயரமான 'மன்ரிக்கியூரியா' (Mantiqueria) மலைத் தொடரில் உள்ள மேட்டு நிலமாகும். மிகுந்த குளிரான காலநிலையைக் கொண்டது. உல்லாசப் பயணத் துறையின் பிரதான நகரமாகவும் காணப்படுகிறது. நகரில் எங்கும் பிரதான வீதிகளில் கொட்டல்களும் விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. மகாநாட்டிற்காக பல கொட்டல்கள் மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. மகாநாட்டு மண்டபம் நகரிலிருந்து 12கி. மீற்றர் தூரத்தில் அமைந்திருந்தது.

செப்ரெம்பர் 19, 20, 21, 22 ஆகிய தினங்கள் சர்வதேச இளம் பத்திரிகையாளர் மகாநாடும் செப்ரெம்பர் 23 தொடங்கி 27ந் திகதி வரை சர்வதேச கத்தோலிக்க பத்திரிகையாளர் மகாநாடுமாக நிகழ்ச்சி நிரல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

## சர்வதேச இளம் பத்திரிகையாளர் மகாநாடு (International Network fo Young Jounalists world Convention)

சர்வதேச இளம் பத்திரிகையாளர் அமைப்பு ஏற்கனவே குறிப்பிட்டது போல் சர்வதேச கத்தோலிக்க பத்திரிகையாளர் அமையத்தின் (UCIP) அனுசரணையின் கீழ் தான் இயங்குகிறது. இதன் காரியாலயமும் ஜெனிவாவில்தான் உள்ளது

உலகின் 97 நாடுகளிலிருந்து 1400 இளம் பத்திரிகையாளர்களை இவ்வமைப்பு கொண்டுள்ளது.

சர்வதேச இளம் பத்திரிகையாளர் அமைப்பின் உலகமகாநாடு செப்ரெம்பர் 19ந் திகதி மாலை இரவுணவுடன் ஆரம்பமானது. சுயேச்சையான கருத்துப் பரிமாற்றம், பிரதிநிதிகளின் அறிமுகம், நட்புறவு, தொடர்பு இவற்றிற்கு இந்தநாளும், அடுத்த நாளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

இம் மகாநாட்டிற்கு 70ற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 250க்கும் மேற்பட்ட இளம் பத்திரிகையாளர் சமூகமளித்திருந்தனர்.

செப்ரெம்பர் 20ந் திகதி காலை 10.00 மணிக்கு கம்பஸ் டி ஜோர்டா ஆளுநர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திலுள்ள (Govenor Palace) ஆலயத்தில் கூட்டுத்திருப்பலி இடம் பெற்றது.

கூட்டுத்திருப்பலி தாவுத்தே (Tavutte) ஆயரின் தலைமையின் கீழ் இடம்பெற்றது. திருப்பலி போர்த்துக்கீச மொழியில் இடம் பெற்றது. திருப்பலியின் போது பாடல்கள் இடம் பெறும் போதெல்லாம் கைதட்டல்கள் மெல்லிய நடனங்கள் அமைந்திருந்தன. அதேவேளை சமான (அன்பு) முத்தப் பரி மாற்றங்கள் கணிசமானளவு இடம்பெற்றன.

திருப்பலியைத் தொடர்ந்து மதிய உண விற்காக இளம் பத்திரிகையாளர்கள் தத்த மது கொட்டல்களுக்கு விரைந்தனர்.

(தொடரும்)

# உயர்விலும் தாழ்விலும் இறைவன்

கடந்த ஒக்டோபர் மாதத்தில் அமெரிக்கா வில் மறைந்த நகைச்சுவை நடிகர் 'சார்லி சப் ளினின்' கலையுலகப் பங்களிப்புத் தொடர் பாக ஒரு விழா நடந்தது. ஏனெனில் இம்மா தத்திலேயே 'சப்லின்' மொத்த உலகிற்கும் பேப்பஸ்' (Purpose) திரைப்படத்தின் மூலம் அறிமுகமானார். இவ்வேளையில் அவர் வாழ் வில் நடந்ததான சம்பவமொன்று வாசகர்க ளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

'சார்லிசப்லின்' பிரித்தானியாவிலிருந்து அமெரிக்காவுக்குச் சென்று பல வருடங்களாகி விட்டன. இப்போது அவர் புகழ்பெற்ற நடி கர். அந்தத் தகுதியிலும் அவருக்குத் தான் பிறந்து வளர்ந்த ஊரைப்பார்த்துவிட வேண் டுமென்ற ஆசை வெளிக்கிளம்ப நெருங்கிய நண்பனொருவனுடன் பிரித்தானியாவிற்குக் கிளம்பி வந்துவிட்டார். பிரித்தானியா வந்த போது பிரமாண்டமான வரவேற்பும், ஐந்து நட்சத்திரக் கட்டிடத்தில் தங்கவும் ஏற்பாடு செய்தார்கள். பத்திரிகை நிருபர்களினதும், புகைப்படப்பிடிப்பாளர்களினதும் காலடியோ சைகள் தேய்ந்ததின் பிற்பாடு, 'சப்லின்' நண் பரை அழைத்துக்கொண்டு கட்டிடத்தின் பின் புறவழியாக வண்டியொன்றை வாடகைக்கு அமர்த்தி, நகரின் பிற்போக்கான ஒரு இடத் திற்குச் செலுத்தச் சொன்னார்.

ஒரு இடம் வந்ததும் நண்பரிடம் ''இது தான் நான் பிச்சையெடுத்த இடம்'' என் றார். நண்பருக்கோ வியப்பு, 'சப்லினோ' பழைய நினைவுகளில் ஊறிப்போனவராக இன்னுமோர் இடத்தைக் காட்டி ''இங்கே தான் குளிரின் விறைப்பில் பல குழந்தைக ளுடன் ஒதுங்கிக் கிடந்தேன்'' என்றார். கேட்க நண்பருக்கோ கண்களில் நீர் திரை யிட்டது. ''இதோ நாங்கள் வசித்த வீடு'' என இன்னுமோர் குடிசையைக் காட்ட நண் பருக்குத் தலைசுற்றியது. 'சப்லினோ' தொடர்ந்து 'என்னுடைய தாயார் நோயுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது நானும் என் சகோதரனும் முன் கதவைப் பூட்டியே வைத்திருப்போம். நீரையே உணவாகக் குடித்துவிட்டு யன்னல் வழியாக இறங்கிப் படுப்போம், ஏனெனில் வீட்டுக்காரனுக்கு வாடகை கொடுக்க எங்க ளுக்கு வழியில்லை, அவன் முன்பக்கம் பார்த் துவிட்டு யாருமில்லையென எண்ணிப் போய் விடுவான்' கேட்ட நண்பர் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது.

உடனே 'சப்லினும்' கண்கலங்கியவாறு ''ஆனாலும் அப்படியான நிலையில் வாழ்ந்த என்னை இறைவன் இப்படி உயர்த்தி வைத் திருப்பதையெண்ணி அவரை நன்றியுடன் நினைக்கிறேன்'' என்றார்.

வாழ்க்கை எனும் அச்சாணியில் துன்ப மும், இன்பமும் சகடச்சக்கரம் போல மாறி மாறி வருவதை அன்று 'சார்லிசப்லின்' உணர்ந்திருந்தபடியால் இறைவனை தாழ்வி லும் வாழ்விலும் நினைத்து உயர்ந்தார். இதில் இறைவனை நினைப்பது தொடர்பாக எமது பங்களிப்பு எவ்வளவில் உள்ளது என் பதானதொரு நியாயக் கேள்வியை நமக்குள் நாமே கேட்டுக் கொண்டால், தற்கால சூழ் நிலையில் எத்தகைய பதிலை அளிப்பவர்க ளாக இருப்போம்!?

★ சுரேஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அத்தியாயம் - 10

அமலாவுக்கு எல்லாம் ஆச்சரியமாகவேயிருந்தது. ஜஸ்ரின் தானா இப்படிப் பேசுகிறான் என்றொரு சந்தேகம். இருந்து இப்படியொரு அருமையான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவனைத் தன் எண்ணத்திற்கு இசைய வைத்துவிட வேண்டும் என்று

ஜஸ்ரின் ரொம்ப நன்றி... இப்பதான் என் வாழ்க்கையில் எங்கோ தூரத்தில் ஒரு ஒளி தெரிவது போல் ஒரு உணர்வு.

'உங்களிடம் ஒன்று கேட்பேன் செய்வீர்களா......?

என்ன... உடனேயே திருமணம் செய்யச் சொல்லியா.

சீ... நோ... நோ... நோ ஏன் உங்கள் எண்ணம் இப்படிச் செல்கின்றது. உங்களை எப்படி அழைப்பதென்றே தெரியவில்லை,

'ஜஸ்ட், ஜஸ்ரின்'

'அப்பா நீங்கள் ஒரு புது விதமான மனிதர்.

'எபவ் த அவறேஜ்......' எண்ணம் மட்டும் பெரிது.

'அப்படியிருக்க வேண்டும் என்றுதானே நீ அடிக்கடி கூறுவாய்'

'பகிடியை விட்டு விட்டுக் கூறுங்கள் ஜஸ்ரின்...... பிளீஸ் செய்வீர்களா......?

நிச்சயமாக முடிந்தால் செய்வேன்.

அப்பப்பா...... மலையைக் கூட அசைத்து விடலாம் போல் இருக்கு... இந்த மனிதனை அசைப்பது அவ்வளவு சுலபமல்ல. போயும் போயும் எனக்கு இந்த மனிதன் மேல் ஆசை வந்ததே... என் எஞ்சிய வாழ்க்கையும் சோகத்தில் முடிய வேண்டும் என்றா... இந்த ஆளுக்கு இதயமே கிடையாது போல் இருக்கு. என்மேல் கொஞ்சம் அன்பைச் செலுத்தினால் என்ன குறைந்து விடும்..... இந்த ஆளோட பேசவே மனதுக்கு ஏதோ செய்யுது.. பரவாயில்லை இனி இதெல்லாம் பற்றி யோசிக்க காலம் கடந்து விட்டது. ம்! எதற்கும் கேட்டுப் பார்ப்போம். என்று நினைத்தவளாய்!

ஜஸ்ரின் நீங்கள் சர்ச்சுக்கு வரவேண்டாம் சுவாமியையாவது சந்தித்துப் பேசலாம் அல்லவா......?

'பேசி...

'அவரின் ஆசீர்வாதத்தைப் பெறலாம்' ஜஸ்ரின் நான் இன்று இவ்வளவு நிம்மதியோடு வாழ்வதற்குக் காரணமே எனது ஜெபமும் சுவாமிமார்களின் ஆசியுந்தான்.

'இயேசுவானர் தேவனுடைய குமரனென்று அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறான். அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்.

'யோவான் அதிகாரம் நான்கு பதினைந்தாம் வசனத்தைச் சற்று வாசித்துப் பாருங்கள். இந்தாங்கோ பைபிள்.

ஜஸ்ரின் அவளை ஆச்சரியத்தோடு நோக்குகிறான்.

'அப்போ நீ இதுவரை படித்துக் கொண்டிருந்தது பைபிள்!...

ஆம்... அதுதான் என் நண்பன்.. என் வழிகாட்டி அதனாற்தான் உங்களுக்கும் ஒரு வழிகாட்டி தேவை என்கிறேன்.

நோ அமலா... எனக்கு வழிகாட்ட வேண்டிய நேரம் தவறி விட்டது இப்போ நான் செல்லும் வழி அதாவது எனக்குக் காட்டப்பட்ட வழி சரியோ தவறோ நான் அது நீட்டுக்கு நடக்கக் கடமைப்பட்டுள்ளேன். அதை என்னால் மாற்ற முடியாது. மாற்றும் உரிமையும் எனக்குக் கிடையாது.

நீங்கள் கூறுவது ஒன்றுமாக எனக்குப் புரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிகிற காலம் வரும் போது புரியும் என்று உனக்குப் பலமுறை கூறியுள்ளேன். ஆமாம்! எங்கட பெரிய கிளாக்கரிட மகனைப் பிடித்தது போல எத்தனையோ பேரைப் பிடிக்கிறார்கள். அதிர்ஷ்டசாலிகள் வெளியே விடுவிக்கப்படுகிறார்கள். துரதிர்ஷ்டசாலிகள் உள்ளேயே மரித்துப் போய் விடுகிறார்கள். இது எனது சுவிஷேசம்.

ஜஸ்ரின். பிளீஸ் நீங்கள் சர்ச்சுக்கு வரவேண்டாம் சுவாமியிடமும் போகவேண்டாம்... ஆனால் தயவுசெய்து எமது மதத்தைக் கேலி செய்யாதீர்கள்.

அமலா...... யூ ஆர் மிஸ்ரேக்கன். ஆமாம் என் அர்த்தத்தை நீ தப்பாக விளங்கி விட்டாய். நான் கோயிலுக்குப் போவதில்லை. ஆனால் கிறிஸ்துவின் மேல் எனக்கு உன்னைவிட அதிக நம்பிக்கை இருக்கிறது என்பது என் வாதம். நான் வெளியே இருந்தபடி கிறிஸ்துவைப் பிரார்த்திக்க என்னால் முடிகிறது. அவரை நான் விசுவாசிக்கின்றேன். ஆனால் அவரிடம் எதையும் எதிர்பார்த்தல்ல.

'மை கோட்... எனக்கு இவ்வளவும் போதும் ஜஸ்ரின். நீங்கள் சர்ச்சுக்கும் வரவேண்டாம். சுவாமியிடமும் போக வேண்டாம். உண்மைக்கிறிஸ்தவராக வாழ்ந்தால் அதுவே போதுமானது.

'சரி...... அமலா... இப்ப நம்ம சப்ஜெக்டை மாற்றுவோமா...?

ஓ... கே... ஜஸ்ரின்...

நான் கூறவந்தது என்னவென்றால் இப்ப நம் நாடு போகிற போக்கைப் பார்த்தால் மற்றவர்களைக் கைது செய்வதுபோல் தற்செயலாக என்னையும் கைது செய்தால் என்னை உன்னால் விடுவிக்க முடியுமா அமலா...?

உங்களை எதற்காகக் கைதுசெய்ய வேண்டும்..

இப்போ எல்லாம் காரணம் கூறிக் கொண்டா கைது செய்கிறார்கள்.. நேற்றெல்லாம் ஆட்களைக் கைதுசெய்தபோது சுவாமி காரணம் கேட்க என்ன காரணம் சொன்னார்கள்... சந்தேகத்தின் பேரில் என்றார்கள்.

'அதன் பேரில் என்னையும் சிலவேளை கொண்டு சென்றால்...

உங்களுக்கு ஒருநாளும் நல்லது வாயில் வரவேவராது.

அமலா...... உனது நம்பிக்கை வீண்போகக் கூடாது. ஆனால் வாழ்க்கையில் நாம் எதையும் எதிர்பார்க்க வேண்டும். அப்போ கவலையிருக்காது.

உங்களை நிச்சயம் பிடிக்க மாட்டார்கள். ஏனெனில் உங்களுக்காக நாள்தோறும் நான் ஆண்டவனை மண்டாடுகிறேன்.

அப்போ... அதிலும் சுய நலந்தான்... சரி தற்செயலாகப் பிடித்து விட்டார்கள் என்று சொல்வோம்... நீ என்ன செய்வாய்...

கர்த்தரிடம் ஓடுவேன்...

நீ சுவாமியிடம் ஓடுவேன் என்று கூறியிருந்தால் அதை நான் ஒத்துக் கொண்டிருப்பேன்... ஏனெனில் சுவாமி தான் உடனடியாக வருவார்

'சரி அந்தப்பேச்சை விடுங்கள். எப்படியாவதுஉங்களை விடுவிக்க என் உயிரைக்கொடுத்தாவது முயற்சிப்பேன். இது சத்தியமான வாக்கு ஜஸ்ரின்.

'எனக்குத் தெரியும் அமலா.. நீ எனக்காக உயிரையும் கொடுப்பாய் என்பதை நீ கூறுமுன்பே நான் அறிந்து வைத்திருந்தேன். இருந்தாலும் நாம் எவ்வளவு விசுவாசிகளாக இருந்தாலும் எமது வாழ்க்கையில் சில விடயங்கள் எம்மையும் மீறி நடந்து விடுகின்றன. அதனாற் தான் அப்படி ஒன்று நடந்தால் என்றேன்

'ஜஸ்ரின் பிளீஸ் என் மனதைக்குழப்பாதீர்கள்.

'யூ ஆர் வெறி சென்சிற்றிவ்' அமலா நான் நடந்தால்

அமெரிக்காவில் ஆண்டுதோறும் 10 இலட்சம் பெண்கள் திருமணம் ஆகாமலே தாய்மை அடைந்து விடுகிறார்களாம். இதனால் திருமணமாகாத பெண்களுக்கென்று ஓர் இயக்கம் அமெரிக்காவில் தோன்றியிருக்கிறது. 'நல்ல நண்பர்கள் அதெல்லாம் திருமணத்துக்குப் பின்பு வைத்துக் கொள்ளுங்கள் என்பது இதன் குறிக்கோள். இதன் தொடக்க விழாவுக்கு அமெரிக்க அதிபர் புஷ்ஷின் மனைவி பார்பரா புஷ் தலைமை தாங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுதான் கூறினேன். சில வேளை நடக்காமலும் விடலாம். அப்படி நடக்கும் பட்சத்தில் ஒரு சில விடயங்களை பற்றி உன்னோடு கலந்தாலோசிக்க விரும்புகிறேன். உனது பங்களிப்பை எதிர்பார்க்கிறேன். ஏனெனில் எனக்குப் பெற்றோர் இல்லை. உடன் பிறப்புக்கள் என்று எவரும் இல்லை. உறவினர் ஒருவர் இருவர் உள்ளார்கள். அவர்களும் தேவை நோக்கி வருபவர்கள் என்னைப்பற்றி அக்கறை கொள்ளத் தற்போது உன்னைவிட எனக்கு வேறு யாருமில்லை என எண்ணுகிறேன்.

ஜஸ்ரின்!... நான் மிகவும் அதிர்ஷ்டசாலி. இன்றுதான் அதாவது இந்த நிமிடம்தான் உங்கள் உள்ளத்தை என்னால் சரியாகப் புரிய முடிந்தது. நீங்கள் கூறியநேரம் இப்போது தான் வந்திருக்கிறதுபோலும் நான் ரொம்பவும் பாக்கியசாலி. இனி எனக்கு என்ன நடந்தாலும் அதையிட்டு நான் கவலைப்படப்போவதில்லை. நீங்கள் எதையும் என்னுடன் பகிர்ந்து கொள்ளலாம் ஜஸ்ரின்.

'ஓ... கே... நான் உங்களுக்கு ஒரு அன்புளிப்பு சற்று முன் தந்தேன் அல்லவா? தயவுசெய்து முதலில் அதைத் திறந்து பாருங்கள்.

ஏன் ஏதாவது தின்பண்டமா? சரி இருவருமே பங்கிட்டுக் கொள்ளலாம்.

ஜஸ்ரின் சிரித்தான். அமலா பொட்டலத்தை எடுத்து விரித்தாள்.

அதற்குள் உணவுப் பதார்த்தத்துக்குப் பதிலாக...சில பத்திரங்கள் சுருளாகக் கட்டி வைக்கப்பட்டிருந்தன.

அவள் கேள்விக்குறியுடன் அவனைப் பார்த்தாள்.

விரித்துப் பாரன் அமலா

உயில்கள் போற் தோற்றமளித்த அவற்றை அவள் மிகவும் மரியாதையோடு கையில் எடுத்து விரித்துப் பார்த்து விட்டு அவற்றைப்படார் என அவன் மடிமீது போட்டாள்.

இதெல்லாம் என்ன ஜஸ்ரின்...எனக்கு எல்லாம் குழப்பமாக இருக்கிறது என்றாள்.

உனக்கு எளிதில்எதுவுமே புரிவதில்லைத்தான் நீ படித்தவள்தானே...அப்ப ஏன் அவற்றைக் கையில்எடுத்துக் கொஞ்சம்படித்துப் பார்க்கக்கூடாது பிளீஸ் படித்துப் பார் அமலா.

ஆண்டவரே... இது என்ன கொடுமை... உங்கள் சொத்துக்களை எல்லாம் என் பெயருக்கு மாற்றி எழுதி விட்டீர்களே இதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்.

'இவற்றுக்கெல்லாம் இனி நீ தான் உரிமையாளி' முடியாது...முடியாது ஜஸ்ரின்... பிளீஸ் என்னை வற்புறுத்தாதீர்கள்.

'பட்வை...ஏன் மறுக்கிறாய் அமலா... இதற்குப் போய் யாராவது மறுப்புத் தெரிவிப்பார்களா' எனக்கு வேண்டியது, நீங்கள்... நீங்கள் தான் ஜஸ்ரின்.. நொட் திஸ் வெல்த் எனக்குச் சொத்து வேண்டாம்.

-தொடரும்

மாவீரன் அலெக்சான்டருக்கு 12 வயது இருக்கும். அப்போது அரண்மனைக் குதிரை ஒன்று மிரட்சியினால் அனைவரையும் அலைக்கழித்தது. வீரர்கள் பலர் அக்குதிரையை அடக்க முயன்றும் முடியவில்லை. இதைப் பார்த்துக் கொண்டிருந்த சிறுவன் அலெக்சான்டர், முன் சென்று குதிரையைத் தான் அடக்குவதாகக் கூறவும் அனைவரும் சிரித்தனர். வீரர் பலரால் அடக்க முடியாத குதிரையை இச்சிறுவனாலா அடக்க முடியும்? என்று எள்ளி நகையாடினர். சிறுவனோ குதிரையின் அருகில் சென்று குதிரையை அது நின்று கொண்டிருந்த திசையினின்று அதன் எதிர்த்திசைக்கு திருப்பினான். உடனே குதிரையும் அடங்கியது. இந்நிகழ்ச்சியைக் கண்டு மலைத்த சிலர் அலெக்சான்டரிடம் காரணம் கேட்ட பொழுது குதிரை சூரியனுக்கு நேர் எதிர்த் திசையில் நின்றிருந்ததால் அதுதன் நிழல் தனக்கு முன்னிருப்பதைக் கண்டு மிரண்டு இருந்ததாகவும் குதிரையைச் சூரியனை - அதாவது ஒளியை நோக்கித்திருப்பியதும் அது அடங்கப் பெற்றதாகவும் கூறினான்.

இறைவன் ஒளி என்றறிந்து நாம் மனம் என்னும் அடங்காத குதிரையை அவ்வொளியை நோக்கித் திருப்பினால் அது அமைதியுறும் என்பதனையும் புரிந்து கொள்ளுதல் நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசுவாசத்திற்கும் தோழமைக்கும் பணிபுரிய......

### திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்

# ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் திருவருகைக்கால சுற்றுமடலின் (1992) சுருக்கம்

எதிர்வரும் 1993ம் ஆண்டில் எமது மறை மாவட்டம் திருகோணமலை மேற்றிராசனம் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட நூறாவது ஆண்டின் நிறைவினைக் கொண்டாட எண்ணியுள்ளோம். 1893 -ம் ஆண்டு ஓகஸ்ட் 25ம் திகதி திருத்தந்தை 13ம் சிங்கராயரால் தனி ஒரு மாவட்டமாகப் பிரிக்கப் பட்டது.

இம் மாபெரும் நிகழ்வை நாம் தகுந்த முறையில் கொண்டாட வேண்டும். முதலாவதாக நாம் பெற்ற விசுவாசம் என்னும் கொடைக்கு நன்றி கூறுவதாக அமைதல் வேண்டும். அதே வேளை இவ்விசுவாசத்தை எம்மத்தியில் பரப்பவும், வளர்க்கவும் தம்மை அர்ப்பணித்த அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

எமது மறை மாவட்டத் திருச்சபைக்கு இன்றைய கால கட்டத்தில் எழும் பல சவால்களுக்கும், பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து, எமது திருச்சபையைப் புதுப்பித்து நற்செய்திக்கு ஏற்றவாறு வாழ்ந்து அந் நற்செய்தியை மற்றவருக்கும் பரப்ப பரிசுத்த ஆவியின் துணையோடு செயல்படுவது எமக்கு இறைவன் தந்த கடமையாகும்.

எனவே, அனைவரும் இது இறைவனுக்கு ஏற்புடையதும் அருள் நிறைந்த காலமுமாக உணர்வது அவசியம். இந்த ஆண்டில் எம் விசுவாசத்தைப் புதுப்பித்து நற்செய்தியின் கருவிகளாக மாறி மறை பரப்புவதிலும் அதை வளர்ப்பதிலும் கூடிய ஈடுபாடு கொள்ள வேண்டும்.

விசுவாசத்தைப் பரப்பும் பணி இக்காலத்துக்கேற்ற புதிய உத்வேகத்தையும், புதிய அணுகு முறையையும் கொண்டதாக இருக்க வேண்டும். 'மறைபரப்புப் பணியின் முதல் வடிவம் சான்று பகர்தலே.'(மீ . ப . 42)

எமது தலத்திருச்சபையை உற்று நோக்கும் போது ஒரு தேங்கிய நிலையை நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. விசுவாச வாழ்வில் வளராமல் பலர், விசுவாச வாழ்வில் அக்கறை இல்லாத சிலர், விசுவாசத்தை விட்டு விலகி வாழும் வேறு சிலர், பிறசபைகளுக்குச் செல்லும் இன்னுஞ் சிலர், இவைகளுடன் எம் சமூகம் பல இன்னல்களுக்கு மத்தியில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

இந்தச்சூழ்நிலையில் தான் நாம் யூபிலி ஆண்டைக் கொண்டாடுகின்றோம். உங்கள் வாழ்க்கை வளம் மிக்கதாக இருக்க அடிக்கடி நீங்கள் திருவருட்சாதனங்களை அணுகி வாழ வேண்டுமென நாம் உங்களை அழைக்கின்றோம். மேலும் அயலவர் மேல் நாம் கொண்டுள்ள அக்கறை சிறப்பாக இக்கட்டான இக்காலகட்டத்திலே அதிகரிக்க வேண்டும், நாம் ஒவ்வொருவருமே நற்செய்தியை எடுத்துரைக்கும் பணியில் தனியாகவும் கூட்டாகவும் பொறுப்புள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

இந்த எண்ணங்களும். செயல் திட்டங்களும் வெற்றிபெற பரிசுத்த ஆவியானவரே முன்னின்று வழிநடத்த வேண்டுகிறோம். இவ் யூபிலி ஆண்டு நம் ஒவ்வொருவரின் உள்ளத்தையும் தொட்டு நாம் விரும்பும் மனமாற்றத்தைத் தரவேண்டுமென இறைவனை மன்றாடும்படியாக உங்களைக் கேட்டுக் கொள்கின்றோம். இது தொடர்பாக மகா ஞானவொடுக்கம் எனும் விசேட நிகழ்ச்சியை அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த குருக்கள் மூலமாக ஒழுங்கு செய்துள்ளோம். 1993ம் ஆண்டை மனமாற்றத்திற்கும், மறைபரப்புப் பணிக்கும் உரிய, ஆண்டாக நாம் இதன்வழி பிரகடனம் செய்கின்றோம்.

இந்த நூற்றாண்டை 1993 ம் ஆண்டு ஜனவரி மாதம் 10ம் திகதி - அதாவது 'திருக்காட்சி' விழாவன்று திருகோணமலை புனித மரியாள் பேராலயத்தில் விசேட திருவழிபாட்டுடன் ஆரம்பித்து வைப்போம்.

மனுவுருவெடுத்து நம் மத்தியில் வரவிருக்கும் இறைமகன் உங்களைத் தம் அருளால் நிரப்பியருள்வாராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலன் வரமாட்டான்

எஸ். ஜெயராஜ்



ஓட்டடை நீக்கிக்
கோவிலைப் பூசிக்
கழுவியும் வரமாட்டான் - ஒலி

பெருக்கிகள் பூட்டி
கருக்க லிற் கூவி
அழைத்தும் வரமாட்டான்

புதுப் புது இசையில்
பாடல்கள் இயற்றிப்
பாடியும் வரமாட்டான்; பாலன்

கூடுகள் கட்டிக்
காத்திருந் தாலும்
நிச்சயம் வரமாட்டான்.

புத்துடை செருப்பு
புது நகை நறுமணம்
சூடுவாய்; வரமாட்டான்

சாமத்துப் பூசை
வேஷங்கள் போட்டு
ஆடுவாய்; வரமாட்டான்

உள்ளவன் கைகள்
தேடி நீ பற்றிக்
குலுக்குவாய் ; வரமாட்டான்

உண்மையைத் தோண்டிப்
புதைத்த கல்லறை
உன்னிடம் வரமாட்டான்.

பசியென பிணியென
துயருடன் வந்தான்
அவனை நீ காணவில்லை

பனியென புயலென
மழையென வந்தான்
அவனை நீ ஏற்கவில்லை

மதியென கதியென
விதியென வந்தான்
அவனை நீ உணரவில்லை

இனியவன் வரும் வரை
காத்திரு மனமே
கொடுத்து நீ வைக்கவில்லை.

மனித உடலில் பி53 என்ற மரபுக் கூறு தான் தேவையற்ற செல்வளர்ச்சியைத் தடை செய்கிறது. இந்த மரபுக்கூறு பாதிக்கப்பட்டால்தான் புற்றுநோய் தோன்றுகிறது, இந்த மரபுக்கூறில் கோடான் 249 என்றுகூறப்படும் குறிப்பிடப்பட்ட பகுதி பாதிக்கப்பட்டால் கல்லீரல் புற்றுநோய் உண்டாகிறது என்று மருத்துவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழ்மையும் வறுமைத்துயரும் வாழ்வின் தடைக்கல்லா?

ஜே. அருளப்பு

வறுமைப் பிணியில் உழன்று வாழ்க்கையே கசந்து போன பல இளநெஞ்சங்கள் நம் மத்தியில் விரக்தி மனப்பான்மையில் அலைவதை நாம் அன்றாடம் காண்கின்றோம். அப்படிப் பட்ட துயர உள்ளங்களுடன் நாம் உரையாடினால் அவர்கள் கூறும் விடயம் நமது உள்ளத்தையே உருக்குவதாக அமையும். படித்து முன்னேற வறுமை ஒரு தடை, பசிக்கு வயிறார உண்ண ஏழ்மை ஒரு தடை, இளம் வயதிலே பெற்றோர்களை இழந்து தவிப்பது வாழ்வுக்கு ஒரு தடை. சகல முயற்சிகளிலும் தோல்வியடைவது வெற்றிக்கு ஒரு தடை, எல்லாத் தடைகளுக்கும் மூலகாரணமாக இருப்பது வறுமை என்பதை நாம் உணரமுடிகின்றது.

என்னிடம் பணம் இல்லையே! நான் எவ்விதம் உயரிய இலட்சியங்களை எண்ணுவது? அவ்விதம் எண்ணினாலும் பொருள் இல்லையானால் அவை எல்லாம் கைகூடுமா? என்று கலங்குபவர்களும் நம் மத்தியில் அனேகர் உள்ளனர்.

இவ்வறுமைப் பேயை விரட்டி வாழ்வில் பல வெற்றிகளைக் கண்ட பல இலட்சிய வாதிகளையும் நாம் மறந்துவிடல் ஆகாது; என்றும் மறக்கவும் முடியாது. இப்படியானவர்களின் வாழ்க்கை விரக்தியுற்ற இளைஞர்களுக்கு ஒரு புத்தூக்கத்தையளிக்கும் என்பதால் அவர்களை நாம் ஒருமுறை எண்ணிப் பார்த்தல் நலம்.

**ரூஸோ**

உலக வரலாற்றையே திருத்தியமைத்தவர்களில் பெரும்பாலோர் ரூஸோ போன்ற ஏழைகள் தாம் என்பதை நாம் அறிவோமா? என்னுடைய துன்பங்களில் முதல் துன்பம் நான் பிறந்ததுதான் என்று பிரெஞ்சுப் புரட்சியின் ஆன்மா போன்று விளங்கிய ரூஸோ ஒருமுறை கண்ணீர் விட்டுக் கதறினார். வறுமையின் கொடுமையால் அவரின் உள்ளத்தில் இருந்து கசிந்த சொற்களே இவை. இப்படிப்பட்ட ரூஸோ வறுமையை விரட்டி சிறந்த பேராசிரியராகவும், முடியாட்சியை ஒழித்து குடியாட்சியை நிறுவிய புரட்சித் தலைவராகவும் மாறியதை உலகவரலாறு எடுத்து இயம்புகின்றது. அவர் எழுதிய சமுதாய ஒப்பந்தம் உலக மக்களின் உரிமைச் சாசனமாகத் திகழ்கின்றது என்பதை நாம் அறிவோமா?



**கார்ல் மாக்ஸ்**

ரஷ்யா நாட்டின் அரசியல் வேதமாகத் திகழ்ந்த சமதர்மக் கொள்கையை உருவாக்கியவர் ஏழைகளின் ஏழையாக வாழ்ந்த கார்ல் மாக்ஸ் என்பதை நாம் அறிவோமா?

**ஹிட்லர்**

தனது வயிற்றுப் பசிக்காக வியன்னாத் தெருக்களில் வர்ணம் தீட்டி பணம் சேகரித்துக் காலங்கடத்தி வந்தவர் பின்பு ஜெர்மனியின் சர்வாதிகாரியானவர்தான் ஹிட்லர்.

**ஆபிரகாம்லிங்கன்**

புத்தகங்களைச் சொந்தமாகப் பணம் கொடுத்து வாங்கி வாசிக்க முடியாமல் வறுமை வாட்டியது. புத்தகங்களை இரவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்குவதற்காக வெகு தொலை தூரம் நடந்து சென்று இரவில் அடுப்பு வெளிச்சத்தில் தானே படித்து முன்னேறியவர். அமெரிக்காவைச் சுதந்திர நாடாகச் செய்து அந்நாட்டின் முதலாவது ஜனாதிபதியாக திகழ்ந்த லிங்கனை நாம் மறந்து விடுவோமா?

**ஐஸன் ஹோவர்**

கான்ஸால் நகரில் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டும், பசுமாடுகளை மேய்த்துக் கொண்டும் வாழ்ந்து வந்தவர். இரண்டாவது மஹா உலகப்போரில் மேற்கு அரங்கத்தில் உள்ள தரைப்படை, கடற்படை, விமானப் படை ஆகிய முப்படைகளுக்கும் மகாதளபதியாகத் தொண்டாற்றியவர் வேறுயாருமில்லை ஐஸன்ஹோவரேயாகும்.

**ரைட்சகோதரர்கள்**

சிறுவயதில் தெருக்களில் கிடக்கும் குதிரை, மாடு ஆகியவற்றின் எலும்புகளைப் பொறுக்கி எடுத்து உர உற்பத்தி நிறுவனத்திடம் கொடுத்து அவர்கள் கொடுக்கும் சிறு பணத்தில் வயிறு வளர்த்து வந்த இரட்டையர்கள் தான் பின்பு இன்று ஆகாயத்தில் பவனிவரும் ஆகாய விமானத்தைக் கண்டு பிடித்த ரைட் சகோதரர்கள் என்றால் நம்புவீர்களா?

**மேடம் கியூரி அம்மையார்**

பாரிஸ் பல்கலைக் கழகத்தில் கல்விபயிலும் போது பசிக்கொடுமை தாங்க முடியாது ஒரு தடவை அவர் மயங்கிக் கீழே விழுந்து விட்டார். ஆனால் பசி, வறுமை ஆகிய இவ் அல்லல்களுக்கு இடையே அவர்தம் இரசாயன ஆராய்ச்சியை மட்டும் விடவில்லை. இதன் காரணமாகப் பிற்காலத்தில் உலகம் போற்றும் பெருமை பெற்று 1903ம் ஆண்டில் பௌதீக ஆராய்ச்சிக்காவும், 1911ம் ஆண்டில் இரசாயன ஆராய்ச்சிக்காகவும் இருதடவை நோபல் பரிசு பெற்ற பெருமையையும் தன தாக்கிக் கொண்டவர்தான் ரேடியத்தைக் கண்டு பிடித்த மேடம் ஹியூரிஅம்மையாராகும்.

**கோடீஸ்வரர் ராக்பெல்லர்**

ஏழைக் குடிசையில் பிறந்தவர். குழந்தைப் பருவத்தில் ஒருபைசாவைத் தானும் கண்டறியாதவர். தான் காதலித்த பெண்ணின் தாயாரால் பிழைக்கத் தெரியாதவன் எனக் கூறி பெண் கொடுக்க மறுத்து விட்டநிலையில் உருழைக் கிழங்குகளை வெயிலில் காயவைத்து மணிக்கு 2 பென்ஸ் கூலி வாங்கி தனது வாழ்வை ஓட்டியவர். தனது பிற்காலத்தில் முப்பது கோடிப்பவுன்களுக்கு அதிபதியாகத் திகழ்ந்தவர் தான் கோடீஸ்வரர் ராக்பெல்லர்.

**அலெக்ஸாண்டர்டூமோஸ்**

ஆயிரத்து இருநூறு வால்யூம்களை தம் ஆயுட்காலத்தில் எழுதி பத்து இலட்சம் பவுன்களுக்கு மேல் பணம் ஈட்டிய ஓர் அதிசய ஆசிரியப் பெருந்தகையை நாம் அறிவோமா? அவர் எழுதிய முதலாவது நாடகம் நடிக்கப்படவிருந்ததைப் பார்க்கச் சென்ற போது அவரிடம் ஒரு கழுத்துப்பட்டி(ரை) கூட இல்லாததனால் காட்போட்டில் கழுத்துட்பட்டி போன்று வெட்டி அதை அணிந்து சென்றவர் தான் இலட்சாதிபதியாக வாழ்ந்த அலெக்ஸாண்டர்டூமோஸ்.

மேற்கூறிய பெரியவர்களுக்கு ஏழ்மையும் வறுமையும் தடையாக இருந்தனவா? இல்லை வெற்றிச் சிகரத்துக்கு ஏற்றிச் செல்லும் படிகளாகவல்லவா அவை இருந்துள்ளன. அவர்களுடைய உயரிய இலட்சியத்தின் ஒளியானது ஏழ்மைத் துயரங்களின் இருட்படலங்களைத் துளைத்துக் கொண்டு செல்லவில்லையா? பணம் இல்லையே என்று மனம் தளராது வெற்றி எதிர் கொண்டு நம்மை அழைக்கின்றது என்ற மனத்துணிவுடன் வீறு நடைபோட முயல்வோம்.

வாழ்க்கையில் மற்றவர்களுடைய துன்பத்தைத் துடைப்பதற்கு நம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும். நம் அன்பினால் அவர்கள் துன்பச் சுமையைக் குறைக்க முயல வேண்டும். இதைக் கூட நம்மால் செய்ய முடியவில்லையென்றால் நாம் எதற்காகத்தான் இந்த உலகத்தில் வாழ வேண்டும்.

ஜார் எலியட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 125 வது ஆண்டு நிறைவு விழாக்காணும் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி

ஜோ. நோமன் பல்தசார்

பிரித்தானியர் இலங்கையை ஆட்சி புரிந்த காலம். கல்விப்பணியில் கிறீஸ்தவ மிசனரிச் சங்கங்கள் குறிப்பாக யேசு சபையினர் அக்காலத்தில் முக்கிய பணியாற்றிக் கொண்டிருந்தனர். திருகோணமலை கல்வி வரலாற்றில் புனித சூசையப்பர் கல்லூரியின் வரலாறு இங்குதான் ஆரம்பமாகிறது.

1867ம்ஆண்டு திருகோணமலை புனிதசூசையப்பர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. கிறீஸ்தவ அமைப்புகளுள் ஒன்றான அமலமரித்தியாகிகள் (O. M. I.) இக்கல்லூரியை ஆரம்பித்தனர். தற்போதையபுனித மரியாள் பேராலயம்அமைந்துள்ள காணியில்தான் முதலில் புனித சூசையப்பர் கல்லூரிக்கு வித்திடப்பட்டது. இதன் ஸ்தாபகரும் முதலாவது அதிபருமாக அருட்திரு மேரி கீத்திங் O. M. I. (1867 - 1881) அடிகளார் கடமையாற்றினார். அவரைத் தொடர்ந்து 1882 தொடக்கம் 1901ம் ஆண்டுவரை அருட்திரு சாள்ஸ் மெனிற் O.M.I. அடிகளார் இரண்டாவது அதிபராகக் கடமையாற்றினார். இதன் பின்னர் 'யேசு சபையினர்' இப்பாடசாலையைப் பொறுப்பேற்று நடாத்தினர். தொடர்ந்து அதிபர்களாக கடமையாற்றியோர்.

| | | |
|---|---|---|
| அருட்திரு. சாள்ஸ் பொனல் | 1902-1911 | வரை |
| அருட்திரு. சால்ஸ் றிச்சாட் | 1912-1920 | ,, |
| அருட்திரு S. M சூசைமுத்து | 1921-1932 | ,, |
| அருட்திரு, A,E.A கிறெளதர் | 1932-1938 | ,, |
| அருட்திரு யூலியன் தைசன் | 1938-1947 | ,, |
| அருட்திரு குளோட். R. டெலி | 1947-1953 | ,, |
| அருட்திரு பீட்டர் பீச் | 1954-1955 | ,, |
| அருட்திரு ஜோன் J. ஹனி | 1955-1956 | ,, |
| அருட்திரு பெட்றிக் பீ. பொன்ட | 1956-1965 | வரை |
| அருட்திரு வின்சன்ட் ஞானப்பிரகாசம் | 1965 - 1968 | வரை |
| அருட்திரு ஆர். எப். யூஜின் ஜெ. ஹேர்பட் | 1969 - 1970 | வரை |
| அருட்திரு வின்சன் ஞானப்பிரகாசம் | 1981 - 1981 | வரை |
| திரு. அன்ரனி சாமிநாதன் | 1981- 1988 | வரை |
| திரு டி. எஸ். ஏ. வணசிங்க | 1988-1989 | வரை |

திரு .ஜே .எஸ் கைடிபொன்கலன் அவர்கள் 1989ம் ஆண்டு தொடக்கம் அதிபராக கடமையாற்றி வருகின்றார்.

1867ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புனித சூசையப்பர் கல்லூரி யேசு சபையினரால் தனியார் பாடசாலையாக இயங்கி வந்தது. அரசாங்கத்தின் தேசிய மயக்கொள்கை காரணமாக 1960ம் ஆண்டில் பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டது. ஆயினும் புனித சூசையப்பர் கல்லூரி 1970ஆம் ஆண்டு வரை தனியார் பாடசாலையாகவே இயங்கி வந்தது. 1970ம் ஆண்டு யூலை மாதம் 1ம் திகதி அரசாங்கத்திற்கு இப்பாடசாலை கையளிக்கப்பட்டது.

இக்கல்லூரியானது 1867ம் ஆண்டு காலப் பகுதியில் திருகோணமலை புனித மரியாள் பேராலய வளவில் இயங்கி வந்தது. 1950ஆம் ஆண்டில் தற்போது அமைந்திருக்கும் இடத்தில் புதுப்பொலிவு பெற்றது என்பதையும் மறக்க முடியாது.

புனித சூசையப்பர் கல்லூரியின் உன்னத நோக்கங்கள் சமத்துவத்தை வளர்ப்பதும், சகோதரத்துவத்தை பேணிக்காப்பதுமாகும். பாடசாலையை ஒரு சமுதாயமாக மாற்றி இளைஞர்களின் ஆற்றலை வளர்ப்பதும், தத்தமது சமயக்கோட்பாடுகளுக்கு இணங்க ஒழுகுவதையும், உபயோகமுள்ள பிரஜைகளை உருவாக்குவதுமாகும். இந்த உன்னத நோக்கங்களை செயல்படுத்தி எமது கல்லூரி 125ஆண்டு வரலாறு படைத்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கென ஒரு தனி இடம் வகுத்துஇன்று தலை நிமிர்ந்து நிற்கும் காட்சியைக் காணும் போது நாம் பெருமையடைகிறோம். 1992ம் ஆண்டில் எமது கல்லூரி 125ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் எமது கல்லூரியின் வளர்ச்சிக்காக கடந்த நூற்றாண்டு காலமாக அயராது உழைத்த யேசு சபைக் குருக்களை சிரம்தாழ்த்தி வணங்கும் அதேவேளை அருட்திரு யூஜின் J ஹேர்பட் அடிகளார் எமது கல்லூரிக்கு ஆற்றியுள்ள மகத்தான பணிகளை இச்சந்தர்ப்பத்தில் நினைவு படுத்துகின்றோம். எமது கல்லூரியை 125 வருட காலமாக வழிநடத்தி வந்த அதிபர்களையும், ஆசிரியர்களையும் இவ்வேளையில் ஞாபகப்படுத்துகின்றோம். அவர்கள் நடந்து வந்த பாதையில் கல்லூரியின் உன்னத நோக்கங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு இன்றைய அதிபர் திரு.ஜே.எஸ் கைடிபொன்கலன் அவர்களின் தலைமையில் இன்று செயலாற்றி வரும் ஆற்றல்மிகு ஆசிரியர்களும் உறுதி கொண்டு உழைத்து வருகின்றார்கள் என்பது உண்மை.

''எமக்குச் செல்வங்கள் எமது மாணவரே - அவர்கள்
நல்வாழ்வும் மேன்மையும் எமது இலட்சியம்.





## எப்படிக் கண்டு பிடித்தார்கள்!!

1847ம் ஆண்டு நவம்பர் திங்கள் 4ம் நாள் மருத்துவ வரலாற்றில் ஒரு மறக்க முடியாத நாள். மனிதாபிமானம் பிறந்த நாள். மனித குலம் இன்று அனுபவித்துவரும் இந்த அறுவை சிகிச்சைக்கு அச்சார மிட்ட நாள்.

அது ஒரு விசாலமான அறை. அறையின் மத்தியில் ஒரு மேசைகிடந்தது. மேசையின் மேல் சிறிதும் பெரிதுமாக பல போத்தல்கள் குவிந்துகிடந்தன. அறையில் சுற்றிலும் மரஅலுமாரிகளில் போத்தல்களும், குழாய்களும் அடைந்துகிடந்தன. மேசையைச் சுற்றி நான்கு பேர் அமர்ந்து கொண்டு ஒவ்வொரு போத்தலாக எடுத்துக் கொண்டிருந்தனர். இடையிடையே ஏதோ பேசிக்கொண்டார்கள். ஒரு போத்தலை எடுத்து முகர்ந்ததும் திடீரென்று சிறு பிள்ளைகளைப் போல் கூத்தும் கும்மாளமும் அடிக்கத் தொடங்கி விட்டார்கள். உடனே அனைவரும் அவரவர் இருந்த இடத்தில் அப்படியே அயர்ந்து தூங்குபவர்களைப் போல் மயங்கிச் சாய்ந்து விட்டனர்.

ஆனால், அவர்களுக் கெல்லாம் ஒவ்வொரு போத்தலாக எடுத்துக் கொண்டிருந்தாரே அவர் அதைக் கண்டு விட்டு நாய் போல் ஊளையிடத் தொடங்கி விட்டார். அவருக்கு என்னை ஆயிற்று? மற்றவர்கள் ஏன் மயங்கி விழுந்தனர் வெற்றி! வெற்றி! ஆம் எல்லாவற்றுக்கும் அதுதான் காரணம் அவர்கள் ஓய்வின்றி, உறக்கமின்றி மேற் கொண்டிருந்த ஆராய்ச்சியில் வெற்றி பெற்று விட்டார்கள். மயக்க மருந்தைக் கண்டு பிடித்து விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

✠ வீக்கேயெம்

● **மக்கத்துச் சால்வை**

எஸ் . எல் . எம் ஹனிபாவின் சிறுகதைத் தொகுதி இது. ஹனிபாவுக்கு இது முதல் தொகுதியேயாயினும் முழுமையானதாய் வந்துள்ளது. தான் வாழும் சூழலை மையமாகக் கொண்டு மரபை ஒட்டி பின்னப்பட்ட கதைகள், அவருக்கே உரித்தான சில பண்பியல்புகள் மிளிர சித்தரிக்கப்பட்டுள்ளன. சாதாரண ஒரு கடிதத்தையும் கவிநயத்தோடு எழுதும் அழகியல்வாதியான இவரின் வெவ்வேறு காலகட்டத்துக் கதைகள் 15 தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

பக்கங்கள் : 140 விலை : ரூபா 40/-

● **விடிவுகள் அடிவானில்**

கவிஞர் செ . குணரத்தினத்தின் 10 கதைகள் இத்தொகுப்பில் அடங்கும். அலைகடலோடு போராடும் சாதாரண கடற்றொழிலாளிகளின் ஏக்கங்கள், எதிர்பார்ப்புக்கள், ஏமாற்றங்கள் பற்றியும்; அவர்கள் அனுபவிக்கும் இன்னல்கள் பற்றியும் விபரிக்கும் வார்ப்புகள். அவ்வப்போது எழுதப்பட்டதாற்போலும் பெரும்பாலானவை ஒரே விசயத்தைக் கூறுவதுடன், நடமாடும் பாத்திரங்களும் ஒன்றாகவே காணப்படுகின்றன. தொகுப்பாக வரும்போது இக்குறைபாடு தூக்கலாகத் தெரிகிறது. இது தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

ஏற்கனவே இவரது ஏழு நூல்கள் வெளியாகியுள்ளன. அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன வெளியீடான மேற்படி தொகுதியில் எழுத்தாளர் பற்றிய மேலதிக தரவுகள் எதுவும் இல்லாதிருப்பது குறிப்பிடக்கூடிய ஒரு பிரதான குறைபாடு.

பக்கங்கள் : 74 விலை : 52/-

● **இல்லத்தரசி**

மட்டக்களப்பின் சிறு சஞ்சிகை வரலாற்றில் ''மலர்'' சஞ்சிகையின் மூலம் சாதனை படைத்த எழுத்தாளர் அன்புமணி இவரது சிறுகதைகளடங்கிய தொகுப்பே 'இல்லத்தரசி'. எழுத்தையும், எழுத்தாளரையும் சிநேகபூர்வமாக நேசிக்கும் இவரிடம் உள்ள பிரதான குறைபாடொன்றை இங்கு உரிமையுடன் சுட்டிக்காட்டுவது எனது கடமை எனக் கருதுகிறேன். தமிழகத்தின் ஆரம்ப இலக்கிய கர்த்தாக்களின் - குறிப்பாக 'கல்கி'யின் தாக்கம் இவரை வெகுவாகப் பாதித்துள்ளது. பிரதேச மொழி நடையையோ, மண்ணின் இயல்பையோ, படம் பிடித்துக்காட்ட ஏனோ இவரது பேனா தயக்கம் காட்டுகிறது.

'...இந்தக் கதைகளில் மண்வாசனை இல்லை; பேச்சு வழக்கு இல்லை; யதார்த்தம் கூட இல்லை...' என்று தன்னைத்தானே விமர்சிக்கும் 'தற்பாதுகாப்புக் கவசம்' அணிந்து தப்பிக் கொள்கிறார்.

விமர்சன அச்சம் காரணமாக இருக்குமோ என்னவோ? பழைய பாணி புதியவர்களுக்குப் போரடிக்காதா? பழைய சாதத்தைக்கூட இன்று புசிப்பவர்கள் எத்தனை பேர்? மாறுபட்ட ஒரு தொகுதியை எதிர்பார்ப்பது தவறாகாதே! தருவாரா?

'ஒரு தந்தையின் கதை' நூலுருவில்வந்த இவரது முதல் நாவலாகும் அடுத்து ஒரு நாவல் தர இருப்பதாக காற்றில் ஒரு சேதி.

பக்கங்கள்: 166 விலை: 60/-

● **சுவாமி விபுலாநந்தரின் தொல்லியல் ஆய்வுகள்**

எழுத்துலகிற்குப் புதியவராயினும் நுழை

> உறுதியுள்ள மனிதனுக்குக் கவலைகள் ஏற்படுவதில்லை- விவேகமுள்ள மனிதனுக்குக் குழப்பங்கள் உண்டாவதில்லை- தைரியமுள்ள மனிதனுக்கு அச்சம் உண்டாவதில்லை-
>
> **கன்பூசியஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலிலேயே ஒரு நூலை வெளியிட்டிருக்கிறார் செல்வி. தங்கேஸ்வரி கதிராமன். தான் பிறந்த மண்ணின் பிரதேச மணத்தை - வட்டார வழக்கை முறையாகக் கையாண்டு ஆக்க இலக்கியம் படைக்கத் துடிக்கும் இவரது பேனா முனை அவ்வப்போதைய நாகரிக ஆராய்ச்சியை விரிவாக எழுத வேண்டி ஒரு முன்னுரையாகவே மேற்படி நூலை எழுதியிருக்கிறது. இவர் முயற்சியை வரவேற்றுக் காத்திருப்போம்,

இவ்விரு நூல்களும் 'அன்பு' வெளியீடாக வந்துள்ளன.

பக்கங்கள்: 30 விலை:ரூபா 20/-

## ● பழையதும் புதியதும்

கலாநிதி எஸ். மௌனகுரு அவர்களால் அவ்வப்போது எழுதப்பட்ட 'கூத்து' முதல் 'வீதிநாடகம்' வரையிலான பழையன ஐந்தும் புதியன ஐந்துமான ஆய்வுக் கட்டுரைகளின் அறிவியல் தொகுதி இது. பல்கலைக் கழக நுண்துறை பயில் மாணவருக்கேற்ற பிரயோசனமான முயற்சி. இது ஒரு 'விபுலம்' வெளியீடு.

பக்கங்கள்: 174 விலை ரூபா: 60/-

## ● மலரும் வாழ்வு

கண மகேஸ்வரனின் நோய் - மருத்துவம் சம்பந்தமான அனுபவ வெளிப்பாடான ஒரு குறுங்காவியம் இது.

"...... அருமையான,புதுமையான படைப்பு, இதமான கவிதைகள். தான் பெற்ற அனுபவத்தை மற்றவர்களிடமும் தொற்ற வைக்கும் கவிதைகள். இனிமையான கவிதை ஓட்டம். கவிதையாக இல்லாமல் இந்த அனுபவத்தை நாவலாக வடித்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்..."

—அன்புமணியின் பார்வையில் ஒரு பகுதி இது

பக்கங்கள்: 36 விலை: ரூபா: 25/-

## ● மொழியும் வழியும்; வாழைச்சேனை வரலாறு.

வை. அஹமத் அவர்களின் அண்மையில் வெளியிடப்பட்ட புதிய நூல்கள் இவை. இந்த இரு நூல்கள் பற்றிய குறிப்புக்களை உடன் தரமுடியாமைக்கு வருந்துகிறோம்.

## ● காகம் கலைத்த கனவு

'இருப்பு' சஞ்சிகையின் மூலம் தன் இருப்பை நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் கவிஞர் 'சோலைக்கிளி' யின் மற்றொரு கவிதை நூல் இது. தமிழ் நாட்டிலிருந்து வெளிவந்திருக்கும் தொகுதியாதலால் பலர் கண்ணுக்குப் புலப்படாமலே போகக்கூடும்.

'நானும் ஒருபூனை', 'எட்டாவது நரகம்' என்பன இவரது முன்னைய தொகுதிகளாகும்.

## ● நேருக்கு நேர்

மாணவ எழுத்தாளர்களான சின்னஞ் சிறு குழந்தைகள் சிலர் எழுத்தாளரும் மருத்துவருமான எம். கே. முருகானந்தனுடனான செவ்விகளின் தொகுப்பு நூல்இது. பல்முனை தாக்குதல்களால் சிதைவுண்ட போதும் கல்விப் பயன் காணும் வடமராட்சியிலிருந்து கொப்பித் தாளில் கைக் கடக்கமாக வெளிவந்துள்ள சிறு நூல் இது.

'பாடசாலைக் கல்வி வெளி உலகுடன் இணைவதன் மூலம் முழுமையைப் பெறும்' என்ற நவீன யதார்த்தைப் பிரதிபலிக்கும் சிறிசுகளுக்கான ஓர் ஊக்குவிப்பு நூல் இது.

பக்கங்கள்: 54 விலை: ரூபா 20/-

## ● ஆகவே

திருமலையிலிருந்து அண்மையில் வெளிவந்துள்ள இலக்கியச் சிற்றேடு இது. இதன் ஆசிரியர் மு இ. அ. ஜபார். ஆழ்ந்த தேடலுடனும், மிகுந்த எதிர்பார்ப்புடனும் இலக்கியக் களத்தில் ஆழத்தடம் பதிக்கும் அறிகுறி முதல் இதழிலேயே வெளிப்படுகின்றது.

நவீன ஓவியம் பற்றிய வாசுதேவனின் பார்வை, அவை பற்றிய ஜபாரின் குறிப்புகள், குறிப்பிடும் படியான சில மொழிபெயர்ப்புக் கவிதைகள், சிறுகதை என புதிய தொகுப் பரிமாணம் துலக்கமாகத் தெரிகிறது.

இரு மாத இதழ் விலை:ரூபா 20/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரியாள் ஒரு புரியாத புதிரா?

ஆஞ்சலோ யே. ச.

ஆண்டின் தொடக்கத்தில் கன்னி மரியாள் கடவுளின் தாயான விழாவைக் கொண்டாடுகிறோம். கபிரியல் தூதனின் மங்களச் செய்தி முதல் மனுமகனின் மரணம் வரை மரியாளும் இயேசுவும் ஒன்றாகவே நற்செய்தியில் இடம் பெறுகின்றனர். இயேசு தெய்வத் திருமகன் என்பதால் அவரைப் பெற்றெடுத்தவளை தேவதாய் என்று அழைக்கின்றோம். ஆனால் ஒரு சிலர் கன்னி மரியாளைக் கடவுளின் தாய் என்று அழைக்கக் கூடாது என்றனர். இறை இயேசுவில் உள்ள மனித ஆளுக்கு அவள் தாயே தவிர தெய்வ ஆளுக்கு அல்ல என்று அவர்கள் அன்று வேதாந்தம் பேசினர். அவர்களுக்கு விளக்கம் கொடுத்தது 4ம் நூற்றாண்டிலே எபேசு நகரில் கூடிய திருச்சங்கம். கன்னி மரியாள் கடளின் தாய் தான் என்று வேதசத்தியமாக வரையறை செய்தது. அன்று முதல் இன்று வரை எல்லாத் தலைமுறைகளும் அவளைப் பேறுடையாள் எனப்போற்றுகின்ற வேளையிலும் ஒரு சிலர் இன்றும் அவளது தலைமை, தாய்மை பற்றி கேள்விகள் எழுப்புவது வியப்புக்குரியதே!

இன்றைய உலகிலே பொருள் விரும்புகிறவன் பொருள் தேடுகின்றான் - புகழ் விரும்புகின்றவன் புகழை நாடி ஓடுகின்றான். பதவி மோகம் கொண்டவன் பதவிக்காக அலைகிறான். ஆனால் இறைவனைத் தேடுபவர்கள் அவரது அருளுக்காக ஆசை கொண்டு அலைபவர்கள் தொகை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகிறது. இதன் அடிப்படையில் பார்க்கும் போது தான் மரியாளின் மகிமை நமக்குப் புரியும். பெருமை புலப்படும்.

அன்றைய இஸ்ராயேல் சமுதாயத்திலே 'மெசியாவிற்குத்' தாயாவதற்கு நூற்றுக் கணக்கான பெண்கள் தவித்துக் கொண்டிருந்தனர். இறை மகனைத் தம் கருப்பைகளிலே சுமப்பதற்காகத் தேவனின் காலடியிலே தவங்கிடந்தனர், இவர்களுள் சிலர், ஆனால் இறை சித்தம் வேறு விதமாக இருந்தது. கன்னிமரியாள் மீது கனிவைப் பொழிந்தார் கடவுள். இறைவனின் தாய் என்று அவள் ஒருத்தியையே அடையாளங் காட்டினார்.

'இறைவனின் தாய்' என்ற பெருஞ்சிறப்பு அவருக்குத் தற்செயலாகக் கிடைத்து விடவில்லை. வானதூதர் வாயிலாக அவளது முழுச்சம்மதத்தைப் பெற்ற பின்பே அவருக்குத் தாய்மைப் பேற்றை அளித்தார் இறைவன். அதை அடைய வேண்டுமென்ற எவ்வித ஆசையுமில்லாமல் இறைவனுக்காகவே வாழ்ந்த அவளை 'இறை மகன்' என்ற விலை மதிப்பற்ற வைரத்தைப் பாதுகாக்கப், பத்தரை மாற்றுத் தங்கத்திலான பெட்டகத்தையே தேர்ந்தெடுத்ததில் வியப்பில்லை.

தன் செல்வத் திருமகன் உலக மீட்பிற்காக இவ்வுலகத்திலே பிறக்க வேண்டும் அவனைப் பெற்றெடுக்கும் திருமகளும் காலம் முழுவதும் காமத்தின் நெருப்பு நாக்குகள் தீண்டாத புத்தம் புது மலராகத் திகழ வேண்டும் என்று இறைவன் பேராசைப் பட்டிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அன்பும் தியாகமும்' கூடிப் படைக்கும் தாய்மை என்னும் தவநிலைக்கு ஆணை அறியாத ஒரு கிராமத்துப் பெண்ணை இறைவன் இலக்கணமாகப் படைத்தார் என்பது சரித்திர விந்தைகளில் ஒன்றாகும்.

கன்னியொருத்தி கருத்தாங்குவது என்பது இந்தக் காலத்தில் கூட இனிய செய்தியுமல்ல ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயமுமல்ல. ஒரு மயிரிழை தவறியிருந்தால் மரியாளின் ஒட்டுமொத்த வாழ்க்கையும் மொட்டவிழும் முன்னே பட்டுப்போயிருக்கலாம். அதை அறியாத அறிவிலியும், புரியாத பேதையுமல்ல அந்தப் புனிதமலர்.

ஆண்டவர் தூதர் மூலம் அவள் 'கருவில்லாக் கருத்தாங்கும்' கருணைவரம் பெற்றாள். அதன் பின்விளைவுகளைப் பற்றி கடுகளவும் எண்ணிப் பார்க்கவில்லை. இறைவன் வேண்டுகோளுக்கு 'ஆம்' என்று இசைவளித்தாள். இதன் மூலம் இதிகாசத்தில் இடம் பெற்றாள்

'மரியாள்' என்னும் சொல்லுக்கு உயர்த்தப்பட்டவள் என்பது பொருள். ஆம் ஒரு சாதாரணக் கிராமத்துப் பெண்ணை இறைவனின் தாய் என்கின்ற மிக உன்னத நிலைக்கு இறைவன் உயர்த்தினார். நற்செய்தியிலே மரியாளின் விடுதலைக் கீதம் இதனையே விளக்கி நிற்கிறது. (லூக்: 1 : 46 - 54)

வியப்பும் எழிலும் கலந்து எழுதப்பட்ட வரலாற்றிலே காணமுடியாத அழகு முகத்தை உடையவளாக மரியாளை நான் காண்கின்றேன். ஏனெனில் கிறிஸ்து அவளுடைய மகன், அவளது தசையின் தசை, அவளது வயிற்றின் கனி, அவள் ஒன்பது மாதம் சுமந்து பெற்ற திருக் குழந்தை, அவள் ஊட்டிய அமுது, இறைவனின் இரத்தமாக மாறியது என்று, ஒரு நாத்திகன் என்று தன்னை பெருமையடித்துக்கொண்ட தத்துவமேதையான ஜான் பால்சார்த்ர 2ம் உலக யுத்தத்தின் போது சிறையில் இருந்த போது கூறியிருப்பதும் கருத்தில் கொள்ள வேண்டியதொன்றாகும்.

தன் தசையான மகன் தன்னிடம் இருந்து துண்டித்துக் கொண்டு போகத் துடிக்கும் போது, பறித்துச் செல்லப்படும் போது எந்த ஒரு தாயும் கலங்குகின்றாள் மருளுகின்றாள். மரியாளும் இதற்கு விதிவிலக்கல்ல. தனது மகன் உயிர் எவ்வாறு பறிக்கப்பட்டது என்பதை நன்கு அறிந்த அவள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவம் பெறுகிறாள். உயிரிழந்த மகவை மடியிலே கிடத்தி அவரோடு ஒன்றாகச் சங்கமித்து விடுவதால் இறைதிட்டத்தில் இரண்டாக் கலந்து விடுகிறாள்.

ஏனைய தாய்மார்களை விடத் தனது கடவுளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவள் மரியாள். மனுஉருவிலே வந்த இறை குழந்தையை உரிமையுடன் முத்தமிட்டு உறவாடிய அவள் உயிரிழந்த தன் மகனின் வேதனையிலும் தன் நெஞ்சத் துடிப்பினை உணர்கின்றாள். அவ்வேளையிலும் அவரை அணைத்துக் கொள்ள அனைத்து உரிமையும் பெற்றவள் தான் என்பது அவளுக்குத் தெரியும். உயிர் கொடுத்ததில் மாத்திரம் அல்ல உயிர்ழந்த வேளையிலும் தாய் - சேய் என்ற உறவை உலகறியச் செய்து நிற்கின்றாள் அந்த அன்னை.

ஆனால் சேயை மட்டும் ஏற்றுக் கொண்டு தாயைத் தள்ளி விடும் விநோத மனிதர்கள், நம் இறைமக்களில் ஒரு பகுதியாக இருக்கிறார்கள் என்பதை நினைக்கும் போது வேதனையாக இருக்கிறது.

அவர்களுக்கு

... இயேசு மட்டும் வேண்டுமாம் அவரை ஈன்றெடுத்த மரியாள் வேண்டாமாம்

அவர்கள்

... கனியைச் சுவைப்பார்களாம் ஆனால் அது தந்த மரத்தைப் பழிப்பார்களாம், நெல் மட்டும் வேண்டுமாம் அது விளைந்த மண்ணை மதிக்க மாட்டார்களாம். மலரின் மணத்தை முகர்ந்து இரசிப்பார்களாம் அது தந்த 'பூங் கொடியையே கூறு போடுவார்களாம்.

இப்படிப்பட்டவர்களுக்கு இயேசுவின் வாசகம் ஒன்று தான் விடையாக அமையமுடியும். 'கெட்டகனி தரும் நல்ல மரமுமில்லை. நல்ல கனிதரும் கெட்டமரமும் இல்லை ஒவ்வொரு மரத்தையும் அறிவது அதனதன் கனியாலே. ஏனெனில், முட்செடியில் அத்திப்பழம் பறிப்பாருமில்லை நெருஞ்சியிலே திராட்சைக் குலை கொய்வாருமில்லை' ஆனால் இவர்கள் கள்ளியிலே முல்லை பூத்தது' என்று கதை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். என்ன வேடிக்கை; இப்படிப்பட்ட வக்ர புத்திக்காரரை அருள் அன்னையும் இறை இயேசுவும் தான் மன்னிக் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40ஆண்டு இலக்கியப்பணி, தமிழ்மணி விருது - நினைவுக்கட்டுரை

# தமிழ் மணியான அன்பு மணி

✶ க. தங்கேஸ்வரி B. A (Hones)
(மாவட்ட கலாசார உத்தியோகத்தர்)

1984ம் ஆண்டு ஒரு நாள், எனது கடமை தொடர்பாக களுவாஞ்சிக்குடி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்குச் செல்கிறேன் அனுமதி கிடைத்ததும் உதவி அரசாங்கஅதிபர் அறைக்குள் நுழைகிறேன். முகமலர்ந்த புன்னகையுடன், இதமான வரவேற்பு. முன்பின் தெரியாத என்னை, 'வாங்க, வாங்க, இருங்க' என சிறிது இந்தியப் பாணியில் உபசரிக்கிறார். (இது அவரது இயல்பு என்பதைப் பின்னால் அறிந்து கொண்டேன்) குளிர் பானம் வருகிறது. உரையாடல் ஆரம்பிக்கிறது. நான் இந்து கலாசார அமைச்சின் உத்தியோகத்தர் கலாசார நடவடிக்கை தொடர்பாக வந்திருக்கிறேன் என்று சொன்னதுதான் தாமதம், கடல்மடை திறந்தாற்போல் பேச ஆரம்பித்துவிடுகிறார் அவர்.

கிராமியக் கலைகளின் இன்றைய நிலை. அவை பேணப்பட வேண்டியதன் அவசியம், ஆய்வு செய்யப்படவேண்டிய அவசியம், நூல்களாகத் தொகுக்கப்படவேண்டியதன் அவசியம், வானொலி, ரூபவாஹினி முதலியவற்றில் இடம்பெறச் செய்யவேண்டியதன் அவசியம், கலைஞர்கள் கௌரவிக்கப்படவேண்டிய அவசியம்...

அடேயப்பா! இப்படியான ஒரு அனுபவத்தை நான் எந்த ஒரு உதவி அரசாங்க அதிபரிடமும் இதுவரை பெறவில்லை. அமைச்சில் அறிந்திராத எத்தனையோ விடயங்கள் அவர் பேச்சில் இடம் பெற்றன நான் மெய் மறந்து கேட்டுக் கொண்டிருந்தேன். அன்று அவர் கூறிய பல விடயங்களைப் பின்னால் ஒவ்வொன்றாகச் செயல் படுத்தி காட்டினார். அந் நடவடிக்கைகளை நேரில் கண்டதுமட்டுமல்ல அவற்றுடன் நானும் சம்பந்தப்பட வேண்டி ஏற்பட்டது என்பதையும் இங்கு



மகிழ்வுடனும் பெருமிதத்துடனும் கூறிவைக்க விரும்புகிறேன்.

அன்று ஆரம்பித்த எங்கள் கலாசாரத் தொடர்பு இன்றுவரை தொடர்கிறது.

'அன்புமணி' என்ற பிரபல எழுத்தாளருடன் இணைந்து செயலாற்றுகிறோம் என்ற எண்ணமே ஒரு பெரிய உந்து சக்தியாக எனது கலாசார நடவடிக்கைகள் யாவற்றையும் வெற்றிகரமாக நிறைவேற்ற உதவி வருகிறது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

'அன்புமணி' அவர்கள் அன்று களுவாஞ்சிக்குடி உதவி அரசாங்க அதிபர் எனக்கு அறிமுகமானார். பின்னால் அவர் மட்டக்களப்புக் கச்சேரியின் தலைமையக உதவி அரசாங்க அதிபராக வடக்கு-கிழக்கு மாகாணசபை உள்துறை அமைச்சின் உதவிச் செயலாளராக, ஆளுநர் செயலகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகப், படிப்படியாக உயர்வு பெற்றுள்ளார் ஆனால் அன்று நான் கண்ட அதே இனிய எளிய, அமைதியான மனிதராகவே இன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் காணப்படுகின்றார்.

அது மட்டுமல்ல, அன்று முதல் இன்று வரை அவர், உத்தியோக ரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் மேற்கண்ட சகல, கலை, இலக்கிய, சமய நடவடிக்கைகளிலும், ஏதோ ஒரு வகையில் நானும் சம்பந்தப்பட்டுள்ளேன் என்பதை மிகுந்த தன்னடக்கத்துடன் இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். எண்ணற்ற நடவடிக்கைகள் - இலக்கியக் கூட்டங்கள், நூல் வெளியீடுகள், கிராமியக் கலைவிழா, புத்தாண்டுக் கலைவிழா, மட்டக்களப்பு கலாசாரப் பேரவை நடவடிக்கைகள், கலைஞர் கௌரவம், சாகித்ய விழா நூல்கண்காட்சி, சுவாமி கஹனானந்தா வருகை, சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா நடவடிக்கைகள் நினைவு மலர் வெளியீடுகள், நூல் பதிப்பித்தல், கண்டி, கொழும்பு திருகோணமலை முதலிய இடங்களில் நடைபெறும் கலை, இலக்கிய நிகழ்ச்சிகள் புலவர் மணி நினைவுப்பணி மன்ற நடவடிக்கைகள் என எத்தனையோ நிகழ்வுகள், அத்தனையும் இவரது பாரிய உத்தியோகக் கடமைகளுக்கு மத்தியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவை அத்தனையிலும் நானும் சம்பந்தப்பட்டுள்ளவள் என்ற வகையில், அன்புமணி என்ற இலக்கியவாதியின் ஆளுமைக்கும் ஆற்றலுக்கும், அளப்பரிய செயற்பாடுகளுக்கும் நானே சாட்சியாக நிற்கிறேன். அவருடைய இம்முயற்சிகளில் அணில் பங்களிப்பாக என் பங்களிப்பும் இடம்பெறக் கிடைத்தது என் பாக்கியமே.

'அன்புமணி' அவர்கள் கிழக்கிலங்கையின் கலை, இலக்கிய முயற்சிகளுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதுடன், கிழக்கிலங்கையின் பாரம்பரியச் சிறப்பு, புலவர் பெருமக்களின் வரலாற்றுக் குறிப்புகள் முதலியவற்றை ஈழத்து இலக்கியப் பரப்பில் பதிவு செய்வதுடன், அவற்றை வெளி உலகுக்கு அறிமுகப்படுத்துவதிலும், தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர் என்றால்அது மிகையாகாது. தனதுகுடும்ப நன்மைகளைக் கருத்திற் கொள்ளாது. தனது மனைவி மக்களின் தேவைகளைக் கவனிக்காது, ஏன் தனது சொந்த நலன்களையே சிறிதும் கவனத்திற் கொள்ளாது, இப்பணிகளில் அவர் ஈடுபட்டு வருகிறார் என்பது நாடறிந்த உண்மை (இது தொடர்பான மேலும் விபரங்கள் 'தொண்டன்' மார்கழி 89 இதழில் வெளிவந்துள்ள மலர்வேந்தன் அவர்களின் பேட்டிக் கட்டுரையில் காணலாம்.)

இவருக்குள்ள பிரமுகர்களின் தொடர்பு உயர் உத்தியோக அந்தஸ்து, அச்சக நண்பர்கள் தொடர்பு, இலக்கிய நண்பர்கள் தொடர்பு முதலியவற்றைக் கொண்டு இவருடைய எத்தனையோ படைப்புகளை நூலாக வெளியிட்டிருக்கலாம். பிரமாதமான வெளியீட்டு விழாக்களை நடாத்தி இருக்கலாம். ஆனால் அவர் இவ்வாறு செய்வதில்லை. அன்றுமுதல் இன்றுவரை பிறருடைய ஆக்கங்களையே நூலாக வெளியிட்டு உற்சாகப்படுத்தி வருகிறார். அந்த வகையில் களுவாஞ்சிக்குடி சைவ மாமணி, பண்டிதர் வி. விசுவலிங்கம் அவர்களின் 'மண்டூர் பிள்ளைத் தமிழ்', இலக்கிய மணி ஆரையூர் நல் அழகேசமுதலியார் அவர்களின் 'ஆரையூர்க்கோவை' கவிஞர் செ. குணரத்தினம் அவர்களின் 'நெஞ்சில் ஒருமலர்' ரவிப்பிரியாவின் 'வானவில் ரோஜாவாகிறது' மகாவித்துவான் பண்டிதர் வி. சீ. கந்தையா அவர்களின் 'மட்டக்களப்பு சைவக் கோயில்கள் - 2' முதலிய நூல்களை வெளியிடுவதில், முக்கிய பங்கெடுத்ததுடன் இவற்றுக்கு சிறப்பான வெளியீட்டு விழாக்கள் நடாத்துவதிலும் முன்னின்று உழைத்துள்ளார்.

மட்டக்களப்பில் வெளிவந்த பல நூல்களின் பின்புற அட்டையில் நூலாசிரியரைப் பற்றிய குறிப்பு இவர் எழுதியதாகவே இருக்கும். அதுபோலவே நூல்வெளியீட்டு விழாக்களில் பிரதம நூல் விமர்சகராகவும் இவர் இடம் பெற்று வருகிறார்.

ஒவ்வொருவரும் உயிரை மேலாக மதிக்கிறார்கள். ஆனால் உண்மை வீரர்களோ, உயிரைவிட மானத்தையே சிறந்ததாக எண்ணுகின்றனர்.

ஷேக்ஸ்பியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> பலவீனர்களின் பாதையில் தடையாக நிற்கிற கருங்கல், பலசாலிகளின் பாதையில் படிக்கட்டாக அமைகிறது.
>
> — கார்லைல்

இவருடைய இலக்கிய நண்பர் இலக்கிய மணி க. தா. செல்வராச கோபால் அவர்கள் கனடாவில் 'றிப்ளக்ஸ்' அச்சகம் மூலம் ஏராளமான நூல்களை மின்கணணி முறையில் அச்சிட்டு வெளியிட்டு வருகின்றார். இந் நிறுவனத்தின் மூலம் இவரது நூல்கள் ஒன்று கூட வெளிவரவில்லை. ஆனால், வித்துவான் ச. பூபாலபிள்ளை அவர்களின் 'சீமந்தினி' புராணம், வித்துவான் அ. சரவணமுத்தனின் 'சனிபுராணம்' முதலிய பழைய நூல்களை மறுபதிப்புச் செய்ய இவர் உதவியுள்ளார். இவ்வாறு புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களைப் பற்றிய 'புலவவர்மணிக்கோவை' செட்டிபாளையம் கணபதிப்பிள்ளைப் புலவர் அவர்களின் 'கவிதைத் தொகுப்பு' முதலியன வெளிவருவதற்கும் உதவி செய்துள்ளதுடன் கனடா 'றிப்ளக்ஸ்' அச்சகம் வெளியிட்டுள்ள பல நூல்களுக்குப் பதிப்பாசிரியராகவும் இருந்திருக்கிறார் இவர்.

அண்மையில் திருகோணமலை ந. பாலேஸ்வரியின் 'தத்தை விடு தூது' எஸ். எல். எம் ஹனிபாவின் 'மக்கத்துச் சால்வை' போன்ற நூல்கள் வெளிவருவதிலும் இவர் முன்னின்று பெரும் பங்களிப்புச் செய்துள்ளார்.

'உதயம்' நிறுவனம் வெளியிட்டுள்ள பல நூல்கள் வெளிவருவதிலும், அவற்றை வாசகர் மத்தியில் பரப்புவதிலும் இவர் மேற்கொண்ட பங்களிப்பு மகத்தானது, 'உதயம்' நிறுவனத்தாரின் நெருக்கு வாரத்தின் காரணமாக இவரது ஒரே ஒரு நூலான 'ஒரு தந்தையின் கதை' வெளிவந்தது. ஆனால் அந்த நூலுக்குக் கூட ஒரு சிறப்பான வெளியீட்டு விழா ஏற்பாடு செய்யவில்லை ஏனோதானோ என்ற வகையில் இந்நூல் வெளியீட்டுவிழா நடைபெற்றது.

திருகோணமலை, யாழ்ப்பாணம், மலையகம் முதலிய இடங்களில் வெளிவந்த 'அவர்களுக்கு வயது வந்து விட்டது' (க. அருள் சுப்பிரமணியம்) 'நாளை' (காவலூர் ஜெநாதன்) 'அரசிகள் அழுவதில்லை', (முல்லை மணி) 'நிலக்கிளி' (பாலமனோகரன்) ஒரு கூடைக்கொழுந்து (என். எஸ். எம். ராமையா) முதலியோரின் நூல்களுக்கு மட்டுநகரில் அறிமுகவிழா ஏற்பாடு செய்தார். அதுபோலவே அண்மையில் வெளிவந்த மட்டக்களப்பு நூல்களான 'புலவர் மணிக்கோவை, பாலைக் கலி' 'சைவமும் நாமும்' 'மட்டக்களப்பு சைவக் கோயில்கள், 'விபுலநந்த ஜீ' முதலிய நூல்களுக்கு திருகோணமலையில் ஓர் அறிமுக விழா நடைபெற ஏற்பாடு செய்தார். இவற்றுள் 'பாலைக் கலி 'புலவர் மணிக் கோவை' முதலிய நூல்களுக்கு கொழும்பிலும் அறிமுக விழா நடைபெறச் செய்தார்.

பல முதிய தமிழறிஞர்கள், கலாசாரப் பேரவையினது கௌரவம் பெறுவதிலும், தேசியவிருதுபெறுவதிலும் முன்னின்று உழைத்தவர் இவர்.

இவ்வாறு வாழ்நாள் முழுவதையும் இலக்கியப் பணிக்கு உரம் வழங்கியவருக்கு மிகப் பெரிய கௌரவங்கள், மிகப் பழைய காலத்தில் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இப்போது 'தமிழ்மணி' என்றபட்டம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அது கூட மட்டக்களப்பு மண்ணின் கண்ணில் இன்னும் சரியாகப்படவில்லை இதுபோன்ற கௌாவம் பெற்றவர்களுக்கு ஏனைய மாவட்டங்களில் மகளிர் தமது நன்றிக்கடனைத் தகுந்த முறையில் செலுத்துயுள்ளார்கள். இவற்றைச் சிறிதும் எதிர்பார்க்காதவர் 'அன்புமணி' என்றகாரணத்தினால் போலும் மட்டக்களப்பு மக்கள் இவற்றைக் 'கண்டுக்காமல்' இருக்கிறார்கள்.

புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை அவர்களுக்கு எத்தனையோ பட்டங்கள் வழங்கப்பட்டபோதும். 'புலவர்மணி' என்ற பட்டமே மேலோங்கி நிற்கிறது. அதுபோலவே 'அன்புமணி' அவர்களுக்கு பெயருக்கேற்ற வகையில் அவர் நடந்து கொள்வதால் ''அன்புமணி'' என்ற பட்டம் நிலைத்துவிட்டது. ஏனையபட்டங்கள் சூரியனுக்குள் மின்மினியாகி விடுகின்றன. உண்மையில் 'அன்புமணி' என்ற பெயருக்கு இலக்கணமாக அவர் வாழ்க்கை அமைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளது. ''பகைவனுக்கருள் வாய் நன்னெஞ்சே'' பாரதியின் வாக்கும் 'இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயம் செய்துவிடல், என்ற வள்ளுவர் வாக்கும் இவருக்கே மிகவும் பொருந்தும். உதைத்த காலுக்கு முத்தமிடுவதே இவரது இயல்பாக உள்ளது.

'அன்புமணி' அவர்களின் இலக்கிய வாழ்வு பற்றிச் சொல்ல இன்னும் எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன. அவரது காரியால கடமைகள் பற்றிச் சொல்வதற்கு அதைவிட அதிகமான விடயங்கள் இருக்கின்றன. இந்தச் சிறிய கட்டுரையில் அவைபற்றியெல்லாம் சொல்லமுடியவில்லையே என்பது என் மனக்குறையாக உள்ளது. கடமையின் இலக்கணமாக, கண்ணியத்தின் பிறப்பிடமாக, பண்பின் இருப்பிடமாக,அவர்தனது காரியாலயக் கடமைகளைக் கவனித்து வருகிறார். அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்புக்கிடைத்தமையால் இப் பண்புகளையெல்லாம் நேரிலேயே என்னால் அவதானிக்க முடியும்

அலுவலகக் கடமைகளில் மனிதாபிமானத்துடன் பிரச்சினைகளை அணுகி,அவற்றை விரைவாகத் தீர்த்துவைக்க வேண்டும் என்பதில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருப்பார். இதையே பிறருக்கும் எடுத்துக் கூறுவார் தான் சிரமப்பட்டாலும் தன்னைத் தேடிவருபவர்கள் சிரமப்படக் கூடாது என்பது இவரது கொள்கை. அதனால் வீட்டிலிருந்து கொண்டுவரும் சாப்பாட்டுப்பார்சல் மீண்டும் வீட்டுக்கே செல்வதுமுண்டு.கருமமே கண்ணாயினார், 'கண்துஞ்சார் பசி நோக்கார்' என்பதற்கு இவர் ஒரு பிரத்தியட்ச உதாரணம்.

இவரது தனித்துவமான பண்புகள்பற்றிச் சொல்வதானால் அது இன்னொரு கட்டுரையாகிவிடும். எல்லோருடனும், கலகலப்பாகப் பழகும் இனிய சுபாவம், இலேசான நகைச்சுவை. தன் அந்தஸ்தை மறந்து கீழிறங்கிக் குழந்தையாக மாறும் பண்பு, இனிப் புப் பண்டங்களில் ஒரு பிரியம். இறைபக்தி, ராமகிருஷ்ணமிஷன் ஈடுபாடு, சுவாமி விவேகானந்தர் உபாசனை. சுவாமி விபுலாநந்தர் போற்றுதல், இனிய கீதங்களில் லயிப்பு. கர்நாடக சங்கீதரசனை,நாட்டியங்கள், நாடகங்களில் ஒரு மோகம், எழுத்தாளர் 'கல்கி' மேல் ஒரு நாயக வழிபாடு, இலக்கிய வாதிகள் அனைவரிலும் ஒரு மதிப்பு, உண்மை நட்புக்கு ஒரு பக்தி உள்ளன்புக்கு ஒருபணிவு அப்பப்பா, எதைச் சொல்வது? எதை விடுவது?

## ''மேலே பைசா கொடுக்காதீர்'' (1935)

மலையாள நாட்டிலே தனிகர் இல்லத்தில் திருமண வைபவம். அதில் செம்பை வைத்தியநாத பாகவதரின் கச்சேரி. கடவாத்திய வித்துவான் ஆலங்குடி ராமசந்திரன் வைபவம் நடத்துகிறவர்களுக்கு மிகவும் வேண்டியவர். பாகவதருக்கு மிக மிக வேண்டியவர் அதனால் கல்யாணக்காரர்கள் பக்கவாத்திய வித்துவான்கள் வரிசையில் ஆலங்குடி ராமச்சந்திரனையும் திட்டம் செய்தார்கள்.

ஆனால் சம்மான விஷயத்தில் அவர்கள் திட்டம் வேறு மாதிரியாக இருந்தது. வாய்ப்பாட்டு வித்துவானுக்கும், வயலின் வித்துவான், மிருதங்க வித்துவான் ஆகியோருக்கும் உரிய சம்மானத்தைத் தீர்த்திருந்தார்கள். 'ராமச்சந்திரன் நம் பையன்தானே? சௌகரியம்போல் ஏதாவது கொடுக்கலாம்' என்று இருந்தார்கள்.

கச்சேரி முடிந்தது. கலைஞர்களைச் சம்மானிக்கும் கட்டம். பாகவதர் கல்யாணக்காரரை நோக்கிச் சொன்னார், 'இதோ பாருங்கள். எங்களுக்கெல்லாம் நீங்கள் உசிதம்போல் சம்மானம் செய்யுங்கள் ஆனால் இந்தப்பையன் ராமச்சந்திரன் இருக்கிறானே.இவன் விஷயத்தில் மாத்திரம் யோசித்துச் செய்யுங்கள். இவன் நம் பையன்: நாம் அறிந்து பிறந்து வளர்ந்து கலைபயின்றவன், இவன் என்னவென்றால் கச்சேரிக்கு வாசிக்க இருநூறு முன்னூறு என்று 'ரேட்டு'க் கேட்கிறான். கொடுக்கவும் கொடுக்கிறார்கள். நீங்கள் நூற்றையம்பதுக்கு மேல் பைசா கொடுக்காதீர்கள்'. என்று ஒருபோடுபோட்டார், ராமச்சந்திரன் பக்கந்திரும்பி 'இதோ பார், வேண்டிய இடம். இங்கே நூற்றைம்பதுக்கு மேல் நீ எதிர்பார்ப்பது சரியல்ல. தெரிந்ததா?' என்றார்.

தகுதியுள்ள சிறியோருக்குச் செம்பைப் பெரியார் ஏற்றம் கொடுத்த எழில் முறை இத்தகையது.

சொன்னவர் ஆலங்குடி ராமச்சந்திரன்
அனுப்பியவர்: க. பீற்றர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுகளும்........

தூங்கவும் முடியாமல், விழிக்கவும் இயலாமல்... மனதில் ஏற்பட்ட உணர்வுகளின் தகிப்பினால் மனம் அலைக்கழிந்த நிலையில்... புரண்டு புரண்டு படுத்தும் உறக்கம் வராத நிலையில்... மனதை ஆசுவாசப் படுத்த முயன்று தோற்றுப் போகிறேன். தாங்க முடியாத அந்தச் செய்தி!

நெஞ்சின் உணர்வுக் கீற்றுகளில் மழுங்கலை ஏற்படுத்தும் துன்பத்தால் கனன்ற மனம்... எரிமலையின் குமுறலுக்குத் தாவ முயன்று... தடுக்கி விழுந்து... பனிக் கட்டியின் இறுகலில் தங்கித் தளைகின்றது.



'டுமீல்...!!!' திடீரெனக் கேட்ட வெடிச்சத்தம் அயர்ந்து உறங்கும் மகளைக் கூட உலுப்பி... கண் விழிக்காமலேயே என்னைத் தேடிய அவள் கைகளில் நான் அகப்பட.. ஆறுதலடைந்து... தூக்கம் தொடருகிறது.

வெடிச் சத்தம் கேட்டு விழித்த மனைவி, தூங்காமல் விழித்தபடி வெறித்துக் கிடக்கும் என்னைக் கண்டு விட...

'நீங்க இன்னும் தூங்கலயா...'

'ம்ம்... இல்ல...'

'ஏனப்பா...?' அவள் குரலில் ஏற்பட்ட வினாக்குறி என்னைப் பாதிக்கவில்லை.

'...... '

'என்னப்பா வெடிச்சத்தம்? மனச்சூழலை மாற்ற முயல்கிறாள்.

'அது தூரத்தில் எங்கோ... நீங்க படுங்க...' அவளை ஆறுதலுக்குள்ளாக்கிய என் பதில் அவளை மகளுடன் சேர்த்துக் கொள்ளுகின்றது.

சாமக்கோழி கூவும் சத்தம் கேட்கிறது.

'ம் ம் ம்...' நீண்ட பெருமூச்சொன்றை விட்டு விட்டு தலையணையில் முகத்தைப் புதைக்கிறேன்.

மிளகு வாப்பா......

ஓ... அந்த நினைவுகள்...

இனங்களின் முரண்பாடு முகிழாத நிலையில் தமிழன், சிங்களவன், முஸ்லிம் என்ற பேதம் தெரியாமல் ஒருவரோடொருவர் உறவாடி... ஒருவரின் குடும்ப சுக துக்கங்களில் கலந்து கொண்டு தூய்மையான மன உணர்வுகளுடன் உறவுகளைப் பகிர்ந்து குலவிய அந்த நாட்கள்...

'மிளகிரிக்கோ... எள்ளிரிக்குகோ... பாயிரிக்குகோ...' அந்தக் குரல் அதிகாலை ஆறு மணிக்கெல்லாம் வீதியில் கேட்டால் மீரான் வாப்பா வருகிறார் என்று அர்த்தம். பதினாறு மைல்களைக்கடந்து பஸ்ஸில் வந்து விடுவார்.

அவர் சத்தம் கேட்டதும் சுருண்டு படுக்கும் என்னை தட்டி எழுப்புவார் அம்மா...

'தம்பி... மணி ஆறாப் போச்சு... மீரான் நானாவும் வந்திற்றார்... எழும்பு... எழும்பு...'

அப்படி ஒரு 'பங்சுவாலிட்டி' அவருடையது.

அவரின் ஊரிலிருந்து தேன் குழல், மிளகு, எள்ளு, சீனி மிட்டாய், கைப்புஎன்பவற்றை எங்கள் சில்லரைக் கடைக்குக் கொண்டு வருவது அவரது வழக்கம்.

அவரின் காலைப் போசனம் எங்கள் வீட்டில் தான். வரும் போதே இடியப்பம் வாங்கி வருவார். ''பிள்ள... இடியப்பம் இந்தாரிக்கி... இவன் றொபேட்டுக்கு எடுத்துவச்சிப்போட்டு எனக்கும் தா... கறி கனக்க வெய்க்க வேணா...''

எனது காலையுணவு அவரின் பொறுப்பு.

அது என்மேல் அவருக்கிருந்த வாஞ்சையின் பிரதிபலிப்பு. எனக்கென்றே தனியாக சீனி

## ......உறவுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்வாவும் தேன் குழலும் கொண்டு வருவார்...

அவரின் மீது எனக்குண்டான ஆர்வத்திற்கும் அக்கறைக்கும் இவையே காரணமாயிற்று.

அவருக்குப் பக்கத்திலிருந்து தான் நான் சாப்பிட வேண்டும்... அது தான் அவரது பிரியம்... அது எனக்கும் பிடிக்கும்...

அப்படிச் சாப்பிட்டால் தானே அவரின் 'உபகாரம்' எனக்குக் கிடைக்கும்...

'மகன் பள்ளிக்குப் போங்க ...நல்லாப் படிச்சி டொக்டராகணும்...ஆ...' என்பார்.

எனது கைரேகைகளை அடிக்கடி பார்ப்பார். 'பிள்ள ...இவன் நல்ல யோகக் காரன் ...நல்லாப் படிச்சிருவான்... இவன்ர கைரேக இவன டொக்டராக்குமெண்டு சொல்லுது...'...

அவர் வியாபாரத்தோடு நின்று விடுவதில்லை... கை ரேகை சாத்திரமும் அவருக்கு அத்துபடி. எங்களூரில் அவர் போகாத வீடுமில்லை... அவர் பழகாத ஆட்களுமில்லை.

அதிலும்-எங்கள் வீட்டில் நடைபெறும் அத்தனை காரியங்களிலும் விசேட வைபவங்களிலும் அவரின் ஆலோசனைகளும் மெருகேற்றும்...

எனக்கு 'உறுதிப் பூசுதல்' நடைபெற்ற போது கூட அந்த வைபவத்திற்கு 'மஸ்கட்' உபயமளித்தவர் அவர் தான்.

அவரின் பங்களிப்பில்லாத வைபவம் எதுவுமே இல்லை... எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

# சிறுகதை

பசுமை மாறாத நினைவுக் குவியல்கள்...அவர் மகனின் 'நிக்காஹ்' இற்கு எங்கள் குடும்பமே சென்றது.

அப்பாவும் அம்மாவும் தம்பியும் அன்றே திரும்பிவிட அந்தக் களியாட்டங்களிலும் வேடிக்கை விநோதங்களிலும்... சோடனைகளிலும் ஆகர்ஷிக்கப்பட்ட நான் அங்கேயே நின்று விட்டேன்...

அவரின் அயல்வீட்டு அன்வர், இர்பான், அனஸ் எனது கூட்டாளிகளாயினர்....

**கே. கிறிஸ்டி முருகுப்பிள்ளை**

நேரத்துக்கு நேரம் சுவையான சாப்பாடு... புரியாணி வட்டிலப்பம்... துதள்... மஸ்கட்... லட்டு. இது போதுமே எனக்கு... மிகுதி நேரம் விளையாட்டு. அவரின் பக்கத்திலேயே என்னை உறங்க வைப்பார். கல்யாணத்துக்கு வந்தோர் என்னைப் பார்த்து அவரிடம் வினவுவார்கள். 'அது... ஏண்ட ராத்தாட மவன்' என்பார். அப்படிச் சொல்வதில் ஒரு மன நிறைவு அவருக்கு. அவரின் மனைவி மக்கள் அனைவருக்குமே என்னை நன்றாகப் பிடித்து விட்டது... எனக்கும் பழகி விட்டது. அவர்களை உறவு முறை சொல்லிக் கூப்பிடவும் ஆரம்பித்து விட்டேன்...

ஒரு வாரம் கழிந்தது. அப்பா வந்து 'றொபேர்ட்... வீட்ட போவமா?' என்று கூப்பிட்டபோது, உண்மையில் எனக்கு வீடு செல்ல விருப்பமிருக்க வில்லை... அந்தச் சூழல் என்னை ஈர்த்திருந்தது...

மனமில்லாமல் திரும்பினேன்...அடுத்த விடுமுறைக்கு அவசியம் அனுப்புவேன் என்ற அப்பாவின் வாக்குறுதியுடன்.

கல்யாண வீட்டில் எனது கைகளில் இட்ட மருதாணித் தடயங்கள் நீண்ட நாட்கள் நிலைத்திருந்தன... பின்னால் அவர்களின் வீட்டில் போய் நிற்கச் சந்தர்ப்பம் கிடைக்காமற் போனாலும் 'அந்த வாரத்தினைப் பற்றிய நினைவுகள் நெஞ்சை விட்டு அகலவில்லை... மீரான் வாப்பாவின் வரவு... தொடர்பும் நீங்கவில்லை... காலம் சுழன்றோடியது...

காலத் தென்றற் பெருக்கின் நிகழ்வுகள் ஞாபகங்களாக மலர்ந்தன...

அவர் சொன்னபடி நான் டொக்டராகா விட்டாலும், 'மேல் நேர்ஸாக' வே வர முடிந்தது.

---

தன்னம்பிக்கை இல்லாதவன் வாழ்க்கை, காலால் நடப்பதைப் போன்றது.

**'எமர்சன்'**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு என்னும் கோயிலுக்கு நீதிதான் அஸ்திவாரம்; ஆனால் நீதியை விட்டு விட்டு அன்பை மாத்திரம் அடைய முடியாது.

'ரஸ்கின்'

அவரின் கை ரேகைக் கணிப்பு முற்று முழுதாகப் பொய்த்து விடவில்லை...

எனது திருமணப் பேச்சு ஆரம்பமான போது தக்கதுணையைத் தேர்ந்தெடுப்பதில் ஆர்வமாக இறங்கினார்... எங்கள் பகுதியில் அவருக்குத் தெரியாத வீடுகளுமில்லை... அவர் பார்க்காத கைகளுமில்லை... என்ற வகையில் எனக்காக மேரியைத் தேர்ந்தெடுத்தார்.

'தம்பி... வடிவான பெட்டைகளில் மயங்கிராத... நல்லகுணம் தான் சீவியத்துக்கு முக்கியம்... இந்தப் பிள்ள நல்ல அடக்க ஒடுக்கமானவள்...கொஞ்சம் பொ்து நிறந்தான்... ரீச்சராக இல்லியா இரிக்காள்... றெயினிங் கில யாம் இப்ப... அல்லாட 'றகுமத்' இருந்தா உனக்கு இந்த இடம் சரிவரும்'' என்றார்.

ஆனால்...அப்பாவும் அம்மாவும் வேறு இருவரில் 'குறி' வைத்திருந்தனர்... விடாப் பிடியாகவும் இருந்தனர். 'தம்பி... அந்தோனி மச்சாண்ட மகள் சகாயம்... தெரியுமா... நல்ல சொத்து... அவள் தான் என்ர மருமகள்'' இது அப்பா.

'அடே மனேய்...அவர்ர கதய விடு... எங்கட அண்ணன் தன்ர மகள் அரியத்த உனக்காகத் தானே கேட்டு வைச்சிருக்கார்... தாய் சொல்லத் தட்டாத...' இது அம்மா.

எனக்கோ தர்ம சங்கடமான நிலை.

முழுப் பொறுப்பையும் மீரான் வாப்பாவிடம் விட்டு விட்டேன்.

'தம்பி உங்களுக்காக அல்லாட்ட 'துஆ' கேட்டிருக்கன்... 'இன்ஸா அல்லா..' மேரி தான் உனக்குப் பெம்பிள...'

அவர் திடமாகத்தான் சொன்னார்.

என்ன மந்திரம் சொன்னாரோ... எப்படித் தன்வசம் மாற்றினாரோ என்னவோ...

மேரிக்கும் எனக்கும் திருமணம் நடந்தது.

'டேய் பீற்றர்... உங்கட மார்க்கமும் எங்கட மார்க்கமும் ஒண்டு தாண்டா... 'ஈசா நபி' எண்டா ஆரெண்டு தெரியுமாடா... நீ கும்பிடுற ஏசு நாதர் தாண்ட... ஓ... எங்கட குர்ஆனில எல்லாம் சொல்லியிருக்கு...'

அடிக்கடி அப்பாவிடம் அவரின் மத சமரஸத்தை எடுத்துக் காட்டி விளக்குவார்...

அப்பாவும் தலையாட்டுவார்...

அப்பாவுக்கு கிறீஸ்தவமும் இஸ்லாமும் வேறானவை என்றாலும் மீரான் வாப்பா வேறானவரல்ல... இரத்த உறவோடு... உடலின் உணர்வோடு கலந்து விட்ட உறவினர்.

'றொபேட் தம்பி...என்ர கடசி காலத்த உன்னிட்டத் தான் கழிப்பன்...ஓ... என்ட ஜனாஸாவுக்கு. (றூஹ் - ஆத்மா) நீயில்லாம என்ர றூஹ் ஆறுதலடையாதுடா' என்று கண்கள் பனிக்கக் கூறுவார்.

சுதந்திரமான சுகவாழ்வை... உல்லாசமாகக் கழித்து உவகையுடன் ஒன்றுபட்டு வாழ்ந்த இன உணர்வுகளில் உறவுகளில் தடைக் கற்களை பள்ளத் தாக்குகளை...பாரிய இடைவெளிகளை ஏற்படுத்தி விட்ட வன் செயல்களின் கொடூரம்... அந்நியோன்னியமான உறவுகளை ஏற்படுத்தி வாழ்ந்த மனித மனங்களிடையே உண்டாக்கி விட்ட பகைப் புயல்... தனி மனித உணர்வுகளும்... உறவுகளும் முடமாக்கப்பட்டு... செல்லாக் காசாக்கப் பட்டுவிட்ட பரிதாபம்...

எங்கோ... எதற்கோ ஆரம்பித்த போர் மேகங்கள் இனங்களிடையே யுத்த பேரிகையை ஏற்படுத்தி விட்ட விபரீதம்...

ஒருவரை ஒருவர் சந்தேகக் கண்ணோடு நோக்கும் நிலைக்குத் தள்ளி விட்ட பிரித்தாளும் முயற்சிகள்.. மீரான் வாப்பாவின் வருகை அடியோடு நின்று விட்டிருந்தது... 'இங்கு' வர அவருக்குப் பயம்... 'அங்கு' செல்ல எங்களுக்கும் பயம்..

அவரின் ஊரினூடாக நாங்கள் செல்வதற்கோ ... எங்களூர் வீதியில் அவர்கள் செல்வதற்கோ சீருடைத் துப்பாக்கிகளின் பாதுகாப்பு அவசியமானது...

அவரின் உறவும் தொடர்பும் எங்கோ தொலைந்து விட்டிருந்தது... பல விசேடங்கள் அவரின் பிரசன்னம் இல்

(49ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் சிலையானார்

றே. திருஞானதீபன்



ஆதியாகமம் மனிதன் படைப்பைப் பற்றி பின் வருமாறு கூறுகிறது 'பின்னர் கடவுள்; நமது சாயலாகவும் பாவனையாகவும் மனிதனைப் படைப்போமாக, (1:26) அப்படியிருக்க ஆண்டவராகிய கடவுள் களிமண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் முகத்தில் உயிர்மூச்சை ஊதவே மனிதன் உயிருள்ளவன் ஆனான் (2:7)

மனிதனின் அமைப்பிலே இரண்டு வித்தியாசமான சேர்க்கைகளைக் காண்கிறோம். ஒன்று அவனை இறைவன் களிமண்ணால் உருவாக்குகிறார் - அதனால் அவன் காணக் கூடிய, தொடக்கூடிய, அழியக்கூடிய உலகைச் சார்ந்த ஒன்றாக உருவாக்கப்பட்டவன். மற்றது: கடவுள் மனிதனைத்தன் சாயலும் பாவனையாகவும் படைக்க நினைத்து அவன் முகத்தில் தன் உயிர் மூச்சை ஊதினார். அதனால் அவன் காணமுடியாத, அழிவில்லாத, தெய்வீகமான, விண்ணகத்தையும் சார்ந்தவன். வேறு வார்த்தைகளில் மனிதன் ஆன்ம சரீரத்தைக் கொண்டவன் என்கின்றோம்.

மனிதனின் இந்த இருவித சேர்க்கைகளையும் ஒட்டியே, அவனுடைய எல்லாச் செயல்களும் அமையும்: அவை அவனின் அறிவைச் சார்ந்ததாக இருந்தாலும் சரி,அல்லது அவனது உள்ளத்தைச்சார்ந்ததாக இருந்தாலும் சரி மனிதனுடைய எல்லாச் சிந்தனைகளும் காணக்கூடியதொன்றில் தான் ஆரம்பமாகின்றது. அதேபோல் காணமுடியாத அவனது உணர்வுகள் அன்பு, இரக்கம், பக்தி என்பன வெளியடையாளங்களைக் காட்டும் பொழுது தான் பொருள் பெறுகின்றன. இந்த மனிதனின் அமைப்பை வைத்துத்தான் புனித அருளப்பர் கூறினார் 'நான் கடவுளுக்கு அன்பு செய்கிறேன், என்று சொல்லிக்கொண்டு ஒருவன் தன் சகோதரனை வெறுத்தால் அவன் பொய்யன், ஏனெனில் கண்ணால் கண்ட சகோதரனுக்கு அன்பு செய்யாதவன், தான் கண்டிராத கடவுளுக்கு அன்பு செய்ய இயலாது, (அரு. 4: 20)

இறைவன் மனிதனின் இந்த அமைப்பை மதிக்கின்றார்: அவனுடன் தொடர்பு கொள்ளும் பொழுதெல்லாம் இதனைக் கவனத்தில் கொள்கிறார். பழைய ஏற்பாட்டிலிருந்து ஒரு சம்பவத்தை நினைவுகூர்வோம்:எண்ணாகமம் 21 அதிகாரம் 5-9 வசனங்களை வாசித்துப் பாருங்கள்; ''அவர்கள் (இஸ்ராயேல் மக்கள்) கடவுளுக்கும் மோயீசனுக்கும் விரோதமாய்ப் பேசி நீ எங்களை எகிப்திலிருந்து வெளியேறச் செய்ததென்ன? நாங்கள் பாலைவனத்தில் சாகும்படிதானோ? இவ்விடத்தில் அப்பமுமில்லை,தண்ணீருமில்லை.இந்த அற்ப உணவு எங்கள் மனத்துக்கு வெறுப்பை தருகின்றது என்றார்கள். அப்பொழுது ஆண்டவர்கொள்ளிவாய்ப் பாம்புகளை அவர்களிடையே அனுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பினார். பலர் கடியுண்டு சாவதைக்கண்டு, மக்கள் மோயீசனிடம் போய்: நாங்கள் கடவுளுக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசினதினால் பாவிகளானோம் பாம்புகள் எங்களை விட்டு நீங்கும்படி மன்றாட வேண்டும் என்றார்கள். மோயீசன் அவர்களுக்காக வேண்டிக்கொள்ள, ஆண்டவர் அவரை நோக்கி: வெண்கலத்தால் ஒரு பாம்பின் உருவம் செய்து அதை ஒரு கம்பத்தின் மேல் தூக்கி வை. கடியுண்டவன் அதை உற்று நோக்கினால் உயிர் பிழைப்பான் என்று திருவுளம் பற்றினார். அவ்வாறே மோயீசன் வெண்கலப்பாம்பைச் செய்து அதை ஒரு கம்பத்தில் கட்டித் தூக்க கடியுண்டவர்கள் அதைப் பாரத்து நலமடைந்தார்கள்.

நிச்சயமாக சுகமளிக்கும் அருள் அந்த வெண்கலத்தால் செய்த பாம்பின் சிலையிலிருந்து வரவில்லை. இறைவனிடமிருந்தே வந்தது. ஆனால் இறைவன் மனிதனின் அமைப்பை மதித்தார் - மனிதன் பார்க்க வேண்டும், தொடவேண்டும், ருசிக்க வேண்டும்.

ஆண்டவர் யேசுவும் நற்செய்தியில் பல புதுமைகள் செய்துள்ளார். அதிலொன்று; ஒரு பிறவிக்குருடனைக் குணமாக்கியபொழுது தரையில் உமிழ்ந்து, உமிழ் நீரால் சேறுண்டாக்கி, அச்சேற்றை அவனுடைய கண்களின் மேல் பூசி, அவனை நோக்கி, "நீ போய் சீலோவாம் குளத்தில் கழுவு என்றார்.

(அருள் 9 : 6)

அந்தச்சேறு பிறவிக்குருடனுக்கு பார்வை அளிக்கவில்லை. ஆண்டவர் யேசு தான் பார்வையளித்தார். சேறும் கழுவுதலும் வெளியடையாளங்கள். இதன் வழியாக இறைவனின் 'புதுப்படைப்பை (உறுப்பை) அம்மனிதன் பெறக்கூடியதாகவிருந்தது. "லாசரே! வெளியே வா, என்ற யேசுவின் வார்த்தைக்கு இறந்த மனிதன் உயிர் பெறுவானாயின், பிறவிக்குருடனுக்கு உமிழ் நீரும். சேறும் தேவைப்பட்டிருக்காது - ஆனால் இறைமகன் யேசு மனிதனின் அமைப்பை அறிந்தவர், ஏனெனில் மனிதன் அவர் வழியாக, அவருக்காகப் படைக்கப்பட்டவன்.

இஸ்ராயேல் மக்களை இறைவனே அரசராகவும், தந்தையாகவும், வழிகாட்டியாகவும் ஆண்டு நடத்தி வந்தார். எகிப்திலிருந்து தன்னுடைய வல்லமைமிக்கக்கரத்தால் மீட்டு வந்தார். இதையெல்லாம் அம்மக்கள் மறந்து, அக்காலத்திலேயிருந்த வழக்கப்படி தங்களுக்கும் ஓர் அரசர் தேவை என்று இறைமனிதர் சாமுவேல் மூலமாக இறைவனிடம் கேட்டார்கள். "நீதி வழங்க ஓர் அரசனை எங்களுக்குக்கொடும் என்ற அவர்களின் முறையீடு சாமுவேலுக்குப் பிடிக்கவில்லை. சாமுவேல் ஆண்டவரை மன்றாடினார் ஆண்டவர் சாமுவேலை நோக்கி "மக்கள் உன்னிடம் சொல்வதை எல்லாம் கேள். உன்னை அவர்கள் புறக்கணித்துவிடவில்லை. நாம் அவர்களை ஆளவிடாதபடி நம்மைத்தான் புறக்கணித்து விட்டார்கள். அவர்களை நாம் எகிப்து நாட்டினின்றும் மீட்ட நாள் முதல் இன்று வரை அவர்கள் செய்த செயல்கள் எல்லாம் நம்மை விட்டு அன்னிய தெய்வங்களை (சிலைகளை) வழிபடுவது போல் உனக்கும் செய்கிறார்கள். இப்போது அவர்கள் சொல்லுக்குச் செவி கொடு: ஆயினும் அவர்களுடன் விவாதித்து அவர்களை ஆளப்போகிற அரசனின் உரிமையை அவர்களுக்கு முன்னறிவி" என்றார் (சாமு . 8 : 6 - 9).

இஸ்ராயேல் மக்களின் இந்த வேண்டுதல்; தங்களுக்கு ஓர் அரசன் வேண்டுமென்பதும், அவர்கள் இறைவனின் வல்லமையை அறிந்திருந்தும் வேறு தெய்வங்களை (சிலைகளை) வழிபட்டதும், அடித்தளத்தில் ஒவ்வொரு மனிதனுடையவும் ஏக்கமே! தன்னோடு தொடர்பு கொள்ள விரும்புகிறவர்களை தன் கண்களால் பார்க்க, கரங்களால் தொட, காதுகளால் கேட்க விழைகின்றான். இது அவனின் அமைப்பு. இதை அறிந்து தான் ஆண்டவர் இஸ்ராயேல் மக்கள் அரசனைக் கேட்டபொழுது அவர்களுக்கு அரசனை அருளினார் - கால நிறைவில் தன்

> கடமைகளைச் செய்யாமல் உரிமைகளைத் தேடினால் அவை கானல் நீராகி விடும் 'காந்திஜீ'



Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org

மகன் யேசுவும் ஒரு நித்திய அரசராக இருப்பார் என்பதை அவர் அறிவார் - மக்கள் இறைவனை சிலைகளில் வழிபட்ட பொழுது வெறுத்தொதுக்கியவர் தன் இறைமகன் யேசுவை ஒரு வெறும் சிலையாகவல்ல, உயிருள்ள மனிதனாய் தொட்டுப் பார்க்கக்கூடிய மனித உணர்வுகளால், நேசிக்கவோ அல்லது வெறுக்கவோ கூடிய ''இம்மானுவலை'' (நம்மோடு - கடவுள் மத் 1 : 22) அனுப்பினார். ''அவர் தம் சீடர்பக்கம் திரும்பி அவர்களுக்கு மட்டும் தனிமையாகக் கூறியதாவது! ''நீங்கள் காண்பதைக் காணும் கண்கள் பேறுபெற்றவை. ஏனெனில், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: இறைவாக்கினர் அரசர் பலர் நீங்கள் காண்பதைக் காண விரும்பியும் காணவில்லை. நீங்கள் கேட்பதைக் கேட்க விரும்பியும் கேட்கவில்லை''
லூக் (10 : 23, 24).

இறைவனை மனிதன் கண்டான், தொட்டான், உணர்ந்தான். இதனைப் பவுலடிகள் பிலிப்பியருக்கு எவ்வளவு அழகாக எடுத்துரைக்கின்றார்! ''கடவுள் தன்மையில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாகவிருக்கும் நிலையை விடாமல் பிடித்துக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் தன்மை பூண்டு, மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி தம்மைத் தாழ்த்திச் சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்படிபவரானார். அதனால்தான் கடவுள் அவரை எல்லோருக்கும் மேலாய் உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்'' (பிலிப் 2 : 6 - 9)





(46ம் பக்கத் தொடர்ச்சி)

லாமலேயே நிகழ்ந்தேறின... ஆனாலும் அந்நிகழ்ச்சிகளில் இழையோடிய வெறுமையை நாங்கள் உணராமலில்லை..

நேற்று அறிந்த அந்தச் செய்தி!

அனலில் பட்ட புழுவாய் என்னைத் துடிக்கவைத்தது.

'ஒரு வாரத் தோழன்' அன்ஸார் என்னை மறக்காமல் தேடி வந்து ஆஸ்பத்திரியில் வைத்துச் சொன்னார். 'உங்கட மீரான் வாப்பா... 'மௌத்தாயிற்றார்' விக்கித்து நின்றேன்.

அவரின் உதவிகளுக்கும்... ஒத்தாசைக்கும்.. எங்களோடு ஏற்பட்டுவிட்ட ஒன்றுதலுக்கும் கைமாறு செய்ய விரும்பியும், முடியாத நிலையில் கைகளும்... உணர்வுகளும்... கடிவாளமிடப்பட்டு... ஏதும் செய்வதறியாது திகைத்து நின்றேன்

வாழ்வின் பொய்மையை யெண்ணி வாயடைக்கத் தான் முடிந்தது.

இனங்களின் உறவுச் சூனியத்தை மறந்து அவரின் ஊர் சென்றேன்...

சென்றி என்னிடம் 'கொஹாட்ட த?' என்று முறைத்தது.

விடயத்தைச் சொன்னேன்.

'எஹே... யண்ட... எப்பா...' துப்பாக்கி தடுத்தது.

இதய விம்மல் என்னையறியாமல் பீறிட்டது...... தாளாமல் திரும்பினேன்.

நினைவுகள் மீட்கப்பட்டு கண்களில் இருந்து வழிந்த நீர் தலையணையை நனைத்தது.

என்னையறியாமலே வாய் ஒரு முறை சொல்லிக்கொண்டது...

''வாப்பா...''

கா...கா கா

ஓ... விடிந்து விட்டதா?...

மிளகிரிக்குகோ... எள்ளிரிக்குகோ...

இது...இது... என்ன சத்தம்...

ஓ... பிரமையா...

நினைவுச் சிமிட்டலின் எதிரொலி!

—யாவும் கற்பனையே—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் தந்தை ஜூலியஸ் இராசையா அவர்கள் காலமானார்



கடவுளிடம் ஆழ்ந்த பற்றும், விசுவாசமும், பணியார்வமும் கொண்டிருந்த இவர் தாம் ஒரு குருவாவதன் மூலமே தமது உள்ளம் நிறைவடையும் என்று கூறினார்''

இவ்வாறு காலஞ்சென்ற அருள்தந்தை இராசையாவின் மறைவையொட்டி நடைபெற்ற இறுதிச் சடங்கின் போது திருமலை -மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பேரருள் திரு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில்:

இக்கட்டான கால கட்டத்திலும் கஷ்டமான பங்குகளுக்குச் செல்ல தாமாக முன் வந்து பணியாற்றியவர்; மக்களின் துன்பங்களிலே பங்குகொண்டவர் என்றார்.

கடந்த எட்டு ஆண்டுகளாக நமது மறைமாவட்டத்தில் பணியாற்றிய அருட் தந்தை இராசையா அவர்கள் கடந்த நவம்பர் திங்கள் பத்தாம் நாள் காலமானார். அண்மைக் காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த தந்தையவர்கள் மட்டக்களப்பு புனித வளன் வாயோதிபர் இல்லத்தில் வாழ்ந்து வந்தார்.

மன்னார் மறைமாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1922ம் ஆண்டு கார்த்திகைத்திங்கள் 20ம் நாள் பிறந்தார். 21 ஆண்டுகள் அரசாங்க சேவையில் ஈடுபட்ட பின் இறை அழைத்தலை ஏற்று குருமடம் புகுந்தார் அமெரிக்காவில் உள்ள 'மாட்டர் டேயி (Mater dei) வளர்ந்தோர் குருத்துவக் கல்லூரியில் பயிற்சி பெற்று 1985ம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டாம் நாள் தமது 63 வது வயதில் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார்.

மூதூர், சின்னக்கடை, ஆயித்தியமலை வாழைச்சேனை ஆகிய பங்குகளில் பணியாற்றியுள்ள இவர் ஆயரின் செயலாளராகவும் சில காலம் பணியாற்றினார்.

எழுத்தாற்றலுள்ள தந்தை அவர்கள் ஆறு நூல்கள் வரை எழுதியும் - மொழி பெயர்த்தும் உள்ளார். புனித பிரான்சிஸ் அசிசியாரில் மிகுந்த பற்றுக் கொண்டவர். அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதி வெளியிட்டார். 1968ம் ஆண்டு இலங்கை அரசின் தமிழ் இலக்கியத்துக்கான சாகித்திய மண்டலப் பரிசை இந்நூல் பெற்றது குறிப்பிடத்தக்கது.

தளராத இறை ஆர்வத்தோடு தள்ளாத வயதிலும் பல படப் பணியாற்றிய அருள் தந்தை ஜூலியஸ் இராசையாவின் மறைவு நெஞ்சை வருத்துகிறது. இறைவன் அவருக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்து இன்ப வான் வீட்டில் சேர்ப்பாராக. எம். வி.

---

அக்கடியன் ஃபிளைகேச்சர் எனும் பறவை பாம்புகள் ஏறமுடியாதபடி இலைகளினிடையே ஒரு அடி நீளம் உள்ள வால் அமைப்பு வைத்துக் கூடு கட்டும்.

---

நீர்த்தேள் தனது வாலினை நீருக்கு மேல் நீட்டி காற்றை சுவாசிக்கும்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுகாட்டை நோக்கியா அமைதி தேடுவது?

அர்த்தமற்ற திருப்தியும் வெறுப்பான வாழ்வும், வாழ்க்கையில் ஏனோ தானோ என்ற விரத்தியுற்ற மனோநிலையும், சாவை எதிர்நோக்கிய சஞ்சலப் புத்தியும் கொண்ட சத்தற்ற வாழ்வுதான் இன்றைய மக்களின் வாழ்க்கை நிலை, வாழ்க்கைத்தரம்.

அமைதி வேண்டி, சாந்திகேட்டு, சமாதானம்கோரி வழிபாடுகள் நடாத்தப்படுகின்றன. பிரார்த்தனைகள் செய்யப்படுகின்றன. ஆனால் அமைதியோ தோன்றவில்லை: சாந்தியோ பிறக்கவில்லை! சமாதானமோ ஏற்படவில்லை. வன்முறையும் பதில் வன்முறையுமாக ஓதுவது தேவாரம் இடிப்பது சிவன் கோயில்என்ற ரீதியில் வாழ்வில் பதட்டமே அதிகரித்துக் கொண்டு செல்கிறது.



அமைதியினது, சாந்தியினது, சமாதானத்தினது மூலகாரணிகளான போர் நிறுத்தம் கோரி பேச்சுவார்த்தைகள் கேட்டு மன்றாட்டங்கள் செய்கின்றோமா? வழிபாடுகள் நடாத்துகின்றோமா? இல்லவே இல்லை. புரிந்தோ, புரியாமலோ மயான அமைதியையே ஒரே நோக்கமாக உள்ளொன்று வைத்து அமைதி, சாந்தி, சமாதானம் எனக் கேட்போர் மனம் குளிர அடிநாக்கில் நஞ்சும் நுனிநாக்கில் அமிர்தமுமாக புறம் ஒன்று பேசுகின்றோம் என்பதனை எவராவது சிந்திப்பதுண்டா?

அமைதி என்பது அன்பால்-அகிம்சையால் ஏற்படுவதே தவிர அபாயகரமான யுத்தங்கள் நீடிப்பதாலோ அன்றேல் அவை தூண்டப்படுதலாலோ என்றுமே ஏற்படாது அதற்குப் பதில் வன்முறைகளும் அவற்றிற்கு ஏற்புடைய குணாதிசயங்களுமே மக்கள் மனதில் வளர்க்கப்படும், விருத்தி செய்யப்படும்.

ஏகாதிபத்தியங்கள் தமது வாழ்வினை நீடிப்பதற்காக அகிலம் முழுமையும் ஆயுத விற்பனைக்காக போட்டி போட்டுக் கொள்கின்றன. பிராந்திய நாடுகளிடையே காணப்படும் முரண்பாடுகளை பகை முரண்பாடாக்கி-போட்டி பூசலை மூட்டி, தேசிய வெறியினை ஊட்டி தமது ஆயுதங்களை மிகலோசாகவே விற்று பல வருடக்கணக்கில் யுத்தங்களை உண்டாக்கித் திளைக்கின்றன.

ஆடைத்தொழிற்சாலை ஆயிரம் கட்டுதலிலும், ஆங்காங்கே அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பலநூறு நடைமுறைப்படுத்துதலிலும் ஆங்கோர் மானிடனின் உயிரைக் காப்பது மேலல்லவா?

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இருதரப்பாரும் தமது இலட்சியங்களைத் தம்மளவில் தக்க வைத்துக் கொண்டே ஆயுதப் பாவனையை அடியோடு நிறுத்தும் போர் நிறுத்தப் பிரகடணம் செய்து அமைதி காணும் விளை நிலத்தைக் காணல் வேண்டும்.

சர்வகட்சி மகாநாடு முதல் பராளுமன்றத் தெரிவுக்குழு ஈறாக நடைபெறும் பேச்சுக்கள் மூலம் ஆட்சிக்காலம் நீளுமே தவிர மக்களின் ஆயுட்காலம் அரைகுறையாவதையே நாம் அன்றாடம் காணும் தலைவிதியாகி விட்டது.

''பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை'' என்ற பொல்லாப்புபோயொழியும் வண்ணம் சத்தியத்தை நம் தலைவர்கள் சாத்தியப்படுத்தும் வகையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்ற விதையை போர் நிறுத்தம் என்ற பூமியிலே தூவேண்டும். போர் நின்று அமைதி - சாந்தி - சமாதானம் விளைவதற்கான பேச்சுவார்த்தைகள் நிலைப்பதற்கும் வெற்றிகரமாகத் தொடர்வதற்கும் ஊக்கமும் உற்சாகமும் உள்ள ஆக்கபூர்வமான ஆதரவு என்னும் நீரை பொறுப்புள்ளோர் அனைவரும் அள்ளி இறைத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''போர் நிறுத்தமே சமாதானத்தின் விளைநிலம்.

''சமாதானப் போச்சுவார்த்தைகளே சமாதானத்திற்கான விதை'' பொறுப்புள்ளோர் அளிக்கும் அனைத்து வகையிலுமான ஆக்க பூர்வமான ஆதரவே நீர், அப்போது தான் சாந்தி - சமாதானம் - அமைதி தாமாகவே விளையும். இறைபக்தி ஓங்கும், வன்முறைகள் முடங்கி அடங்கும்.

எந்த இனம் அழிந்தொழிந்தால் என்ன' வளர்பிறைபோல் வளரவேண்டிய அபிவிருத்தி வேலைகள் அனைத்துமே தேய்பிறை போல் தேய்ந்தொழிந்தாலென்ன அப்பாவி மக்களின் உயிர்கள் எடுக்கப்பட்டு சொத்துச் சுகம் உடமைகள் அனைத்தும் அழிந்தொழிக்கப்பட்டாலென்ன 'மகன்' செத்தாலும் பரவாயில்லை மருமகள் தாலி அறல் வேண்டும்' என்ற மாமியாரின் தோரணையிலே 'தன் மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனம் பிழையாக வேண்டும்' என்ற பாணியிலே தத்தம் குறுகிய சுயநல அன்றேல் பழிவாங்கும் இலட்சியங்கள் நிறைவேறல் வேண்டும் என்ற ஆதங்கத்தினாலே அன்றேல் பாராளுமன்ற ஆசனத்தின் ஆசையாலோ அவதிப்பட்டு தமது கொள்கைகளில் அடிசறுக்கி சிங்கள - தமிழ் தேசிய இனங்களிடையே சீற்றத்தையும் சினத்தையும் ஊட்டி வளர்ப்பதனைக் கும்பல்கள் சில குறிக்கோளாகக் கொண்டுள்ளன.

தேசத்தின் சுதந்திரத்தையும், இறைமையையும் காப்பதற்கு ஒவ்வொரு தனிமனித சமூகமும் இனக்குழுக்களும் அரசியல் கட்சிகளும் - மதபீடங்களும் ஒவ்வொருவருடைய தனித்துவத்தையும் அங்கிகரித்து - ஒவ்வொரு சமூகத்தின்பண்பாட்டையும் ஏற்றுக் கொண்டு எமது நாட்டில் வன்முறை அடங்க - அன்பும் - அமைதியும் சாந்தியும் - சமாதனமும் ஊற்றெடுக்க தத்தம் ஒத்துழைப்பை நல்குவார்களாக!

இந்த நாட்டில் சமாதானத்திற்காக தம்மை அர்ப்பணிக்க எவருமே இல்லையா? சமாதானத்தில் பற்றுக் கொண்டு போரை வெறுப்போம்! !
நிறுத்துவோம்!!!

J. P. சந்தியாப்பிள்ளை

---

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



## சலமோன் அன்டனி

**தாயின் மடியில்;- 23 - 09 - 1965**

**இறைவன் மடியில் - 04 - 12 - 1991**

கள்ளமில்லா உள்ளமடா - அது
கபடமில்லா நெஞ்சமடா
கடற் கன்னியவள்அபகரித்த உன்னுயிர்
கடல் வாழும் வரை வாழுமடா

எங்கள் அன்புத் தெய்வமே - நீங்கள்
எங்களை விட்டு ஒரு வருடம் மறைந்தாலும்
உங்கள் அன்பும் பாசமும் என்றும்
எங்கள் மனதை விட்டு அகலாது.

இவர் பிரிவால் வாடும்,
தாய், தந்தை, சுப்பிரியன் (சகோதரன்)
கலிஸ்டா, அஜந்தா, மேரிகத்தரின்(சகோதரிகள்)
மற்றும்
மாமிமார், மாமாமார், மருமக்கள், டினா, யோஷான், மச்சாள்மார், மச்சான்மார் உற்றார், உறவினர், நண்பர்கள்.

செபஸ்தியார் புரம்,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி. பூரணம் பொன்னையா

**அன்னையின் மடியில் - 1930 - 03 - 02**
**இறைவன் அடியில் - 1992 - 01 - 10**

''உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசங் கொள்பவன் இறப்பினும் வாழ்வான். உயிர்வாழ்கையில் என்னில் விசுவாசங் கொள்பவன் எவனும் ஒரு போதும் சாகான்''
(அரு 11: 25-26)

பூரணம் என்ற நாமம்
புனைந்திட்ட மங்கை நல்லாள்
மாசறுகணவனோடு
மாமுனி பதியில் வாழ்ந்து
பெற்றிட்ட மக்கள் தம்மில்
யோசேப்பைக் குரவராக
மேரியைக் கன்னியாய்த் தங்கத்
துரைதனைப் போதகராய்
மூவரை இறை தொண்டுக்கு
முன்னின்று ஈந்தபின்னர்
பாக்கியம் பெற்ற தாயாய்ப்
பத்தொன்று தொண்ணூற்றிரண்டில்
வாழ்வது போதுமென்று
மண்ணுலகதனை விட்ட
ஓராண்டு நிறைவையொட்டி
ஒழுங்கு செய்துள்ளவாறு
எட்டொன்றும் தினத்தில் தன்னா
முனைதனில் நடாத்தவுள்ள
பலிதனில் பங்குகொள்ள
குரவர் கன்னியர்கள் ஞானச்
சோதரர் போதகர் மற்றும்
அனைவரும் வருகை தந்து
அன்னாருக்காக வேண்ட
மனமது வருந்தும் தந்தை
மக்கள் நாம் அழைக்கின்றோமே

எங்கள் அன்பின் அன்னையாய் குடும்பத்தின் தீபமாய் வந்துதித்த தெய்வமே! எங்கள் அனைவரையும் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தி விட்டு மறைந்த உங்கள் ஆன்மா சாந்தியடைய விண்ணரசில் மகிமையைப் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் துயருறும்**

கணவர் - பொன்னையா
அருள்தந்தை - P. யோசேப் (றோம்)
அருள்செல்வி - P. மேரி T.M.M
போதகர் - P. T. பிரான்சிஸ்
திரு. P. அன்ரனி
திரு. P. ரவி
திரு. P. அல்பிறட்
திருமதி இருதயம் சகாயராஜா
மருமக்கள் - பேரப்பிள்ளைகள்

புண்பற்ற படித்தவனை விட பண்புள்ள பாமரனே சிறந்தவன்.
''யாரோ''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி

**17ம் ஆண்டு**



**திரு. மரியாள் ஜோன் ரெட்ணம்**

மலர்வு:- 25 - 04 - 1896
உதிர்வு:- 05 - 10 - 1975

**3ம் ஆண்டு**



**திருமதி. இருதயமேரி செல்லத்தங்கம் ரெட்ணம்**

மலர்வு:-07 - 04 - 1906
உதிர்வு:-05 - 01 - 1990

மண்ணில் நீவிர் வாழ்ந்த காலம்
மனதை விட்டு அகலாதே
மறைந்தும் நெஞ்சில் மறையா நினைவாய்
என்றும் எம்மில் வாழ்கின்றீர்.
எண்ணில்லாத நன்மை தனையே
செய்தீர் நினைந்தே பார்க்கின்றோம்
கண்ணீர் மல்கிக் கலங்கி நாங்கள்
பிரிவால் நொந்து தவிக்கின்றோம்.
என்னே செய்வோம் இறைவா உன்றன்
சித்தம் என்றே நிற்கின்றோம்
விண்ணில் வாழ்வு தந்தார் என்றே
நன்றி கூறித் துதிக்கின்றோம்.

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக புளியந்தீவு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் 05. 01. 1993 அன்று காலை 6.00 மணிக்கு திருப்பலிப்பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

5, நொத்தாரிஸ் லேன்
மட்டக்களப்பு.

அன்புடன் நினைவுகூரும்
மக்கள், மருமக்கள், பேரப்
பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு விண்ணக வாழ்வின் நினைவு

## திரு. திருமதி. நல்லையா தம்பதிகளும் புதல்வனும்





| | திரு. S. நல்லையா | திருமதி. பூரணம் | செல்வன். ந. ஜோண் |
|---|---|---|---|
| அன்னையின் மடியில் | 13 . 12 . 1908 | 10 . 4 . 1915 | 4 . 2 . 1951 |
| இறைவனின் மடியில் | 29 . 01 . 1990 | 25 . 1 . 1990 | 21 . 9 . 1990 |

இறைஅன்பில் வழிநடந்து நின்று எம்மை
இறைவழியில் நடத்திச் சென்றுவிட்டு
இறைவனடியில் சேர்ந்துவிட்ட எம் அன்பு உள்ளங்களே
இறுதிப் பயணம் வரையும் உங்கள் நினைவில் வாழ்கின்றோம்.

மீளாத் துயரில் வாழும்
அன்பு மகள் தங்கக்கிளி, பிள்ளைகளின் குடும்பங்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

வீச்சுக்கல்முனை
மட்டக்களப்பு.

---

இங்கே வெட்டவும்

# விவிலியப் புதிர் – 40

இயேசுவின் பிறப்போடு ஒட்டிய நிகழ்வுகளிலிருந்து இம்முறை விவிலியப் புதிருக்கான வினாக்கள் விடுக்கப்படுகின்றன. வினாக்கள் குறிப்பிடும் ஆளை - அல்லது பொருளைக் கண்டு பிடித்து எழுதுங்கள்.

1. யூதர்களின் அரசர் எங்கே பிறந்திருக்கின்றார் என்று விசாரித்தவர்கள்
..........................................................................................................
2. ராமாவிலே கேட்ட கூக்குரலை முன்னறிவித்த இறைவாக்கினர்
..........................................................................................................
3. இம்மானுவேல் என்பதன் பொருள்
..........................................................................................................
4. மலடி எனப்பட்ட இவள் மரியாளுக்கு உறவினள்
..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலியப் புதிர் — 38
## விடைகள்

1. தொழுநோய் குணமானது
2. புயலை அடக்கியது
3. குருடர் இருவர் பார்வை பெற்றது
4. இராயப்பர் மாமியார் குணமானது
5. சூம்பிய கை ஓய்வு நாளில் குணமானது
6. இயேசு கடல் மீது நடந்தது.
7. எரிக்கோவில் இரு குருடர்
8. திமிர்வாதம் குணமானது
9. வேலையாள் குணமானது
10. பேய்பிடித்த பையன்

### பரிசு பெறுவோர்

**1ம் பரிசு**

**இக்னேசியா அருளானந்தம்**
சதாசகாய நாயகி பவனம்
நற்பிட்டிமுனை, கல்முனை.

**2ம் பரிசு**

**செல்வி. மேரி இமெல்டா இராஜேந்திரம்**
101/5 கந்த சுவாமி கோயில் வீதி
திருமலை.

### பாராட்டுப் பெறுவோர்

1. **ஜே. அருளப்பு ஆசிரியர்**
   கல்லடி, மட்டக்களப்பு.
2. **யூட்றாகல்**
   பிரதான வீதி ஏறாவூர்.
3. **C. J. ஜெய் ருக்ஷி, லீலா**
   அக்கரைப்பற்று. 8
4. **சி. கார்மினா**
   இருதயபுரம், மூதூர்
5. **புஸ்பா தெரேஸ்,**
   தெரேசாள் மடம், மூதூர்.

---

5. குழந்தையைக் கையிலேந்தி இறைவாக்குரைத்தவர்

..........................................................................

6. கருத்தரிக்கு முன்னே குழந்தைக்குக் குறித்த பெயர்

..........................................................................

7. இவரின் அரியனை இயேசுவுக்குரியது

..........................................................................

8. வயிற்றிலே துள்ளிய குழந்தையின் பெயர் இது

..........................................................................

9. சக்கரியாசின் பாடல் கூறும் மெசியாவின் சிறப்புப் பெயர்

..........................................................................

10. கடவுளின் இருப்பைக் கூறும் சொல் தூதனின் வாழ்த்தில்

..........................................................................

பெயர்: ..........................................................................

முகவரி: ..........................................................................

பரிசு: **100/- 50/-**

முடிவுத் திகதி: **25 - 01 - 93**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒக்டோபர் மாதத் தொண்டனில் இடம் பெற்ற 'நானே உலகின் ஒளி' என்ற சிறுகதை இன்றையக் கிறீஸ்தவர்களுக்கு நல்ல பாடமாக உள்ளது.

**P.C. அன்ரன்**
மட் / கூளாவடி

விவிலியப் புதிருக்கு விடை தேடித் தரும் படி வீட்டில் பிள்ளைகள் ஓயாது தொல்லை இதன் மூலமாவது எல்லோர் கரங்களிலும் விவிலிய வாசிப்புத் தொடரட்டும்.

**I. கீதபொன்கலன்**
திருகோணமலை

செப்டம்பர் தொண்டனில் இடம்பெற்ற 'ஊமை உறவுகள்' சிறுகதை வட - கிழக்கில் நடைபெறும் மர அழிப்பு விழாவுக்கு ஓர் எடுத்துக் காட்டாயுள்ளது.

**A. பயஸ்**
மட்டக்களப்பு

அருட்திரு. றெக்ஸ் அவர்கள் படைத்த டியூசன் - ஒரு கிறிஸ்தவ நோக்கு சிறந்த ஆய்வாகவே அமைந்துள்ளது. பாராட்டுக்கள்! தொண்டன் மேலும் மேலும் புதிய அம்சங்களுடன் வெளிவர வேண்டும்.

**ஜே. அருளப்பு ஆசிரியர்**
மட் / கல்லடி

7ம் மாதத் தொண்டனிலும், 8ம் மாதத் தொண்டனிலும் விவிலியப் புதிர் முடிவுத் திகதி ஒன்றாக இருக்கிறதே ஏன் இந்தக் குழப்பம்?

**கி. லொறின்**
நற்பிட்டிமுனை

தவறுதான், வருந்துகிறோம் - (ஆர்)

'மாணவர் பக்கம்' பாடசாலையில் படிக்கும் மாணவர்களுக்கு உகந்ததாக அமைந்துள்ளது.

**நா. தர்ஷினி**
பாலையூற்று

'அமலா உனக்காக ஜெபிக்கிறேன்' தொடர் கதை பாராட்டுக்குரிய ஓர் படைப்பாகும்.

**F. சுபாஜினி**
திருமலை

இருபத்துமூன்று வயதைக் கடந்து வாலிபனாக இருக்கும் 'தொண்டன்' வயதுக்கு ஏற்ற வளர்ச்சி இல்லாதது பெருங் குறையாகவே உள்ளது. பொருளாதாரச் சுமையா? வாசகர்களா? காரணம் எதுவோ?

**ஸ்ரெலாபாரதி**
மட் / கல்லடி

'மருட்டிடும் இருளை விரட்டிடும் இறைவா' என்ற கவிதை நம் நாட்டில் நிலவும் நிகழ்வுகளை படம் பிடித்துக் காட்டுவதோடு மனதைத் தொடுவதாகவும் அமைந்துள்ளது.

**U. மேர்ஷி ஜெயா**
கொழும்பு - 15

நவம்பர் இதழில் யாழ் - மன்னார் புதிய ஆயர்கள் பற்றிய செய்தி சிறப்பாக இருந்தது.

**C.J.J. றுக்ஷி**
அக்கரைப்பற்று

ஒக்டோபர் தொண்டனில் தொண்டனுக்குத் தொண்டு செய்பவர் பற்றி அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன். பணத்தைக் கையாடாமல், பலனை, புகழை எதிர்பாராமல் செய்யும் சேவை மிகமிகப் பெரியது. இந்தக் கால கட்டத்திலும் தன் முயற்சியைக்கை சோர்ந்து விடாமல் செய்யும் பாங்கை திரு. L.S. அன்ரனி அவர்களிடம் தான் காண முடியும்.

**எஸ். என். இராமநாதன்**
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் கலந்து வரும்

**டிசம்பர் - 1992**

20 — நேரம் மாலை 7. 00 மணி — புதிய உலகம் (கரோல் பாடல்கள்)

22 — நேரம் மாலை 6. 45 மணி — சிறுவர் உலகம்

24 — நேரம் மாலை 10.30 மணி — புதிய உலகம் (நத்தார் திருவிழிப்பு மலர்)

25 — நேரம் காலை 10.00 மணி — புதிய உலகம் (நத்தார் விழா சி. மலர்)

26,27,28 — நேரம் காலை 5.50 மணி — கத்தோலிக்க நற்சிந்தனை

26 — நேரம் காலை 10.45 மணி — புதிய உலகம் (முதல் வேதசாட்சி விழா மலர்)

27 — நேரம் காலை 10.30 மணி — புதிய உலகம் (திருக்குடும்ப விழா சி.மலர்)

28 — நேரம் மாலை 7. 00 மணி — புதிய உலகம் (மாசில்லாக் குழந்தைகள் விழா சி. மலர்

31 — நேரம் மாலை 10. 30மணி — புதிய உலகம் (நன்றி விழா சி. மலர்)

**ஜனவரி - 1993**

01 — நேரம் மாலை 7. 00 மணி — புதிய உலகம் (புத்தாண்டு விழா சி. மலர்)

03 — நேரம் மாலை 7. 00 மணி — புதிய உலகம்

05 — நேரம் மாலை 6. 45 மணி — சிறுவர் உலகம்

9,10,11 — நேரம் காலை 5. 50 மணி — கத்தோலிக்க நற்சிந்தனை

17 — நேரம் மாலை 7. 00 மணி — புதிய உலகம்

19 — நேரம் மாலை 6. 45 மணி — சிறுவர் உலகம்

23,24,25 — நேரம் காலை 5. 50 மணி — கத்தோலிக்க நற்சிந்தனை

31 — நேரம் மாலை 7. 00 மணி — புதிய உலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*From*

# The Finance Co - Ltd.

**65, Central Road,**

**BATTICALOA.**

☎ *065 - 2896.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as News Peper in Sri Lanka.


# மட்டக்களப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

105, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

வாடிக்கையாளர்களே!

சுயசேவை விற்பனை நிலையத்திலிருந்து பொருட்களை
வாங்கி ஊக்குவிக்கின்றீர் இதற்குக் காரணம்,

* குறைந்த விலை,
* தரமான பொருட்கள்,
* பக்கட்டில் அடைந்த பொருட்கள்
* சுமுமான விற்பனைத் தெரிவு

மேலும் உங்கள் ஊக்குவிப்பை எதிர்பார்க்கின்றோம்,
உங்கள் சேவைக்காக.

## "சுய சேவை விற்பனை நிலையம்"
## "SELF SERVICE SALES CENTRE"

மட்டக்களப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

கொழும்பு, விசேட, பயணங்களா!? உங்கள்
பயணங்களை இலகுவாக்க

## "கோப் ரவல்ஸ்"
## "CO-OP TRAVELS"

மட்டக்களப்பு — கொழும்பு
கொழும்பு — மட்டக்களப்பு
ஒருவழிப்பயணம் 80 ரூபாய் மட்டுமே

| மட்டுநகரில்:- | கொழும்பில்:- |
|---|---|
| மட்டக்களப்பு ப.நோ. கூ.சங்கம் | லங்கா ரேடர்ஸ் |
| 105, திருமலை வீதி | 62 U ஒல்கொட் மாவத்தை |
| மட்டக்களப்பு. | கொழும்பு. |

தொலைபேசி அழைப்பு 065 - 2111


இச் சஞ்சிகை மட்டக்களப்பு, புனித செபத்தியார் அச்சகத்தில் அச்சிட்டுத் தொண்டன் ஆசிரியர் குழுவினரால் [illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org